தமிழீழ ஆவணக் காப்பகம்

# எரிமலை

ஆவணி - 1994



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அன்புடன் எரிமலை ஆசிரியருக்கு,

மாதந்தோறும் என் மண்ணின் அவல நிலைகளை எடுத்துக்கூறி, என் போன்றோரின் மனத்தைக் கேளிக்கைகளில் செலுத்தாமல் என்றும் மண்ணின் நினைவுகளோடு அலைமோதச் செய்யும் பெருமை பல சாதனங்களையும், சில ஈழத்தமிழர்களையும் சாரும். அதில் முக்கிய பெருமை "எரிமலை"க்கே. இனிவரும் காலங்களிலும் என் தாயகத்தின் செய்திகளை வெளியிட்டு, என்போன்ற பலரின் மனத்தையும், நினைவுகளையும் திருப்திப்படுத்தி, வரும் காலம் முழுவதும் சிறப்புடன் உங்கள் சேவை தொடர என் வாழ்த்துக்கள். கவிதைகளைத் தேர்ந்து எடுக்கும் விதம் அற்புதம். சிறுவயதிலேயே சுயநலவாதிகளாகி நாட்டைவிட்டு வெளியேறிய என்னைப் போன்றோர் புரிந்துகொள்ளும் வகையில், போராளிகளின் படைப்புகளோடு, புதுவை இரத்தினதுரை, வியாசன், சூரிச் முரளிதரன் போன்றோரது கவிதைகளைத் தொடர்ந்து பிரசுரிக்கவும். வியாசனது கவிதைகள் தொகுப்பாக வெளியிட்டிருப்பின் தயவுசெய்து எனக்குத் தெரிவிக்கவும்.

என்ன காரணமோ, எனக்கு எரிமலை குறைந்தது ஒருமாத காலம் தாமதமாகவே கிடைக்கிறது. (வைகாசி மாத இதழ் ஆனி 8ம் திகதிதான் கிடைத்தது) அதுவரை பொறுக்கும் பொறுமை எனக்கில்லை. தயவுசெய்து சீக்கிரமாகக் கிடைக்க ஏற்பாடு செய்யவும்.

வாழ்க தமிழீழம்!

என்றும் மாவீரர் நினைவுடன் வாழும்

அன்பரசி சிங்கம், கனடா.

அன்பின் எரிமலை ஆசிரியருக்கு!

எரிமலையில் தவறாது புதினம் தேடுபவனில் நானும் ஒருவன். அண்மைக் காலமாக எரிமலையை விரித்துப் பார்ப்பதில் எனது வேகம் குறைந்திருப்பதை நானே அறிகிறேன். எல்லாவற்றையும் எல்லோரும் வாசிப்பதில்லைத்தானே. கடந்த சில வெளியீடுகளில் தரமான சில ஆக்கங்கள் வந்திருந்தும் நாட்டைப்பற்றிய, போராட்ட முன்னேற்றங்கள் பற்றிய, மக்களின் போர்க்கால வாழ்க்கை பற்றியவற்றிற்கு முதலிடம் கொடுத்து வாசித்துப் பழகிய என் போன்றவர்களுக்குக் கடந்த சில வெளியீடுகள் ஆர்வத்தைக் குறைக்க முற்படுபவையாகவே தென்படுகிறது.

'களத்தில்', 'எரிமலை' இவை இரண்டையும் படிப்பவர்கள் வித்தியாசமானவர்கள். பல்லாயிரக்கணக்கான மைல்கள் தூரம் தள்ளியிருந்தும் தமது நாடு, மக்கள் பற்றிச் சிந்திக்கிறவர்கள். இனிவரும் காலங்களில் சிறந்த தரமான இதழ்களை விரிக்க விரும்புகிறேன்.

என். ஜெயந்தன்

இங்கிலாந்து.



# அக்கறைப்பூக்கள்

## இலட்சியம்

சுகங்களைச் சுமக்க வேண்டிய
இனிய இளம் பருவத்திலே
சுமைகளைச் சுமந்துகொண்டு
உறுதியாகக் கால்களைப்
பதித்துக்கொண்டு
உயரிய உன்னத இலட்சியத்திற்காக
வீறுநடை போடுகின்றார்கள்.

அன்புடன்

இ. இ. மோகன், சுவிஸ்.

மதிப்பிற்குரிய ஆசிரியருக்கு,

வணக்கம்.

பெருமுயற்சியின் பின் தற்செயலாக நான் "எரிமலை" இதழைப் படிக்க நேர்ந்தது. தமிழ் ஈழத்தில் நடைபெறும் செய்திகளை மிக விரிவாகவும், விளக்கமாகவும் வெளியிட்டுள்ளீர்கள். நன்றி. 'எரிமலை' இதழை நண்பர்களுக்கு படிக்கக் கொடுத்தபோது, அவர்கள் ஈழத்தில் இப்படியெல்லாம் நடைபெறுகிறதா என்று ஆச்சரியம் அடைகிறார்கள். எங்கள் கல்லூரி மாணவர்கள் எரிமலை இதழைப் பெற ஆவலாய் உள்ளார்கள். அதற்கான ஒழுங்குகளைச் செய்யவும்.

நன்றி

சிவகுமார், தமிழ்நாடு.

அன்புடன் வாசகர்களுக்கு!

சென்றமாத ஆடி இதழில் புதுவை தமிழ்நெஞ்சன் அவர்களின் கடிதம் 'அக்கறைப் பூக்கள்' பகுதியில் பிரசுரமாகியிருந்தது. "தமிழே முதன்மொழி" என்று அமையவேண்டிய அவ்வாக்கியம் "தமிழீழமே முதன் மொழி" என்று தவறுதலாக அச்சிடப்பட்டிருந்தது. நீங்கள் திருத்தி வாசித்திருப்பீர்கள்; இருந்தும் அத் தவறைச் சுட்டிக்காட்டியுள்ளோம். அவரது கடிதத்தில் மீண்டும் ஏற்பட்ட தவறுக்கு வருந்துகிறோம்.

சென்ற ஆடி இதழில் 36ம் பக்கத்தில் வந்திருக்கவேண்டிய "இன்னும் அதே" என்ற சிறுகதைக்குக் கீறப்பட்டிருந்த ஓவியம் தவறுதலாகப் பின்அட்டையில் பிரசுரமாகியிருந்தது. அவ் ஓவியத்தை நன்கு விளங்கிக் கொண்டு புதிய கவிதை புனையுங்கள். இதனால் ஏற்பட இருக்கும் காலதாமதத்தை ஒரு பிரச்சினையாகக் கொள்ளாது செயலில் இறங்குங்கள். நல்ல கவிதை வருமெனக் காத்திருக்கிறோம்.

36ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்த மகாவின் ஓவியம் ஐரோப்பிய வாழ்வின் அவலங்களைத் தொட்டு நிற்பது. புலம்பெயர் வாழ்வின் துயரியலைக் கோடிடுவது. துன்பமாய்க் கழிகின்ற வாழ்வின் ஒரு அங்கமாய் நிற்கின்ற பெண். அவள் கற்பமாக இருக்கின்றாள். அவள் வயிற்றில் வளர்கின்ற குழந்தையின் எதிர்காலம் பற்றிப் பல புதிய புதிய உறவுக் கேள்விகள் அடையாளக் கொடிகளால் தொடுபட்டுக் கிடக்கிறன. இவ் ஓவியம் தருகிற கருத்தின் பொருளை நன்கு ஆய்ந்து உணர்ந்து கொள்ளவும். மேலும் அறிந்து கொள்ள விரும்பும் வாசகர்கள் இது குறித்து எம்மோடு கருத்துப் பரிமாறல்களை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

தங்களிடமிருந்து அக்குவேறு ஆணிவேறாகச் செய்யப்படும் விமர்சனக் கடிதங்களின் வருகை அதிகரித்து வருகிறது. ஆக்கபூர்வமான விமர்சனம் வளர்கிறது. உங்களின் வாசிப்புத் திறன் வளர்வதன் மூலம் நீங்களும் மெல்லமெல்ல வளர்வதைக் காணலாம். தொடர்ந்து கருத்துப் பரிமாறல்களை மேற்கொள்ளுங்கள். உங்களில் புகைப்பட கலைஞர்களாக இருப்பவர்கள் புலம்பெயர் வாழ்வினைப் புகைப்படக் கவிதைகளாய் வடிக்கலாம். இவ்வாறு ஒவ்வொரு துறைகளிலும் அடியெடுத்து நிற்கும் அனைவரும் எம்மோடு அரிய புதிய உறவுகளை ஏற்படுத்துங்கள். சிறுகதை எழுத்தாளர்கள், ஓவியர்கள், கவிஞர்கள், நாடகக் கலைஞர்கள், விமர்சகர்கள் மற்றும் பல்துறை சார்ந்தவர்கள் அனைவரும் எம்மோடு கடிதம் மூலமாகவோ, தொலைபேசி மூலமாகவோ, நேரடியாகவோ தொடர்பு கொள்வதை நாம் விரும்பி வரவேற்கிறோம். எமது தேசத்தின் துயர் வாழ்வை வெல்ல நாங்களும் ஒரு பெரும் பலமாகுவோம்.

- ஆசிரியர் குழு -

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# எரிமலை

கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

பதின்மூன்றாம் ஆண்டு
ஆவணி 1994

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

எரிமலை
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrénées,
75020 Paris.
Tel: 43 58 11 42

## சுதந்திர தமிழீழத்தில்தான் ஜனநாயகம் தளைக்கும்

யூலை இனப்படுகொலை நடந்து பத்து வருடங்களுக்கு மேலாகிவிட்டன. இன்னும் அது எதிரொலித்துக்கொண்டிருக்கிறது. காயங்கள் ஆறவில்லை; ஆழமாக்கப்பட்டுள்ளன. இப் பேரினவாதப் பேயாட்டம் இன்னொருமுறை இடம்பெறலாம். ஆனால் தற்போது இல்லை. தமிழீழம் தனியாகப் பிரியும் உச்சநிலை வரும்போது ஏற்படலாம். இத்தகைய மிரட்டல்கள், சிங்கள அரசியல்வாதிகளினால் இடையிடை மேற்கொள்ளப்பட்டவை மாத்திரமல்ல; ஐ.நா.சபை மனித உரிமை ஆணைக்குழு அமர்வொன்றின் போதும் அறிக்கையாக வாசிக்கப்பட்டு, ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. ருவன்டாவில் நடைபெறும் இனப்படுகொலை நல்லதொரு அண்மைக்கால உதாரணம். தமிழர்கள் சிங்கள மக்களோடு அன்னியோன்னியமாக வாழ்கிறார்கள்; துப்பரவு செய்து விடுவிக்கப்பட்ட பகுதிகளை நோக்கி தமிழ் மக்கள் நகர்கிறார்கள்; தமிழர்களில் மூன்றிலொரு பகுதியினர் சிங்களப் பகுதிகளில் வாழ்கிறார்கள்; அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில்தான் ஜனநாயகம் செழித்தோங்குகின்றது போன்ற அரச பிரச்சாரங்கள் ஏமாற்றுத் தன்மை கொண்டவை; மாயமானவை. சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிய பதுங்கலே ஒழிய, நிஜமான அமைதி அல்ல. ருட்சி சிறுபான்மை மக்கள் மீது ஹூட்டு பெரும்பான்மை ருவன்டாவில் மேற்கொண்ட இனப்படுகொலையில் ருட்சி இன மக்களின் அரைவாசிப் பேர், கிட்டத்தட்ட 5 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். ருட்சி மக்களின் விடுதலை இயக்கமொன்றின், தலைநகர் மீதான வெற்றிகரமான படையெடுப்பைத் தொடர்ந்தே இப்படுகொலைகள் நடத்திமுடிக்கப்பட்டன. தமிழீழப் போர் சிறீலங்காவின் தலைநகருக்கு விஸ்தரிக்கப்படவேண்டிய தேவையில்லை. அதேவேளை, 1983ல் விட்ட மாபெரும் தவற்றை, சிங்களதேசம் மீண்டும் செய்யாது என்றே எதிர்பார்க்கிறோம். அரசியல் பிரிவினைக்கு வழிவகுத்ததாக 1983 இனப்படுகொலை நடைபெற்றது. இன்னொரு இனப்படுகொலை பொருளாதாரப் பிரிவினைக்கும் காலாய் அமைந்துவிடும். அரசியல் இணைப்பு (Political Union) மாத்திரமல்ல; பொருளாதார இணைப்பும் (Economic Union).இதனைச் சிங்கள மக்களும், அவர்களின் அரசியல் தலைவர்களும் நன்குணர்ந்திருப்பார்கள் என்ற நம்பிக்கையிலேயே, சிங்கள தேசத்தை ஹூட்டு மக்களோடு இனிமேல் ஒப்பிடமுடியாது என்று கூறுகிறோம்.

சிறீலங்கா பாராளுமன்றத்துக்கான தேர்தலை, வடக்கு, கிழக்கிலும் அரங்கேற்றும் கேலிக்கூத்தொன்று நடைபெற உள்ளது. இதற்காக தமிழ் குழுக்களைச் சேர்ந்த சகல கோமாளிகளும் தயாராகிவிட்டனர். முன்பு இவர்கள் தம்மைப் போராளிகள் என்று கூறிக்கொண்டனர். "புலிகளிடமிருந்து விடுவிக்கப்பட்ட பகுதிகளில் ஜனநாயகம் தளைத்தோங்குகின்றது" என்று காட்டும் அரச முயற்சிக்கு சாட்சியமாக இவர்கள் கிளம்பிவிட்டனர். சிறீலங்கா பாராளுமன்றத்தினால் தமிழ் மக்களுக்கோ, இனப்பிரச்சினை தீர்வுக்கோ எவ்வித பயனும் இல்லையென்று கூறியவாறே இவர்கள் களத்தில் குதித்துள்ளனர். எலும்புத் துண்டுகளுக்கான நாய்களின் அடிபாடுதான். யாழ். குடாநாட்டில், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சுதந்திரமான, நீதியான தேர்தல் நடைபெறாது எனவும், அதனைத் தடைசெய்யுமாறும் நீதிமன்றத்தில் வழக்குப் போட்டவாறே ஒரு சாரார் தேர்தலில் இறங்கியுள்ளனர். இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகள் ஜனநாயகத் தேர்தலுக்கு உகந்த பகுதிகள் என்பதே இவர்களது வாதமாய் இருக்கவேண்டும். இவர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் மக்களோடு இருக்கவும் இல்லை; இந்திய ஆக்கிரமிப்பில் நடைபெற்ற கடந்த பாராளுமன்றத் தேர்தலில் மக்களால் தூக்கியெறியப்பட்ட சொரணையும் இவர்களுக்கு இல்லை.

யுத்த பூமியில், போர்ச் சூழலில், பொருளாதாரத் தடைகொண்டு முற்றுகையிடப்பட்ட பகுதியில் பூரண ஜனநாயகம் இருக்கவேண்டும் என்று சிலர் எண்ணுகிறார்கள். போராட்டத்தை அழிவின் விழிம்புக்கு இட்டுச் செல்லாதவாறு, தேசிய விடுதலையைக் குழிதோண்டிப் புதைக்காதவாறு, குழப்பநிலையை (anarchy) தோற்றுவிக்காதவாறு, தமிழீழத்தில் ஜனநாயகம் பேணப்படுகின்றது என்று சொல்வதை விட, மக்கள் ஜனநாயகம் வளர்த்தெடுக்கப்படுகின்றது என்பதே உண்மையாகும்.

சீதனம் என்பது ஒரு தீய நடைமுறை என்று நன்கு அறிந்தும் கூட, அதனை எடுத்த எடுப்பில், சர்வாதிகாரப் போக்கில் நடைமுறைப்படுத்த முனையவில்லை. மக்கள் அபிப்பிராயங்களைப் பல்வேறு வழிகளில் திரட்டி, ஆய்வுசெய்து பெரும்பான்மை மக்களின் அபிப்பிராய வெளிப்பாடகவே சீதன ஒழிப்பை நடைமுறைப்படுத்த விடுதலைப் புலிகள் முன்வந்துள்ளனர்.

பல கட்சி ஜனநாயகம், தேர்தல், சட்ட ஆட்சி, கருத்துச் சுதந்திரம் உட்பட்ட அடிப்படைச் சுதந்திரங்கள் என்பவை சுதந்திரத் தமிழீழத்தில் முழுமையாகப் பேணப்படும் என்பது குறித்து எவரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. சிறீலங்கா பாராளுமன்றத்துக்கான தேர்தல் குறித்து கருத்துத் தெரிவிக்கையில், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் "இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் வரை, வடக்குக் கிழக்கில் தேர்தல் நடத்தப்படுவதை அனுமதிக்கமுடியாது" என்ற கூற்று இதனையே புலப்படுத்துகின்றது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# சீதன அரக்கனுடன் ஒரு சொற்போர்!

குடும்பங்களிடமிருந்து அவற்றின் பெண்பிள்ளைகளுக்கு இயல்பாகவே போய்சேரவேண்டிய சொத்துப் பரிமாற்றம் இங்கே, பெண்களின் திருமண வாழ்வையே தீர்மானிக்கும் ஒரு பேரப்பொருளாக மாற்றப்பட்டு, பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறை வடிவமாக கீழ்மைப்படுத்தப்பட்டுவிட்டது.

சீதனம் என்ற பெயரில் நடைபெறும் இந்தச் சமூக அநீதிக்கு எதிராக சொற்போர் தொடுத்து, மக்கள் மத்தியில் ஒரு கருத்துப் புரட்சியைத் தோற்றுவிக்க புலிகள் இயக்கம் பாடுபடுகின்றது.

தமிழீழத்தில் சொத்துரிமையானது தாய்வழிச் சொத்துரிமையென்ற மரபிற்கிணங்க பெண்வழி மூலமே கைமாற்றப்பட்டு வருவது, எமது இனத்தின் ஒரு சிறப்பு. இது தமிழீழப் பெண்களுக்கு ஒரு பெரிய பலம். எமது பண்பாட்டின் ஒரு நல்ல அம்சம். இந்தியாவிலோ அல்லது மேலை நாடுகளிலோ இந்தச் சிறப்புரிமைகளைப் பெண்கள் கொண்டிருக்கவில்லை. இப்போதுதான் நீண்ட போராட்டங்களின் பின், அங்கெல்லாம் பெண்கள் சொத்துரிமைக்கு உரித்துடையவர்கள் எனப் புதிய சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. ஆனால் தமிழீழ சமுதாயத்தில் சொத்துரிமையானது பெண்களுக்கே உரித்தான சிறப்புரிமையாக, நீண்ட காலமாகவே இருந்துவருகின்றது. ஆனால் அந்த சிறப்புரிமை மீது ஒரு ஆண்- அது கணவனோ, தந்தையோ, சகோதரனோ- தனது செல்வாக்கை திணித்து வைத்திருப்பதையும் ஆணுலகம் மனச்சாட்சிப்படியாவது ஏற்றுக்கொள்ளவேண்டும்.

புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரை தமிழீழப் பெண்களுக்கிருக்கும் இந்தச் சிறப்புரிமையைப் பாதுகாக்கவேண்டும் என்பதில், அது உறுதியாக இருக்கின்றது.

ஆனால் ஒரு பெண்ணுக்குத் திருமணம் என்று வரும்போது இந்தச் சொத்தோ அல்லது பணமோ- பொருளோ அவளுடைய திருமண வாழ்வைத் தீர்மானிக்கும் நிர்ணய சக்தியாக மாறுவதைப் பெண்களுக்கெதிரான ஒரு கொடூரமான ஒடுக்குமுறையாகவே நாம் பார்க்கின்றோம். ஆண் மேலாதிக்கச் சிந்தனை பெற்றெடுத்த இந்தச் சமூக அநீதி நிச்சயம் ஒழிக்கப்படவேண்டும். அப்போதுதான் ஆண்-பெண்களுக்கிடையே சம அந்தஸ்தும், சமத்துவமான வாழ்வும் ஏற்பட வாய்ப்பேற்படும். அதாவது பணத்துக்கும் சொத்துக்கும் அப்பால் திருமண வாழ்வு தீர்மானிக்கப்படவேண்டும். திருமண உறவுகளின் அத்திவாரம் ஆண்-பெண், புரிந்துணர்வில்- அன்புறவில் இடப்பட்டிருக்கவேண்டும்; பணத்திலும் சொத்திலுமல்ல.

> குடும்பங்களிடமிருந்து அவற்றின் பெண்பிள்ளைகளுக்கு இயல்பாகவே போய்சேரவேண்டிய சொத்துப் பரிமாற்றம் இங்கே, பெண்களின் திருமண வாழ்வையே தீர்மானிக்கும் ஒரு பேரப்பொருளாக மாற்றப்பட்டு, பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறை வடிவமாக கீழ்மைப்படுத்தப்பட்டு விட்டது.

சீதனக்கொடுமை எமது சமூகத்தில் ஊறிப்போய்விட்ட ஒரு சமூக அநீதி என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வர்.

'இவ்வளவு சொத்தும்', 'இவ்வளவு பணமும்', 'இவ்வளவு பொருளும்' இருந்தால்தான் இந்தத் திருமணத்திற்கு சம்மதம் தெரிவிப்போம் என்று ஆண்வீட்டார் வற்புறுத்திக் கேட்பது ஒரு அநாகரிகம்; ஒரு அசிங்கமான பேரம். இது பெண்மையை இழிவுபடுத்தும் ஒரு சித்தாந்தம்.

வீரமும்- தியாகமும் தேசப்பற்றும் கொண்டு, மானுட வாழ்வின் அதிஉயர் சிகரமாகிய விடுதலையைத் தொடமுயலும் எமது இனத்தின் இத்தகைய ஒரு அவமானச் சின்னத்திற்கு நாம் இனியும் இடம்கொடுக்கலாமா? கூடாது.

சீதனத்திற்கு எதிரான பிரச்சாரம் என்றவுடன் சிலர் அதை ஜீரணிக்கத் தயங்குகின்றனர். அதாவது இயல்பான சொத்து மாற்றத்தை சீதனத்துடன் போட்டுக் குழப்பி, தாமும் குழப்பமடைகின்றனர்.

வற்புறுத்தலோ நிர்ப்பந்தமோ ஏதுமில்லாமல், தமிழீழ தேசவழமைச் சட்டத்தின்படி பெற்றோர் தமது சொத்துக்களைப் பெண்பிள்ளைகளுக்கு மாற்றுவதை நாம் எதிர்க்கவில்லை. இந்தச் சொத்து மாற்றத்திற்கும் எந்தவித சம்பந்தமுமில்லை. ஆனால், சீதனம் என்ற பெயரில் பொருளோ, சொத்தோ, பணமோ பெண்வீட்டாரிடமிருந்து நேரடியாகவோ- மறைமுகமாகவோ வற்புறுத்திப் பெறுவதையே நாம் எதிர்க்கின்றோம். அதற்கெதிராகவே சொற்போர் தொடுத்துள்ளோம்.

இந்தக் கட்டாயச் சீதனத்தால் பெண்கள் உளரீதியான பாதிப்புக்களையும் திருமண வாழ்வில் பல சிக்கல்களையும் எதிர்கொள்கின்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



னர். பல்லாயிரம் பெண்கள் திருமண வாழ்வில் நுழையமுடியாது தடுக்கப்பட்டும் உள்ளனர். அதே வேளை இந்த நடைமுறையால் பெண்களின் தந்தைமார், சகோதரர்கள் என்றவகையில் ஆண்களும் பல்வகைப் பாதிப்புக்களுக்கு உள்ளாகின்றனர்.

அப்படியாயின் ஏன் இன்னமும் எமது சமூகம் இந்தப் பிற்போக்கான- எல்லோரையும் வருத்துகின்ற- மரபை விடாப்பிடியாகப் பின்பற்றி நிற்கின்றது.

மிகப் பெரும்பாலான மக்கள் இந்த சமூக அநீதியை விரும்பவில்லை; விரும்பாமலே இந்த மரபைக் கடைப்பிடிக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். அதாவது கட்டாயம் கடைப்பிடிக்கவேண்டியஒரு சமூக விதியாக சீதனத்தைப் பலர் நோக்குகின்றனர். சிலர் இதை ஒரு சமூக அந்தஸ்தாகவும் கருதுகின்றனர். இதனாலேயே இந்த அநாகரிமான வழக்கத்தை- மரபை- மக்கள் தொடர்ந்தும் கடைப்பிடிக்க முயல்கின்றனர்.

இந்தச் சீதன வழக்கத்துக்கு எதிராக, விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் இப்போது பிரச்சாரப் போரைத் தொடுத்திருக்கின்றார்கள்; பல்வேறு இடங்களுக்கும் சென்று, மக்களின் பல்வேறு பகுதியினருடனும் கலந்துரையாடி- அவர்கள் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பெற்று வருகின்றனர். இந்த நல்ல நோக்கத்தை உணர்ந்தபடி மக்கள் இதற்கு ஒத்துழைப்பும்- பங்களிப்பும் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

பிறக்கப்போகும் தமிழீழ புதிய சமுதாயம் ஆண்- பெண் சமத்துவம் நிறைந்ததாக, மகிழ்ச்சியான குடும்ப வாழ்வைக் கொண்டதாக, மானிடத்தின் உயர் விழுமியங்களைக் கடைப்பிடிப்பதாக அமையவேண்டும் என்பதே எமது குறிக்கோள்.

நன்றி:
(விடுதலைப் புலிகள், வைகாசி-1994)

# தலைமை பற்றிய ஒரு சமூக-உளவியல் பார்வை

சமூக உளவியலின்படி தலைமை இரு வகைப்படும். ஒன்று முறைசார் (Formal) தலைமை, மற்றையது உண்மைத் தலைமை (Real Leadership)

## முறைசார் தலைமை (Formal Leadership)

நிறுவனப்பட்ட சமூக நிலைமைகளில் முறைசார் தலைமையைக் காணலாம். நிறுவனப்பட்ட நிலைமையில் சமூக வாழ்க்கை கூட்டுத் தேவைகளைச் சுற்றி அமைக்கப்படுகிறது. உறுப்பினர் சில செயல்களைச் செய்யவும், சில சமூக நிலைமைக்குட்படவும் வேண்டும். எடுத்துக்காட்டாக, எமது பண்பாட்டிலுள்ள சில சடங்குகளைக் காணலாம். பெயரிடல், பிறந்தநாள் நிகழ்ச்சிகள், திருமணம், ஈமச் சடங்குகள் முதலிய பல சடங்குகள் உள்ளன. இவற்றில் தனியான குறிப்பிட்ட நிலைகளுக்குள் உட்படவேண்டியிருக்கிறது. இம்முறைகள் அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டவையல்ல. இந்த அதிகாரம் அவர்களுடைய பதவியால் ஏற்படுகிறதேயன்றி, அவர்களுடைய திறமையால் அன்று. சமயகுரு, தந்தை, மாமன்... இத்தியாதியோர் நிறுவனத் தலைவர் என்ற முறையில் ஒரு சடங்கை நடத்துகிறார்கள். ஆனால் அவர்களுக்கு அதைப்பற்றி புதிது புனையும் சுதந்திரம் கிடையாது. இத்தகைய தலைவரே முறைசார் தலைவர் ஆவார். முறைசார் தலைமையில் மேலாண்மை செலுத்தவும் மனமாற்றம் ஏற்படுத்தவும் முயற்சி தோன்றுவதில்லை. முறைசார் தலைவர் வெறும் தலை மனிதரே (Head man) ஆவார். அவர் என்னென்ன செய்யவேண்டும் என்பது மரபு வழக்கு மூலம் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ளது. அரசியற் சட்டப்படி அமைந்த மன்னரும் பாடத்திட்டத்தையும், முறையையும் மாற்றியமைக்க உரிமையில்லாத பள்ளி ஆசிரியரும் இத்தகைய முறைசார் அல்லது பெயரளவுத் தலைவரேயாகும். அவர்கள் தாம் செய்யும் வேலையில் ஓரளவு சொந்தத் திறமை காட்டக்கூடும். ஆனாலும் அவர்கள் ஏற்கனவே அமைக்கப்பட்ட நிறுவன வரம்புக்குள்ளேயே செயற்படுவர்.

## உண்மைத் தலைமை (Real Leadership)

ஒருவர் பிறர்மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு, காரியங்களைத் தாமாகத் திட்டமிடுவதற்கு, பிறருடைய ஒத்துழைப்பைப் பெறுவதற்கு உண்மைத் தலைமை அல்லது ஆளுடைத் (Personal) தலைமை தேவைப்படுகிறது. ஒரு குழு ஒரு கடமையைச் செய்யவேண்டியிருக்கும் போது இத்தகைய தலைமை தோன்றுகிறது. உறுப்பினருடைய சக்திகளை வழிப்படுத்தவும், ஒத்துச் செயல்புரியத் தூண்டவும் ஒருவருடைய துணை தேவையாகிறது. இவ்வாறே புதுப்புனைவுகள் ஏற்படுவதாலும் சமூகத்தின் பொருளாதார அமைப்பு மாறுவதாலும் மரபு வழிவந்த சமூகத் தொடர்புகளை மாற்றி அமைக்க வேண்டியிருக்கிறது. இந்த நிலைமையிலும் உண்மைத் தலைமை தேவைப்படுகின்றது. மக்களின் அற உணர்ச்சி பெருகி, வாழ்க்கைக்குரிய புதிய, உயரிய விழுமியங்களைக் காண்பதற்கும் இத்தகைய தலைவர்கள் தேவையாகின்றனர். இத்தகைய காலங்களில் கூரிய எண்ணங்களும் தெளிவான பார்வையும், உய்த்துணர்வும், தான் தொடங்காற்றலும் உள்ள தனியாட்கள் தலைமை தாங்குகிறார்கள். உண்மைத் தலைவர்கள் தோற்றம் பெறுகிறார்கள்.

(வி.வி. அகோல்கார் அவர்களின் சமூக உளவியல் என்னும் நூலைத் தழுவியது)
நன்றி: சாளரம் (தை 1992)

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# ஊமைநிலவும் உப்பளக்காற்றும் உன்னை அறியும்

- புதுவை இரத்தினதுரை -



ஆனையிறவும்
வெற்றிலைக் கேணியும்
அடுத்தடுத்திருந்த காவலரண்களும்
ஊமைநிலவும் உப்பளக்காற்றும்
உன்னை அறியும்.
களத்தில் நீ புலியாக மட்டுமல்ல
புயலாகவும் நின்றாய்
நீ போராடியதை நான் பார்க்கவில்லை
"வோக்கிடோக்கி"யில்
உன் குரலைக் கேட்டேன்
பிறந்த பலனை என் செவிகள் பெற்றன.
நீயும் உன் தோழர்களும் புகும் வரை
எதிரி பாடிக்கொண்டு தான் இருந்தான்
இப்பொழுது ஓடிக்கொண்டிருக்கிறான்
ஈராக் மீது தொடுத்த போரில்
சவூதியில் நின்று படைகள் நடத்திய
அமெரிக்கத் தளபதி யாரெனக் கேட்டால்.....
உலகம் அவனின் பெயரைச் சொல்லும்.
ஆனையிறவு உப்பள முகாமின்
உள்ளே புகுந்த புலிகளின் பெயரை
சொல்லுக என்றால்,
எத்தனை பேர்கள் எடுத்துரைப்பார்கள்?
பரவாயில்லை.
பேர்வரும் என்றா புலிகள் விழுந்தனர்?
இல்லையே,
ஆனையிறவும்
வெற்றிலைக்கேணியும்
அடுத்தடுத் திருந்த காவலரண்களும்
ஊமைநிலவும் உப்பளக் காற்றும்
உன்னை அறியும்!

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# விபுலானந்தரை

## நினைவு கூர்வோம்



**சிறந்த கல்விமானாகிய இவர் தான் கற்ற கல்வியை தனது சொந்த சமூக அந்தஸ்தை உயர்த்திக் கொள்ளவும், சமூகத்தில் நின்று மிக மேலே சென்று எட்டாத இடத்தில் இடம்பிடித்துக்கொள்ளவும் பயன்படுத் திக்கொள்ளவில்லை. தேச எல்லைக ளைக் கடந்து தமிழரின் கல்வி வளர்ச்சிக்காக அயராது உழைத்தார். பழமையைப் பாதுகாக்கும் தூணாக விளங்கவில்லை. பாரம்பரிய பண்பாடு களை முற்றாகத் தூக்கியெறியும் பரதேசிப் புதுமைவாதியாகவும் இருக்கவில்லை. பழமையையும் புதுமையையும் இணைப்பதில் அறிவி யல் முறையில் செயற்பட்டார். இத் துறையில் பல வெற்றிகளைம் ஈட்டி னார். 20ம் நூற்றாண்டின் ஆரம்பகால கல்விமான்களில் இருந்து இவர் பலவகைகளில் வேறுபட்டவராகும். இவரின் நூற்றாண்டு நினைவையொட்டி 'சாளரம்' மாதஇதழ் வெளியிட்டிருந்த நினைவுக்கட்டுரையொன்றை இங்கே மறுபிரசுரம் செய்கின்றோம்.**

இன்றைய தமிழன் எது செய்ய வேண்டும்?

இன்றைய தமிழன் எனப்படு பவன் யாவன்? உலக நாகரீகத்தின் உச்சியாக ஐரோப்பிய நாகரீகம் வளர்ந்து நிற்க, ஏற்கனவே வளர்ந்தி ருந்த தமிழனின் நாகரீகமோ கூனிக்குறுகி உலகில் ஒரு மூலையில் நிற்கும் காலகட்டத்தில் வாழும் தமிழனையே இன்றைய தமிழன் என்று கருதினோம். உயர்திரு விபுலானந்தரும் இதனையே கருதி னார். அவர் வாழந்த காலத்தில் ஆசிய நாகரீகத்தின் ஒரு பகுதியான சீன, ஜப்பானிய நாகரீகங்கள் மிகப் பின்தங்கி இருந்தன என்பதை இங்கு குறிப்பிடுதல் நலம்.

அவர் காலத்தில் கூடலம்பதி யில் கூட்டப்பட்ட முத்தமிழ் விழா தலைமைப் பேருரையில் இன்றைய தமிழன் எது செய்யவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினார். அவர் கூறினார்,

"காலவோட்டம் விரைந்து ஒடுகின்றது. தமிழர் பழங்காலத்துச் சிறப்பினை மாத்திரம் பறையறைந்து கொண்டிருப்பாரெனின், நிகழ்காலத் தையும், வருங்காலத்தையும் முற்றி லும் இழந்த நீர்மையராதலுங் (தன்மையில்லாதலும்) கூடும். சென்ற நூற்றாண்டிலே ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் விஞ்ஞான நூல் விருத்தியடைந்து விளங்குகிறது. அந்த அறிவுச் செல்வத்தை தமிழ் மொழி பெறுவதற்கு ஆவன செய் தல் சிறந்த தமிழத் தொண்டாகும்."

இலண்டன் மாநகரில் உள்ள வேத்தவை (Royal Society) என்னும் அறிஞர் அவை கணித நூலினும், (அறிவு) விஞ்ஞான நூலினும் பெரும் புலமைபடைத்த திரு. ராமானுஜம், திரு. சி.வி. ராமன், திரு. கிருஷ்ணன் ஆகியோரது புலமையைப் பாராட் டியது. இவர்கள் தமிழ்நாட்டில் பிறந்து தமிழ்நாட்டுக் கலைக்கழகங் களிலே கல்வி பயின்றவர்களாகும். "இச்செய்தி கேட்டு நாமெல்லாம் பெருமகிழ்வடைந்தோம். கணித விஞ்ஞான அறிவு நிரம்பிப் பூவுலகத் துப் பேரறிஞர் குழுவிலே, தலைய ணியிலிருக்கும் ஆற்றல் தமிழனுக்கு உண்டு என்பதை அறிந்துகொண் டோம்." என அவர் ஆற்றிய உரை எதைக் காட்டுகிறது? அவரே கூறுகிறார்.

"பண்டைநாளில் நமது முன் னோர் சிறப்புற்றிருந்தார் என்று வாளா புராணம் பாடிக்கொண் டிருப்பதனால் உறுபயன் யாதோ அறியோம். அயனாட்டாரோடு கொள்வனவுங் கொடுப்பனவுஞ் செய்யாதொழியிற் செல்வம் நிலை பெறாது. உயிர்க்குறுதி பயக்கும் உண்மை நூல்கள் நம்மிடத்து ஏராளமாகவுள்ளன. உடற்குறுதி பயக்கும் நூல்கள் அவரிடத்திலுள் ளன. நமது உண்மை நூல்களை நாம் கொடுப்பதற்கு முன்னரே அவற்றின் சிறப்பை உணர்ந்து மேநாட்டார் தாமாகவே எடுத்துக் கொண்டனர். அவர் பன்னாள் வருந்திச் செய்த அரிய ஆராய்ச் சியின் பயனாகத் திரட்டிவைத் திருக்கிற எண்ணிறந்தனவாகிய கணிதநூல், வான்நூல், ஒளிநூல், ஒலிநூல், மின்னியல்நூல், அனல் நூல், உடல்நூல், மனநூல், சீவநூல், பொருடன்மை நூல், இரசாயனநூல், உலகசரித்திரம், பூகோள விவரணம், சிற்பநூல், வர்த்தகநூல் ஆகியனவற் றில் ஒன்றையேனும் தமிழ்ப்படுத்த வில்லை. என்னே, நம்மேதமையிருந்த வாறு ....."

பிற நாட்டுக் கலைகளை தமிழ்ப்படுத்தல் மட்டும் தமிழனின் இன்றைய கடமையென்று அவர் கூறவில்லை. தமிழன் புறப்பொருள் பற்றிய அறிவு எதுவுமே இல்லாத வன் என்பதுவும் உயர்திரு விபுலா னந்தர் கருத்தல்ல.

**வாமனன்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அவர் கூறுகிறார்... "நம் முன்னோர் இயல், இசை, நாடக முத்தமிழ் துறைகளை மாத்திரமல்ல; கலைத்துறைகள் வேறுபலவற்றையும் போற்றினார்களென்பதை பழைய நூல்களாலறிகின்றோம். சிற்பத் துறையிலும் நம் முன்னோர் நிரம்பிய புலமை படைத்திருந்தார் என்பதற்குத் தென்னிந்தியாவில் உள்ள அழகிய கோயில்களே சான்று பகர்கின்றன. மருத்துவ நூலிலே அவர் படைத்துள்ள ஆற்றலினைச் சித்தவைத்திய முறை கண்கூடாகக் காட்டுகின்றது. மரக்கலமமைக்கும் நூலும், வானநூல் பிறவும் முற்றிலும் அழிந்து போக வில்லை. ஆதலினாலே அவைதம் மையெல்லாம் பண்டைப் பெருநிலைக்கு கொண்டுவருதல் வேண்டும்."

வேறோர் இடத்தில் கூறுகின்றார்.... "இமயம் முதல் குமரிவரை பரந்து கிடக்கும் பரத கண்டமெனும் பெருநிலப்பரப்பின் அறிவுச் செல்வம் பிளவுபடாத ஒன்றேயாம் என்பதை நாம் மறந்துவிடுதல் கூடாது. சாதிய சமய வேறுபாடின்றி இந்திய நாட்டுப் பேரறிஞர் கலைத் துறையில் ஆழப்புகுந்து ஆராய்ந்து கண்ட சிறந்த முடிவுகளை வடமொழியிலே எழுதும் பழக்கம் தொன்றுதொட்டு இந் நாட்டிலே (பாரதம்) இருந்து வருகிறது. இதனால் வழக்கு மொழிகள் கலைத் துறைகளிலே பெருக்கமடையாது ஒழிந்தன. உதாரணமாகச் சிற்பக் கலையினை எடுத்துக்கொள்வோம். தேவர்கோட்டம், மன்னன் கோயில், மக்களில்லம் என்னுமிவை தம்மை யமைக்கும் முறைகளையும் தெய்வச் சிலையுருவங்களை அமைக்கும் கணித நுட்பங்களையும் பண்டைத் தமிழர் நன்குணர்ந்திருந்தனர் என்பதற்கு தமிழ்நாட்டில் உள்ள கோயில்களே சான்று பகர்கின்றன.... அங்கனமாயினும் இக்கலை நுட்பங்களனைத்தையும் உணர்த்தும் ஆகம நூல்கள் வடமொழியில்தான் உள்ளன. இவை தம்மை வழக்கு மொழியில் பெயர்த்தெழுதுதல் சாலவும் வாய்ப்புடையது."

பண்டைய தமிழன் அன்றைய சூழ்நிலையைப் பொறுத்து கலைத் துறையில் வளர்ந்துதான் இருந்தான். பல விடயங்களில் முன்னிலையிலும் திகழ்ந்தான். கலைத்துறை வளர்ச்சிக்கான உள்ளாற்றலைப் பெற்றுத் தானிருந்தான். ஆனாலும், இன்று அவனின் வளர்ச்சி தேங்கிவிட்டது. மிக அதிகதூரம் பின்தங்கிவிட்டான். இந்த நிலையை எண்ணி உயர்திரு விபுலானந்தர் மிகவும் வேதனையுற்றார். தமது வேதனையை வெளிக் காட்டுவதுடன் அவர் திருப்திப் பட்டு சும்மாயிருந்து விடவில்லை. தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக, தமிழனின் அறிவு வளர்ச்சிக்காக அயராது உழைத்தார். பிறரையும் துணிந்து செயற்பட வரும்படி அறைகூவல் விடுத்தார்.

"மேற்றிசைச் செல்வம்" என்னும் தனது நூலின் இரண்டாவது அத்தியாயத்தில் அவர் கூறுகிறார்; "நமது நாகரீகத்தில் ஈடுபட்ட மேனாட்டு அறிவுடையோர் சிலர் நமது முன்னோருடைய பெருமையைப் பெருகக்கூறிப் பின்னேராகிய எம்மை இழிவுபடுத்துவர். இனி நாமே நமது முன்னோருடைய பெருமையைப் பற்றி வாய்ப்பறைய வெளிப்படுத்துமிடத்து அச்செயல் அன்னியர்க்கு நகையை விளைக்குமன்றி நம்பால் மதிப்புண்டாக்காது. என்னை, ஆண்மை குன்றி வறுமையடைந்திருக்கின்ற வறியன் ஒருவர் செல்வர் பாற் சென்று தம் முன்னோர் பெயரைச் சொல்லி யிரக்கின்ற செய்கையை இழிதொழிலாக உலகம் மதிக்கும். ஆதலின், பின்னர் செய்யவேண்டுவதென்ன? நம்முடைய சிறுமைக்கெல்லாம் காரணமாயிருக்கின்ற பொறாமையையும் பிரிவினையையும் ஒருங்கே களைந்துவிட்டு உடல் பொருள் ஆவி மூன்றையும் தேச சேவைக்கே ஒப்புக்கொடுத்து நமது தேசத்தையும் மொழியையும் பெருக்கமுறப் பண்ணுவோமாயின் நாமும் பெருமையடைவோம்; நம்முன்னோரும் பெருமையடைவர்."

மேற்றிசை செல்வத்துக்கான முன்னுரையில் மேலும் கூறுகிறார்..

"இக்காலத்தில் புறப்பொருள் ஆராய்ச்சியே குறைந்து போயிற்று.... யாக்கையும் (உடலும்) செல்வமும் இளமையும் நிலையா என்று அழுகிற அழுகையே தமிழ் வாணருக்கு (தமிழ் அறிஞர்க்கு) இயல்பாயிற்று. நிலையாப் பொருள்களை விடுவாரோ. மிக்ச் சிலர், அவற்றைப் பற்றியணைத்துக் கொண்டு தேடித் துய்ப்பதற்கு (அனுபவிப்பதற்கு) வழியின்மையால் 'நிலையா நிலையா' என்று பொய்க்காஞ்சி பாடி யிம்மை மறுமைச் சுகத்தை யிழப்பவரே மிகப் பலர். இனிப் பாடாண்டிணையை பாடாது (போற்றிப் பாடவேண்டியவனை) ஆண்மையில்லா அசுரர்களுக்குப் பாட்டிசைத்து அவர் தலைக்கிடையிற் காத்திருந்து வன்சொற்களையே பரிசிலாகப் பெற்று மீழ்கிற தமிழ் வாணர் பலர்."

கவிநயவிலிமையையும், பிறலினிமையையும் தருகிற அகப்பொருளறவினையுண்டு மதுவுண்டு மயங்கிய வண்டைப்போல செயலின்றிக் கிடந்தோம்; அடிமைத் தன்மையும் வந்தெய்திற்று. ஐயோ; இந்நிலைமை யினி வேண்டாம். வீரத்தைம் ஆண்மையையும் தருகிற புறப் பொருளை நாடுவோம். தவராஜ சிங்கமாகிய விவேகானந்த சுவாமி சொல்கிறார்;

"எழுந்திருங்கள், சோம்பலையும் மூடத்தனத்தையும் வீசியெறிந்து விட்டு வெளியே உலாவி உலகத்தின் ஏனைய பாகங்களில் உள்ள மாந்தர்கள் முன்னேற்றமடைந்து கொண்டு போவதைப் பாருங்கள். எத்தனை நாளைக்கு மூலையில் ஒதுங்கிக் கிடக்கப் போகிறீர்கள். நீங்கள் சுத்தவீரர்களின் வழிபிறந்தவர்கள் என்பதை மறந்துவிட்டீர்களா? சூரனுக்கு- உயிர் துரும்பு;

## கல்வியும் போராட்டமும்

உள்நாட்டு யுத்த நிலைமையிலும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஒருநாளாவது மூடப்படுவதில்லை. மூடுவதற்கு பிரபாகரன் இடமளிப்பதில்லை. ஆனால் நீண்ட வரலாற்றைக் கொண்ட பேராதனைப் பல்கலைக் கழகம் வருடக் கணக்கில் மூடப்படிருக்கிறது என அண்மையில் உயர்கல்வி அமைச்சராக பதவி ஏற்ற திரு. அநுரா பண்டாரநாயக்கா கருத்துத் தெரிவித்துள்ளார்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



தேசமுன்னேற்றத்துக்காக உயிரையும் கொடுக்கத் தயாராயிருக்கும் வாலிபர்கள் ஆயிரக்கணக்கான பேர் முன்வரவேண்டும். மேனிலையடைவதற்கு முயலுவோம். அம்முயற்சியில் உயிர் போனாலும் போகட்டும்."

புறப்பொருளின் அவசியத்தைப் பற்றி இவ்வளவு அழுத்தமாக வலியுறுத்தும் உயர்திரு விபுலானந்தர் ஒரு துறவி என்பதை இங்கு நினைவுபடுத்தல் அவசியம். உலக இன்பத்தை புறப்பொருள் இன்பத்தை தமிழனுக்கு பெற்றுக்கொடுப்பதற்காக அவர் தன்னையே அர்ப்பணித்தார். இதற்காக அவர் தனது சொந்த உலக இன்பத்தை தியாகம் செய்தார். அவர் உலக இன்பத்தைப் புறக்கணிக்கவில்லை. புறவாழ்க்கையின் அவசியத்தை உணர்ந்த அவர் தீர்க்கதரிசனமாக அன்று கூறிய கீழ்க்கண்ட வார்த்தைகள் இன்றுதான் ஈழத்தில் உணரப் பட்டுள்ளது.

"நாம் அறிந்த வரையிற் தமிழ் நாட்டனைவரும் சாதிமத பேதமில்லாது கைக்கொள்ளத்தக்க நூல் ஒன்று உளது. அது புறநானூறு." இது மாத்திரமல்ல, வேறோர் இடத்தில் கூறுவதைக் கேளுங்கள். "நமது நாட்டில் கற்று வல்லோரென்றிருப்போர் தாமும் புறநானூறினைப் படிப்பதில்லை. நேற்றும் இன்றும் வெளிவந்த பிழை பொதிந்த, சீர்கெட்ட நாவல்களே நமது சிறுவர் செவிக்கு உணவாகின்றன. வீரகாவியங்களைக் கற்றால் உள்ளம் வீரத்தன்மையடையும்; ஆதலால் மேற்றிசையோர் தமது சிறுவருக்கு ஈலியமகா காவியம், லத்தின் மொழியில் சீசர் என்னும் சக்கரவர்த்தி எழுதிய 'காலதேய யுத்தம்' (Gallic war) என்னும் நூல்களை கற்பித்து வைப்பர்."

"புறநானூறைப் பற்றி விளம்பரப் படுத்துகிறோம்; புகழ்பாடுகிறோம்; ஆனால் அதைப் படித்திலோம்; சராசரி வாசகர்கள் கற்று உணரும் தரத்திற்கு அது இன்னமும் உரை நடைப் படுத்தப்படவோ, பொழிப் புரை செய்யப்படவோ இல்லை."

செய்வோமா? வெல்வோமா?



பேராசிரியர் துரைராசாவின் மறைவையொட்டி தமிழீழத்தில் மூன்று நாட்கள் தொடர்ச்சியாக துக்கதினம் அனுட்டிக்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கோரிக்கை விடுத்தது. இந்நிகழ்வின் போது மக்கள் சோக உணர்வுகளுடன் காணப்பட்டனர். பெரும்பாலான பகுதிகளில் அவ்வுணர்வின் வெளிப்பாடாக கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. இறுதி நாளின் போது சகல ஸ்தாபனங்களும் பூரண கதவடைப்புச் செய்து தமது இதயபூர்வமான அஞ்சலியைச் செலுத்தின. இதன்போது விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக் கழகத்தினர் பேராசிரியருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக இரு தினங்களுக்கு வீதிநாடக நிகழ்வுகள் யாவையும் ரத்துச் செய்திருந்தனர். இத்துக்க நாட்களின்போது தேசியக்கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருந்தன.

இவரது மறைவு குறித்து ஆழ்ந்த கவலையைத் தெரிவித்து விடுதலைப் புலிகளின் சர்வதேசச் செயலகம் அறிக்கை விடுத்திருந்தது. இவ்வறிக்கையை இங்கே தருகிறோம்.

## பேராசான் துரைராசாவிற்கு எமது இதய அஞ்சலிகள்

யாழ். பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா அவர்கள் காலமானதையிட்டு எமது உள்ளத்தின் ஆழத்திலிருந்து புறப்படும் வேதனையை வெளிப்படுத்தி நிற்கின்றோம்.

அறிவும், ஆற்றலும் ஒருங்கிணையப்பெற்ற இச் சான்றோனின் மறைவு தமிழீழத்திற்கு மாபெரும் இழப்பாகவே உள்ளது.

பேராசிரியர் துரைராசா அவர்களை, தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள், ஒரு தேசப்பற்றாளராகவும், மண்ணையும், மக்களையும் நேசித்த ஒரு நல்ல மனிதராகவும் கணித்திருந்தார். பேராசிரியர் அவர்கள், யாழ். பல்கலைக் கழகத்தை விட்டு அண்மையில் மாற்றலாகிச் செல்லும் வேளையில் அவருக்குச் சிறப்பு விருது சூட்டி, பாராட்டுரை வழங்கிய தலைவர் பிரபாகரன் அவர்கள், 'தன்னலமும் தற்பெருமையும் அற்ற அழகிய மனிதர்' என அவரைக் குறிப்பிட்டிருந்தார்.

இப் பேரறிஞன் தமிழ் மக்களின் கல்விக்கு ஆற்றிய தொண்டினைத் தலைவர் பிரபாகரன் அவர்கள் குறிப்பிடும்போது 'எமது இனத்தின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் கல்வி ஆதாரமானது. எமது சமூகத்தின் முன்னேற்றத்திற்கு அடித்தளமானது. நீண்டகாலமாகவே எமது கல்வி வாழ்வைச் சிதைத்துவிட எதிரியானவன் முனைந்து வருகிறான். இதனால் தமிழரின் கல்வி பாரதூரமான அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. சரிந்துகொண்டிருக்கும் எமது கல்வித்துறையை நிமிர்த்திவிட வேண்டும் என்ற இலக்கில், பேராசிரியர் துரைராசா அவர்கள் அரும்பாடுபட்டார். எவ்வளவோ இடையூறுகளுக்கும் மத்தியில் துணிந்து செயலாற்றினார். எதிரியின் போர் அழுத்தங்களால் யாழ்ப்பாண உயர்கல்விப்பீடம் செயலிழந்துபோகாத வண்ணம் அவர் ஆற்றிய அருந்தொண்டு மிகவும் பாராட்டுக்குரியது. இது அவரது தேசப்பற்றிற்கும் மக்கள் நேயத்திற்கும் எடுத்துக்காட்டு.' என்று தெரிவித்தார்.

இந்த உன்னத மனிதனின் பெயர் தமிழீழ மக்களின் நெஞ்சங்களில் என்றும் நிலைத்திருக்கும்.

தமிழீழ மக்களின் வாழ்வையும், வளத்தையும் தன் நினைவில் சுமந்து, சேவை புரிந்த இப்பேராசானுக்குப் புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்கள் சார்பாக எமது இதய அஞ்சலிகள்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# கறுப்புச் சிங்கமே!

## கைகளை நீட்டு குலுக்கிக் கொள்ளுவோம்

இருண்ட கண்டத்தில் விரிந்த மலரே!
வாழ்த்துக்கள்.
இரும்புத்திரையை உடைத்தெழுந்த கதிரே!
மேகங்களிடம் "முத்தங்களும்"
காற்றிடம் "மலர்ச்செண்டும்"
அனுப்பியுள்ளோம்
பெற்றுக்கொள்.
"இதரைவாழைக்கன்றுகள்" இரண்டை
இனிவரும் கடலலைகளிடம்
கொடுத்துவிடுகின்றோம்
கொடிமரத்துக்கருகில் பாத்திகட்டி நாட்டிவிடு.
அடிபெருகி எங்கள் அன்புக்குக்
குலைதள்ளட்டும்.

நேற்றுவரை தென்னாபிரிக்கா என்றே
உன்னை அழைத்தோம்.
இன்று "என் ஆபிரிக்கா" என்றே
இங்கே ஒவ்வொருவரும்
உச்சரித்துக்கொள்கின்றோம்.
"வாஸ்கொடகாமா"வுக்கு மட்டும்தான்
நீ "நம்பிக்கைமுனை"யாக இருக்கவில்லை;
போராடும் எங்களுக்கும் அப்படித்தான்
புலப்படுகின்றாய்.
நெல்சன் மண்டேலா!
கறுப்புச் சிங்கமே! கையை நீட்டு
குலுக்கிக் கொள்ளுவோம்.
உன்னைக் கட்டித்தழுவ துடிக்கின்றோம்.
என்ன செய்வது நீ எட்ட இருக்கின்றாய்.
அன்று நீ "சிம்மாசனம்" ஏறியபோது
எமக்கேன் அழைப்பு அனுப்பவில்லை?
சிறீலங்காவுக்கு நீ எந்தவழி உறவு?
விஜேதுங்காவை விருந்துக்கழைத்தபோது
தமிழீழம் உன்கண்களுக்கு ஏன்
தட்டுப்படவில்லை?
இது விருந்துகிட்டவில்லையென்ற
விசனமல்ல..
போராடும் பூமியொன்றை
புறமொதுக்கிவிட்டாய் என்ற ஆதங்கம்
மட்டுமே.

போகட்டும்; இதனால் கோபமேதுமில்லை
இனிமேலாவது நண்பர்களை இனம்
கண்டுகொள்.
நன்மை உனக்குத்தான்.
ஆபிரிக்காவின் "காப்பிரி" மக்களே!
சூரியனை வழிமறித்து
தொட்டுப்பேசும் வல்லமையின் வடிவே!
காற்றுக்கொதுங்கிய வெள்ளையன்
நேற்றுவரை உன் முதுகில்தான் இருந்தான்.
கறுப்பனென்று உன்னை அழைத்தபோது
வெள்ளை உதடுகள் வேதனைப்படவில்லை.
மலத்தைக்கூட
தன்வீட்டில் அறைகட்டிக் குடியிருத்தியவன்
உன்னை வீதியில் ஏறி உலாவவிடவில்லை.
படுக்கையறைக்குள்ளும் நாயை அழைத்தவன்,
கறுப்பனைத் தொடும் காற்றைக்கூட
வெறுத்து விரட்டினான்.
அழகான உன் கரிய மேனியும்
உரமேறிய தசைநார்களும்
அவனுக்கு அச்சத்தைத் தரவில்லை.
அருவருப்பாகவே இருந்தது.
நீ பேசாமல் இருக்கவில்லை;
போராடினாய்.
வெற்றிக்கம்பத்தைத்தான்
உன்னால் தொட்டுவிட முடியவில்லை.
உங்கு வேர்கொண்ட மரங்களெதுவும்

## உலைக்களம்

**- வியாசன் -**

நீர்குடித்து வளரவில்லை.
கறுப்பனின் குருதி குடித்தே தளிர்த்தன.
உலகெங்கும் தார்பூசியே வீதி கறுப்பானது.
உன் நாட்டில் மட்டும்தான்
கறுப்பனின் வியர்வைபட்டு வீதி கறுப்பானது.
வெள்ளைச் சீமாட்டியின் விருந்துக்குப் பிறகு
வீசியெறியும் எச்சில் இலைக்காக
உன் பரம்பரை தாழ்வாரத்தில் தவமிருந்தது.
வந்தவன் ஆள நீ வயலில் மாடானாய்.
வெள்ளைக்காரன்,
மாட்டுத்தொழுவத்தில் கறுப்பியின்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


முளைதொடுவான்
கறுப்பனுக்கும் மட்டும் காயடிப்பான்.
நீ புயலாகிப் போராடியவன்தான்
என்ன செய்வது?
அம்பும் வில்லும்தான் உனக்கு அகப்பட்டது.
அவனிடம் துப்பாக்கியல்லவா இருந்தது.
காலங்கள் கழிந்தனவே தவிர
உன் துன்பங்கள் கழிய வழிவந்து
சேரவில்லை.
நீண்ட காலத்தின் பின்
'நெல்சன் மண்டேலா' வந்து
பிறந்தபோதுதான்
நெஞ்சுநிமிர்த்தினாய்.
எப்படியோ



சுற்றிய இரும்புவேலிச் சுவர்கள் இடிந்தன.
இன்று ஆபிரிக்காவுக்கு சிறகு
முளைத்துவிட்டது.
புதிதாகப் பிறந்த கறுப்புத் தேசமே!
விடுதலைக்கு நீ கொடுத்த விலையிலும்
அதிகவிலை நாங்கள் கொடுக்கின்றோம்.
நாங்கள் போராடும் விதமே வித்தியாசமானது.
உனக்குப் பக்கத்து நாடுகள் பால்வார்த்தன.
எமக்கு அண்டை நாடொன்று
நஞ்சையே தந்தது.
நின்றும், நடந்தும், குனிந்தும், நிமிர்ந்தும்
நீ வசதிக்குத் தக்கபடி வழிமாறியுள்ளாய்.
நாங்கள் பாதைமாறும் பரம்பரையில்லையே
விடுதலையைப் பேசிப்பெறும் எண்ணம்
எமக்கில்லை
போராடிப் பெறுவதென்றே முடிவு.
பிரபாகரனைப் பார்க்காவிட்டாலும்,

கேட்டிருப்பாய்
தொட்டுத் தோழமையை வளர்த்துக்கொள்.
கண்டங்கள் கடந்து வாழ்ந்தாலும்
நாங்கள் உணர்வால் ஒன்றுபட்டவர்கள்.
நிறத்தால் வேறுபட்டாலும்
நீங்கள் விடுதலை பெறவேண்டுமென்று
அதிகம் விரும்பியது நாங்கள்தான்.
ஏன் தெரியுமா?
வெள்ளைக்காரன் உன்னை மட்டுமா
அடக்கினான்
இல்லை
எம்மை அடக்கவும் எதிரிக்குத்
துணைபோனான்
இங்கே கண்ணிவெடியில் சிதறும்
"பவள்" கவசவண்டியை எதிரிக்கு
அனுப்பியதே
வெள்ளைத்தோல் வெறியன்தான்.
இனி இது நடக்காது
நாங்கள் நம்புகின்றோம்.
போராடிப்பெற்ற சுதந்திரத்தின்
பெறுமதி புரிந்தவர்கள் நீங்கள்.
விடுதலையின் முகவரி தெரிந்தவர்களே!
எங்கள் சுதந்திரத்துக்கு முத்திரை ஒட்டுங்கள்.
நம்பிக்கைமுனை நாடே!
எங்களின் நம்பிக்கையை
நாசமாக்கிவிடாதே
கறுப்புச் சிங்கமே; நெல்சன் மண்டேலா
ஒரு கேள்வி; பதில் வேண்டும்
சில இடங்களில் சேற்றிலேன்
காலைப்புதைத்தாய்?
சமாதானத்துக்கான நோபல் பரிசை
வேடனும் புறாவும் எப்படிப் பங்கிடமுடியும்?
குருதிபடிந்த வெள்ளைக் கொலைக்கரமும்
சிறையில் வாடிய உன் கரிய திருக்கரமும்
குலுக்கிக்கொண்டபோது
அந்த விருதை எப்படி விளங்கிக்கொண்டாய்?
பரிசு வாங்கியபோது
உன்பரம்பரை சிந்திய குருதியை
எப்படி மறந்து கைகளை நீட்டினாய்?
என்றாலும் உன் மீது கோபம் வரவில்லை.
கறுப்புச் சிங்கமே! கைகளை நீட்டு
குலுக்கிக்கொள்வோம்.

**(நன்றி: விடுதலைப் புலிகள்)**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# இளைய சமுதாயம் துடிப்புடன் எழவேண்டும்

ஒரு தசாப்த காலாத்திற்கு முன்பு தேசியத் தலைவரின் மெய்ப்பாதுகாவலர்களில் சில இளையவர்களும் இருந்தனர். இதனை அவதானித்த இயக்கத்தின் மூத்த உறுப்பினர் ஒருவர் “இவர்களை ஏன் வைத்திருக்கிறீர்கள்? இவர்கள் உங்களைப் பாது காப்பார்களா?” என்று வினாவினார். “பொறுத்திருந்து பாருங்கள்” என்று மாத்திரம் தலைவரிடமிருந்து பதில் வந்தது. அன்றைய இளையவர்களாக இருந்தவர்கள் இன்று தளபதிகளாகவும், துறைப் பொறுப்பாளர்களாகவும் இயக்கத்தின் தூண்களாக, தேசத்தின் சிற்பிகளாக சிறந்து விளங்குகிறார்கள். இவர்களிடம்தான் திறமையும் ஆற்றலும் உண்டு என்பது தலைவரிற்குத் தெரியும். இதனால் தான் அவர்களை சிறந்த போராளிகளாக உருவாக்கியிருக்கிறார்.

இவ்வாறான தலைவரினால் தனது 18 வயதிலேயே ஈர்க்கப்பட்டவர்தான் இயக்கத்தின் மூத்த தளபதியான கேணல் கிட்டு அவர்கள். தலைவரின் வழிகாட்டலில் கிட்டண்ணா பல்துறைகளில் திறமையும், ஆற்றலுமுள்ள சகலகலா வல்லவனாக திகழ்ந்தார். இதனால் கிட்டண்ணா யாழ். மாவட்டத் தளபதியாக்கப்பட்டார். இங்குதான் அவரது ஆற்றலும், ஆளுமையும் பளிச்சிட்டன. வெறியாட்டம் போட்ட இராணுவத்தினர்களை அடக்கி முகாம்களிற்குள் முடக்கினார். மக்களிற்கான அரசியல் வேலைத்திட்டங்களை திலீபனுக் கூடாக நடாத்தினார். சுதந்திரப் பறவைகள், மாணவர் அமைப்பு, நிதர்சனம், கலை பண்பாடு, தமிழீழ ஆய்வுநிறுவனம் போன்ற பல அமைப்புக்களைக் கட்டியெழுப்பினார். பல வெகுசன அமைப்புக்களை உருவாக்கினார். அவரது குரலைக்கேட்ட மாத்திரத்திலேயே



அடங்கிப்போகும் அளவுக்கு சிங்களத்துக்கு சிம்மசொப்பனமாக திகழ்ந்தார் என்றால் அது மிகையாகாது.

வளர்ந்துவரும் புதிய சமுதாயம் எவ்வாறான படிமுறை வளர்ச்சிகளின் ஊடாக வளரவேண்டுமென் பதையறிந்து, அதற்கேற்ப வடிவங்களை போராட்ட காலங்களிலேயே உருவாக்கினார். சிங்கள இனவாத பூதம் இளையவர்களின் மனதைப் பாதிக்க முனைந்ததை, உளவியல் ரீதியாக தாக்கத்தை ஏற்படுத்த முற்பட்டதையறிந்து கவலை கொண்டார். இதற்காகவே போராட்ட காலங்களில் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்காத வண்ணம் பார்த்துக்கொண்டார். கலைவிழாக்கள், கோவில், தேவாலய திருவிழாக்கள், இலக்கிய அரங்குகள், விளையாட்டுப் போட்டிகள், கண்காட்சிகள், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் போன்ற பலவற்றை போர்நெருக்கடியான சூழ்நிலையிலும் தொய்வுறாவண்ணம் நடாத்த உற்சாகப்படுத்திக்கொண்டிருந்தார். குடாநாட்டின் பின்தங்கிய பலபகுதிகளில் இலவச கல்வி நிலையங்களை அமைத்தார். வறிய மாணவர்கள் கல்விகற்பதற்குரிய ஒழுங்குகள் பல செய்தார். அவர்களது கல்வியைத் தொடர போதிய உதவிசெய்தார். இவ்வாறான இடங்களில் பாலர் பாடசாலைகள், கல்விக்கூடங்கள், வாசிகசாலைகள், சிறுவர் பூங்காக்கள், சிறுகைதொழில் முயற்சிகள் போன்றவற்றை உருவாக்கினார். அவ்வாறானவற்றுக்கு ஆதரவு கொடுத்தார். தமிழீழத்தில் எந்தவொரு மக்களும் பின்தங்கிய நிலையில் இருக்கக்கூடாதென கனவு கண்டார்.

பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் ஏராளமான இளைஞர்கள் அறிவியல் ஆர்வத்துடனும் ஆக்கபூர்வமான தேடலுடன் இருப்பார்கள் என்பதை பரிபூரணமாக உணர்ந்து கொண்டவர். இதனால்தான் விடுதலைப்புலிகளின் மாணவர

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மைப்பை உருவாக்கினார். இவ்வமைப்பிற்கூடாக கண்காட்சிகள், விளையாட்டுப்போட்டிகள், சிரமதான வேலைகள், சமுதாய முன்னேற்றச் செயல்கள் எனப் பலவற்றை மாணவர்களின் தேடலுக்கு வடிகாலாய் அமைத்துக்கொடுத்தார். மாணவர்கள் மத்தியில் கல்வியறிவை வளர்ப்பதுடன் நின்றுவிடாது அவர்களது ஆளுமையையும், பல் துறைசார் பண்புகளையும் வளர்க்க வேண்டுமென்றே விரும்பினார்.

உற்சாகமான இளைஞர்களையும், குறும்புத்தனமான இளைஞர்களையும் அவருக்கு நன்கு பிடிக்கும். அவர்களுடன் கதைத்து அவர்கள் ஆர்வம் கொண்டுள்ள விடயங்களில் தொடர்ந்து கதைத்து உற்சாகப் படுத்தவது கிட்டண்ணாவின் பாணியாகும். அவர் தனது மடலில்:-

"இளைய பருவத்தினர்தான் புதுமையையும், புரட்சியையும் உடனடியாகப் புரிந்துகொள்ளக் கூடியவர்களாகவும், ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களாகவும் இருப்பதுடன் நடைமுறைப்படுத்துவதற்கும் தாமாக முன்வரக்கூடியவர்களாகவும் உள்ளனர்" எனக்குறிப்பிட்டார். இளைய சக்தியை கிட்டண்ணா யதார்த்தமாகப் புரிந்துகொண்டவர்.

தேசவிடுதலை மட்டும் எமது நோக்கமல்ல. சமூக விடுதலையும், மறுமலர்ச்சியும், சீர்திருத்தமும் சேர்ந்ததே எமது போராட்டத்தின் பரிமாணம் என்பதை வலியுறுத்தி வந்தார். எமது சமூகத்தில் புரையோடிக்கொண்டிருக்கும் சாதிப்பாகுபாடு, பெண்அடிமைத்தனம், மூட நம்பிக்கைகள், பிரதேச வேறுபாடுகள், வர்க்கவேறுபாடுகள் போன்றவற்றை தவிர்க்கவேண்டுமென்ற தணியாத ஆசைகொண்டவராகத் திகழ்ந்தார். இதற்காகப் பாடுபட்டார். தன்னையே அர்ப்பணித்தார். இளைஞர்களிடம்தான் பூகம்ப சக்தி ஒன்றுண்டு. அவர்களால்தான் எமது சமுதாயத்தின் விலங்குகளை உடைத்தெறிய முடியும் என அடிக்கடி சொல்லிவந்தார்.

தமிழீழ தேசத்தை உருவாக்குகின்ற சிற்பிகளாக, நிர்மாணிகளாகத்தான் அவருடன் கூடயிருந்த புலிவீரர்களை வளர்த்தார். தமிழ்ச் சமூகத்தின் சீர்திருத்தவாதிகளாகவும், முன்னணிச் சக்திகளாகவும் விளங்குவார்களென எண்ணினார். ஏனைய இளைஞர்களையும் இந்தச் சமூகத்தின் முன்னோடிகளாக்கப் பாடுபட்டார். இந்த இளைஞர்களிடம்தான் அந்த மகத்தான சக்தி உண்டு என்பதை பரிபூரணமாக நம்பினார்.

எந்தச் சக்திகளுக்கும் அடிமைப் படாத பொருளாதார, அரசியல் சுபீட்சமுடைய தமிழீழத்தை கட்டியெழுப்பவேண்டும் என்ற அவாவும், கல்வியும், செல்வமும் நிறைந்த மக்களைக் கொண்ட நாடாக விளங்கவேண்டும் எனும் தலைவரின் விருப்பத்தைப் பிரதி பலித்தார் கிட்டண்ணா.

மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தபோது இந்திய வல்லாதிக்க அச்சுறுத்தலின் காரணமாக நாடு விட்டு நாடாக இடம்மாறிக்கொண்டிருந்த காலங்களிலும் அவரது எண்ணங்களும், சிந்தனைகளும் தமிழீழத்தைப் பற்றியதாகவே நிறைந்திருந்தது. தமிழீழம் என்ற தேசத்தை இராணுவ, அரசியல், பொருளாதார, பண்பாடு என்ற பலமான விழுதுகளால் கட்டியெழுப்புதல் வேண்டும் என்ற தனது சிந்தனை வடிவங்களை மடல்களிலே வெளிப்படுத்தினார். அவர் எழுதிய கடிதங்கள் ஒவ்வொன்றிலும் தமிழீழம் பற்றிய அவரது கனவுகள், கற்பனைகள், எண்ணங்கள் நிறைந்திருந்தன.

போராளிகளுடன் கிட்டண்ணா



"கிட்டு மாமா" என சிறுவர்களாலும் "கிட்டு அண்ணா" என சக தோழர்களாலும், "கிட்டு" எனத் தலைவராலும் அன்பாகவும் ஆசையாகவும் அழைக்கப்பட்ட கிட்டண்ணா காலத்தின் ஒரு பதிவாகும். அவரது கனவுகளை நனவாக்க, அவர் நம்பிக்கை வைத்திருந்த இளைய சமுதாயமே துடிப்புடனெழுந்து வரவேண்டும்.

**வீ. மணிவண்ணன்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



"தமிழீழ மக்களின் பொருண்மிய மேம்பாட்டுக்கு வைப்பகங்களின் தேவை அவசியம்" என்ற தலைவரின் கூற்று, 23.05.1994 அன்று யாழ். கன்னாதிட்டியில் செயல்வடிவம் எடுத்துவிட்டது. தமிழீழத்தின் முதலாவது வைப்பகம் அன்று . திறந்துவைக்கப்பட்டது. இதேபோன்று இன்னும் பல வைப்பகங்கள் திறக்கப்பட இருகின்றன. இந்த வைப்பகங்களின் இயக்கமும் அதன் சேவையும் தமிழீழ தேசிய பொருண்மியத்திற்கு உறுதுணையாக அமையைப்போகின்றன என்பது உறுதி. எமது மக்களின் பணமும் எமது மண்ணின் வளமும் ஒரு

# தமிழீழ வைப்பகம்: தனியரசுக்கான அலகுகளில் ஒன்று

## எமது மக்களின் பணம் எமது மக்களுக்கே பயன்பட வேண்டும்

காலத்தில் சிங்கள ஆட்சியாளர்களால், முழுமுச்சுடன் எமது இனத்திற்கெதிராகவே பயன்படுத்தப்பட்டு வந்தன என்பது அறியப்பட்ட உண்மை; இன்மும் அதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவில்லை.

எமது மக்களின் பணம் மக்களின் வாழ்வு முயற்சிக்குப் பயன்படவிடாது தடுப்பதுடன், சுதந்திரமான பணப்புழக்கத்திற்கு இடைஞ்சலையும் ஏற்படுத்தி, எமது மக்களுக்குத் தொல்லைகொடுப்பதில், சிங்கள அரசு திட்டமிட்டுச் செய்றபடுகின்றது. அதசாவது தமிழீழ மக்களின் பணத்தையும்- தமிழீழ மக்களிடையேயான பணப்புழக்கத்தையும் சிங்கள அரசு ஒரு போராயுதமாக எடுத்து தமிழினத்திற்கெதிராகப் பயன்படுத்தி வருகின்றது.

சிங்கள அரசின் இந்த திட்டமிட்ட நாசவேலையை, தமிழீழ வைப்பகம் படிப்படியாக இல்லாமல் செய்யும்.



தேசியக்கொடியை ஏற்றி திறப்புவிழாவை ஆரம்பித்துவைக்கும் திரு. தமிழேந்தி அவர்கள்.

இதையேதான் வைப்பகத் திறப்புவிழாவில் பேசிய நிதித்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழேந்தி அவர்கள்... **"இங்கிருந்து கொழும்புக்கு அனுப்பப்படும் நிதி எமது மக்களின் வாழ்வோட்டத்தைப் பாதிப்பதுடன், எமது மக்களை அழிக்கவும் பயன்படுத்தப்படுகிறது"** என்று சுருக்கமாக கூறியிருந்தார்.

காவல்துறை மற்றும் நீதிமன்றங்களின் செயற்பாட்டைப்போல வைப்பகத்தின் செயற்பாடும் தனியரசுக்கான கட்டுமானங்களில் ஒரு முக்கிய அலகாகத் தொழிற்படும் என்பது திண்ணம்.

வைப்பகத்தின் திறப்புவிழா அன்றே பல நூற்றுக்கணக்கான தமிழீழ குடிமக்கள் பணத்தை வைப்புச் செய்வதில் காட்டிய ஆர்வம் தமிழீழ வைப்பக்ததிற்கு கிடைக்கப்போகும் மக்களின் பலத்த ஆதரவையும்- அங்கீகாரத்தையுமே காட்டுகின்றது.

நன்றி:
விடுதலைப் புலிகள், வைகாசி-1994)

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# தமிழீழ வைப்பகம்

## கணக்குத் தொடங்குவது சம்பந்தமான சில விதிமுறைகள்

தமிழீழ வைப்பகத்தில் தனியாக, கூட்டாக, கழகங்களாக, அவைகளாக கணக்கு ஒன்றைத் தொடங்கலாம்.

16 அகவைக்கு குறைந்தோர் கணக்கு ஒன்றைத் தொடங்குவதாயின் பேணுநர் ஒருவரின் ஒப்புதல் பெறவேண்டும்.

கழகங்கள், அவைகள் மற்றும் பொதுநிறுவனங்கள் கணக்கு ஒன்றைத் தொடங்குவதாயின் அந்நிறுவனத்தின் யாப்பின் பிரதி ஒன்றினையும் நெறியாளர் கூட்டத் தீர்மானத்தின் பிரதி ஒன்றினையும் விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.




### சேமிப்புக் கணக்கு:

ஆகக்குறைந்தது ரூபா 200 செலுத்தி சேமிப்புக் கணக்கைத் தொடங்கலாம்.

### நிலையான வைப்பு:

ஆகக்குறைந்தது ரூபா 2000 த்தை நிலையான வைப்பில் இடலாம்.

10000 ரூபாவிற்கு குறையாத வைப்பிற்கு மட்டுமே மாத வட்டி வழங்கப்படும்.

### கடன் வாய்ப்புக்கள்:

நிலையான வைப்புக்கு எதிராகவும், சேமிப்புக் கணக்கு மீதிக்கு எதிராகவும் வைப்பகத்திலிருந்து 80 வீதம் கடன்வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளலாம்.

பொறுப்பு கையளிக்கப்படும் கணக்கிற்கு வைப்பகத்தினால் செலுத்தப்படும் வட்டி நூற்றுக்கூறிலும் பார்க்க இரண்டு நூற்றுக்கூறு கூடுதலாக அறவிடப்படும்.

### மேம்பாட்டுக் கடன்:

மேம்பாட்டின் நோக்கத்தையும் பொறுப்பின் பெறுமதியையும் நோக்கி கடன்வாய்ப்புச் செய்துகொடுக்கப்படும்.

### அடகு:

வைப்பகத்தினால் முடிவுசெய்யப்படும் பவுணின் பெறுமதியின் 60 வீதத்திற்கு கடன் வழங்கப்படும்.

### வாணிபக் கடன்:

பொறுப்பாகக் கொடுக்கும் வாணிபச் சரக்குகளின் தன்மைக்கு ஏற்றாற் போலும் அந்நிறுவனத்தின் நிதி நிலைமையைக் கருத்திற்கொண்டும் கடன் வழங்கப்படும்.

### வட்டி விகிதம்:

கடனின் தன்மைக்கும் நோக்கத்திற்கும் ஏற்றாற்போல் காலத்திற்குக் காலம் வைப்பகத்தினால் முடிவுசெய்யப்படும் விகிதத்தில் வட்டி அறவிடப்படும்.




தன்னாட்சியை நோக்கிய இன்னொரு முன்னெடுப்பு

**வைப்பிலிடும் தேட்டம் காலத்தே பயன்தரும்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# லெப். கேணல் சூட்

# நிமிர்ந்த பனை

சிலந்திவலைப் பின்னலாகிப் படர்ந்திருந்த இந்தியர்களின் கையில், தமிழீழம் சிக்கிப்போயிருந்த காலம்.

மறக்கமுடியாத அந்த நாட்களில் யாழ்ப்பாணத்தில் நின்றுபிடித்து புலிகளின் சுவடுகளைப் பேணிக் காத்து நிலைநிறுத்தி வைத்திருந்த வீரர்கள், குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய சிலபேர்தான். அந்தச் சில பேருக்குள் நேற்றுவரையும் எஞ்சியிருந்தவன்தான் சூட்.

அவனை விளங்கிக்கொள்ள அந்த நேரத்து 'இராணுவச் சூழ்நிலை'யைப் புரிந்துகொள்ள வேண்டும். அந்தச் சூழ்நிலையைப் புரிந்துகொள்ள வலிகாமத்தின் தரையமைப்பைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

தமிழீழத்தில் வேறெங்கும் இல்லாதவிதமாக முற்றுமுழுதான நகரச் சூழலைப் பெரிய அளவில் கொண்ட புவியியல் அமைப்பையும், குறைந்தளவு நிலத்தில் கூடியளவு மக்கள் அடர்த்தியாக வாழும் குடியியல் நிலையையும் கொண்ட பிரதேசம் அது. பகைவனுக்கு முழுமையாக ஒத்துழைத்தது அந்த நிலஅமைப்பு. அது அவனுக்குச் சாதகமான ஒரு சூழல்.

அதே சமயத்தில் இனங்காண முடியாமல் சனங்களோடு இரண்டறக் கலந்திருந்த துரோகிகள் வேறு. இந்தியர்கள் போட்ட எலும்புகளை நக்கிக்கொண்டிருந்தது, இயலுமான அளவுக்கு அவர்களுக்குத் துணை போன கும்பல்களும், ஆட்களும்.

இதற்குள் இன்னொரு விடயம் என்னவென்றால்- யாழ். மாநகரத்தை தன்னகத்தே கொண்டிருக்கும் வலிகாமம் பிரதேசத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதானது இராணுவ அரசியல் ரீதிகளில் மிகமிகப் பிரதானமான ஒன்றாக இந்திய- சிறிலங்காத் தளபதிகள் அப்போதும் இப்போதும் கருதுகிற அளவுக்கு முக்கியத்துவத்தையும் பெற்றிருந்த பகுதி இது.

அந்தவகையில் மணலாற்றுக்கு அடுத்தபடியாக இந்தியர்களின் அதிகூடிய கவனம் செலுத்தப்பட்ட



மையமாகவும் வலிகாமம் பகுதி விளங்கியது.

இத்தகைய ஒரு புற நிலைமைக்குள்-

உயிர்வாழ்வே உத்தரவாதமற்ற இராணுவச் சூழ்நிலைக்குள்-

புலிகள் இயக்கத்தை நிலைநிறுத்தி வைத்திருப்பதற்கு இடையறாது போராடிய ராஜன், சுபாஸ், லோலோ, தும்பன், ரெட்ணா, கட்டைசிவா, கரிகாலன்.... என எல்லோரும் அவனைவிட்டுப் போய் விட- அவர்களின் நினைவுகளைச் சுமந்துகொண்டு போராடியவன் இன்று எங்களைவிட்டுப் போய் விட்டான்.

இப்போது அவனது நினைவுகளைச் சுமந்துகொண்டு நாங்கள்....

அந்த இருண்ட இரண்டரை வருடங்கள்.

அது மிக நெருக்கடியான கால கட்டம்.

வர்ணித்துச் சொல்லமுடியாத ஒரு பயங்கரச் சூழ்நிலை அப்போது நிலவியது.

பாசமிகு மக்கள் பாதுகாத்து இடமளிக்க, தூங்கப்போகும் இரவுகள் தூக்கமற்றுப்போகும். ஓரோசையுமற்று அசையும் இரவில், தூரத்து நாயோசை இந்தியன் நகரும் சேதியைச் சொல்லும். திடீரென ஒரு பதற்றம் பற்றிக்கொள்ளும். அந்தச் சூழ்நிலையில் அது இயல்பானது. நாய் குலைப்புச் சத்தம் அகோரமாய் நெருங்கும். அது ஒரு அச்சமூட்டும் குறியீடு. விரிந்து நகர்ந்து வட்டமிட்டுச் சுருங்கி எதிரி முற்றுகையிடுகிறபோது நாயோசை உச்சக்கட்டத்தில் இரையும். நெஞ்சு விறைத்துப் போகும். நள்ளிரவின் அமைதி சிதைய ஊர் துடித்து விழிக்கும். தங்களுக்காக வேண்டிக்கொள்ளும் மனங்கள் 'பிள்ளைகளைக்' காக்கச்சொல்லியும் இறைவனிடம் மன்றாடும். துப்பாக்கிகள் தயாராகும். தேர்வு நெம்பு, தானியங்கிக்கு மாற, சுட்டுவிரல் சுடுவில்லை வளைத்துக்கொள்ளும். இருளை ஊடறுத்து விழிகள் முன்னேறும். எதிரி எதிர்ப்படும் கணத்தில் சன்னங்கள் பாய முற்றுகை உடைபடும். தப்பித்து மீண்டு, சொல்லப்பட்ட இடமொன்றில் சந்திக்கின்றபோது தோழர்களில் ஒருவனோ இருவரோ வந்திருக்க மாட்டார்கள்...

ஆள்விட்டுப் பார்த்து ஆமி இல்லை என்றபின் மெல்ல நடந்து வீதி கடக்கும்போது, சடுதியாய் எதிர்ப்படும் சிற்றூர்திக்குள்ளிருந்து துப்பாக்கிகள் உறுமும். ஆளையோ அல்லது ஆடைகளையோ கூட சன்னங்கள் துளையிடும். உரப்பைக்குள் இருக்கும் எங்கள் துப்பாக்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



கியின் சூடு தணியும்போது, நாலாவது வேலி கடந்து நாங்கள் ஓடிக்கொண்டிருப்போம். எம்மை முந்திக்கொண்டு எதிரியின் சன்னங்கள் சீறும்.

'முற்றுகையிடுகிறான் பகைவன்' என நினைத்து அடித்து உடைத்துக்கொண்டோ, அல்லது வலு அவதானமாக நகர்ந்தோ அவனைக் கடந்து மறுபக்கம் போய் 'தப்பி வெளியேறிவிட்டோம்' என மகிழும்வேளை, இப்போதுதான் முற்றுகைக்குள் வந்து சிக்கிப்போயுள்ளோம் என்பது தெரியவரும். நடந்த தவறு விளங்கும் போது தலை விறைக்கும்.

'பிரச்சினை இல்லாதவை' எனக் கருதி இரவில் படுக்கப் போகும் இடங்கள் அதிகாலையில் எதேச்சையாக சுற்றிவளைக்கப்படுகின்ற துரதிஷ்டம் நிகழும். சந்தர்ப்பவசமாக சிக்கிக்கொண்டு விடுகிற அந்த விபரிக்கமுடியாத சூழ்நிலைகளில் வாழ்க்கை வெறுக்கும்.

"எல்.ரி.ரீ." எனக் கத்திக்கொண்டு இந்தியன் எட்டிப்பிடிக்கும் போது, 'கதை முடிந்தது' என்று குப்பியைத் தொடும் வேளையிலும், இறுதிநேர முயற்சியாக உதறிப் பறித்துக்கொண்டு தப்பி ஓடுகிற போது நெஞ்சுக்குள் தண்ணிவரும்.

இப்படியாக ஏராளமான மயிரிழைகள்.

சன்னம் துளைத்தவர்களையும், 'சயனைட்' அடித்தவர்களையும் தவறவிட்டு தப்பித்து வந்தபோதெல்லாம், அந்த ஆருயிர் நண்பன் ஓரமாய் இருந்து கண்ணீர் சொரிவான்.

ஆனால், ஒருபோதும் அந்தப் புலிவீரன் உள்ளம் தளர்ந்துபோனதில்லை.

நெருக்கடிகள் கூடிக்கூடி அழுத்தியபோதெல்லாம் இறுகிக்கொண்டே போனது அவனுடைய மனவுறுதி.

கற்பாறையைப் பிளந்து முளையிடும் துளிராகி, இந்தியர்களின் கூடாரங்களுக்கு நடுவில் அவன் நிமிர்ந்தான்.

எதிரி வளைத்து நின்ற மண்ணில், கைவிடாத துப்பாக்கியோடு கடைசிவரைக்கும் வலம்வந்து போராட்டத்தை உயிர்த்துடிப்போடு உயர்த்திச்சென்ற வேங்கை அவன்.

மரணம் அவனது உயிரை உரசிச்சென்ற போதெல்லாம் தப்பித்து மீண்டுவந்து, 'என்ன நடந்ததோ....?' என ஏங்கி நின்ற எங்களின் முன் கண்குளிரக் காட்சியளித்து, ஆச்சரியப்படுத்திய வீரன்.

கட்டைக் காற்சட்டையும் சேட்டுமாக அந்தச் 'சின்னப்பொடியன்' தோற்றத்தில், இந்தியர்கள் பலதரம் ஏமாந்திருக்கிறார்கள்.




மூலைமுடுக்கெல்லாம் நுழைந்து இந்தியர்கள் ஒத்தியெடுத்த வேளைகளிலெல்லாம், அவன் நேசித்த மக்களால் பொத்திவைத்துப் பாதுகாக்கப்பட்ட குழந்தை.

எப்படி அவனால் நின்றுபிடிக்க முடிந்தது...?

அது அதிசயம்தான்!

ஆனால், அவனைப் பாதுகாத்தது வெறும் அதிர்ஷ்டம் மட்டுமல்ல.

விவேகம், புத்திக்கூர்மை, மக்கள் செல்வாக்கு, அவனுடைய சின்ன உருவம், இவற்றுக்கு மேலாக அவனுடைய உறுதியும் துணிச்சலும்.

இவைதான் அவனை உயிர் வாழச் செய்வித்தன.

அடுத்த காலை நிச்சமற்றிருந்த அந்த நாட்களில் அவனோடுதான் நம்பிக்கையோடு தூங்கப்போகலாம். சாவு எங்களைத் தட்டியெழுப்பிய எத்தனையோ தடவைகளில் தப்பி வந்தது அவனால்தான் எனலாம்.

அப்போது யாழ். மாவட்டத் தளபதியாக இருந்த பொட்டம்மானும் தோழர்களும் அவனது 'ஒழுங்கமைப்பு'களால் பல சந்தர்ப்பங்களில் பாதுகாக்கப்பட்டிருக்கிறார்கள்.

'மக்கள் நேசம்' அவனது உயரிய குணாம்சங்களில் ஒன்று. அவன் அவர்களில் வைத்த அன்பு அவர்களை அவனில் பாசம் வைக்கவைத்தது.

அந்த நெருக்கம் அலாதியானது; அதுதான் அவனுக்கு கவசமாகவும் இருந்தது.

அந்த நேசத்தின் தொடக்கம்- அவன் போராளியான ஆரம்பம். அது 1984 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதி. தனது பதினேழாவது வயதில் இயக்கத்தில் சேர்ந்தவன். அப்போது முதல் அந்த மக்களோடேயே வாழ்ந்தான். அந்த மக்களுக்குக் காவலாய் இருந்தான்.

'மற்ற இயக்கங்களின் ஊர்கள்' என்று ஒதுக்கிய கிராமங்களில்தான் தூக்கமும், வேலையும். 'மற்ற இயக்கங்களின் ஆட்கள்' எனப்பட்டவர்கள் வீடுகளில்தான் குளிப்பும், சாப்பாடும். எல்லா ஊரையும் எம்முடையதாக்கி, எல்லாப் பேரையும் எம்மவர்களாக்கினான்.

31.05.1967 அன்று தனலட்சுமி அம்மாவுக்கும், நவரத்தினம் ஐயாவுக்கும் பிறந்தவனுக்கு விக்கினராஜன் என்று பெயரிட்டார்கள்.

தனது 16 ஆவது வயதிலேயே 'புலிப்படைப் பொடியளு'க்குப் பின்னால் திரியத்தொடங்கிவிட்டான்.

பாயில், தலையணை அடுக்கி ஆள்மாதிரிப் போர்த்திவிட்டு இரவில் காணாமல் போனவன்... ஸ்ரான்லி கொலிச்சில் தம்பியையும், தங்கையையும் இறக்கிவிட்டு, உள்ளே வராமல் மிதிவண்டியைத் திருப்பிக்கொண்டு மற்றப்பக்கமாகப் போனவன்... போய்ப்போய் வந்தவன்....

ஒருநாள் ஒரேயடியாகப் போய்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

விட்டான்.

சூட் ஓர் அற்புதமான போராளி.

தனது அழகான ஆழுமையால் தோழர்களைத் தன்னோடு இறுகப் பிணைத்திருந்த நண்பன்.

கண்டிப்போடும், பரிவோடும் அரவணைத்து வருடிய காற்று. அவர்களில் அவன் பொழிந்த பாசமே தனி.

மனங்குழம்பிப் போகின்ற எந்தப் போராளியையும் ஆதரவோடு கதைத்துத் தெளிவூட்டுகிற போது, அவனொரு பேராசன்.

முழுமையாக என்று சொல்லா விட்டாலும்- இயக்கத்தின் நீண்ட வரலாற்று ஓட்டத்தோடு பெருமளவு கலந்து- அமைதியாக ஆரவாரமில் லாமல்- தனது செயலால் வளர்ந்து- மெல்ல மெல்ல உயர்ந்தவன்.

சூட் ஒரு சண்டைக்காரன் அல்ல. அதற்காக சண்டை தெரியா தவன் என்றும் சொல்லிவிடமுடி யாது. அதாவது அவன் தேர்ச்சி பெற்ற யுத்தவீரன் அல்ல.

அப்படியானால் அவன் முன் னுக்கு வந்தது?

அது சண்டைகளால் அல்ல.

சண்டைக்கு வெளியில் நின்று அவன் போராட்டத்திற்கு ஆற்றிய அளப்பரிய பணிகளால்.

தான் பணியாற்றிய துறைகளி லெல்லாம் தனக்குக் கொடுக்கப் பட்ட வேலைகளில் பேர்சொல்லும் முத்திரைகளைப் பதித்து வளர்ந்த போராளி.

சண்டைக்கு வெளியில் நின்ற எல்லாப் போராளிகளையும் போல அவனும் போர்க்களத்துக்குப் போகத்தான் துடித்தான். ஆனால், அவனது தேவை அவனை அதிலி ருந்து தள்ளியே வைத்திருந்தது.

ஒரு விடுதலை வீரனின் போராட்டப் பணியானது இரா ணுவ அளவுகோலால் மட்டும் அளவிடப்படமுடியாதது.

சண்டையிடுவதுதான் ஒரு விடுதலைப் போராட்டத்தில் பிரதான அம்சம். ஆனால், அது மட்டுமே போராட்டம் ஆகாது.

சண்டை என்பது, போராட்டம் நகர்த்திச் செல்லப்படும் பல்வேறு பரிமாணங்களில் ஒன்று.

சண்டைகளில் நிற்காத போதும்- உண்மையான அர்ப்பண உணர் வோடு வாழ்ந்து- போராட்டத்தின் ஏனைய பரிமாணங்களூடு அபாரத் திறமையாகக் காரியங்களைச் சாதித்த எத்தனையோ போராளி களுள் ஒருவனாக, சூட் அல்லும் பகலும் ஓய்வற்றுச் சுழன்றான்.

துவக்கத்தில் யாழ். மாவட்ட புலனாய்வுத்துறைப் பொறுப்பாள னாகப் பணி.

அவன் பொறுப்பை ஏற்றபோது அங்கு இருந்த சூழ்நிலை வித்தியாச மானது. அதனால் மிக்க அவதான மாகவும், மிக்க நிதானமாகவும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. அவன் எச்சரிக் கையோடு அடிகளை வைத்தான்.

நேற்றுவரை எதிரியினால் முற்றுகையிடப்பட்டிருந்த அந்தப் பிராந்தியம், இன்று திடீரென ஒரேநாளில் எங்கள் கைக்குள் வந்து விட்ட காலகட்டம் அது. இந்தியா வின் எச்சசொச்சங்கள் எங்கும் பரவியிருந்த நேரம். 'மக்களே போல் வர் கயவர்' என்று அன்றொரு நாள் வள்ளுவன் சொல்லியிருந்த தைப் போன்றொரு நிலைமை.

எவரிலுமே சந்தேகம் எழக் கூடிய சூழல்.

மிகக் கவனமாக இனங்கண்டு பிரித்தறிய வேண்டும். எங்கள் புலனாய்வு நடவடிக்கைகளில் தவறு நேர்ந்து, அது மக்களைப் பாதித்து விடாமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

புலனாய்வுத் தவறுகளினால் மக்கள் எவ்விதத்திலும் துன்பப்பட்டு விடக்கூடாது. அத்தகைய அவதா னத்துடன் செயற்படும்போது நடவடிக்கைகளில் நாங்கள் காட்டும் நிதானமானது, துரோகிகளுக்கு வாய்ப்பளித்து அவர்கள் சுலபமாகச் செயற்படவும் விடக்கூடாது.

இப்படிப்பட்ட சிக்கலான ஒரு சூழ்நிலையில் பொறுப்பெடுத்து, மிக நேர்த்தியாகவும் சிறப்பாகவும் தனக் குரிய பணியை சூட் செய்து முடித்தான்.

நாட்கள் உருண்டன.

புலனாய்வுத்துறையின் முக்கிய மான ஒரு போராளியாக-

அதன் தாக்குதற் படைபிரிவுக் குத் தளபதியாக-

இயக்கத்தின் 'கரும்புலிகள்' அணி

## 'ஹைக்கூ' கவிதைகள்

வானம் பொழிந்தது
எங்கும் இரத்தவெள்ளம்!
தமிழ் ஈழம்.

கட்டாயம் ஒருநாள்
கிழக்கு வெளிக்கும்!
விடுதலைப் புலிகள்.

எரிமலை வெடித்து
நிலம் பிளக்கும்!
தனிநாடு.

உங்கள் குழந்தையை
வெட்டித்தான் தருவோம்!
வடக்கும் கிழக்கும்.

வடக்கிலும் கிழக்கிலும்
பயங்கரவாதிகள்!
ஈழத் தமிழர்கள்.

மக்களை அழித்துவிட்டோம்
புலிகள் வடக்கில்!
பொருளாதாரத்தடை.

தீயதைப் பாராதே!
தீயதைப் பேசாதே!
தீயதைக் கேளாதே!
தமிழீழம்.

துறையூரான்
யாழ்ப்பாணம்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


ஒன்றுக்குப் பொறுப்பாளனாக-

• சூட் படிப்படியாக உச்சத்துக்கு வந்தான்.

இயக்கத் தலைமையினது அதீத நம்பிக்கைக்கு அவன் பாத்திரமானான்.

முக்கியத்துவம் மிக்க ஒரு கரும்புலித் தாக்குதல்.

இலக்குப் பெரியது.

எனவே, ஒழுங்கமைப்பும் பெரிதாக இருந்தது.

திட்டம் திட்டப்பட்டபோது பொட்டம்மான் சூட்டைத்தான் தெரிந்தெடுத்தார்.

தியாகமும், துணிச்சலும், இலட்சிய வேட்கையும் போக- மதிநுட்பமும், விவேகமும், செயற்திறனும் அதிகமாகத் தேவை. இவையெல்லாம் ஒருங்கிணைந்தவன் சூட்.

ஆனால் தலைவரோ ஆளை மாற்றச் சொன்னார்.

இந்தப் பணியை விடவும் அதிகமாகப் போராட்டத்துக்கு அவன் பயன்படுவானென்று அவருக்குத் தெரிந்தது; உண்மைதான்.

ஆனாலும், தாக்குதலின் முக்கியத்துவத்தையும், அதன் பிசகாத- துல்லியமான வெற்றியையும் கருத்திற்கொண்டு பொட்டம்மான் சூட்டைத்தான் வலியுறுத்தினார்.

இருந்தபோதும்- தலைவரது கருத்திற்கிணங்க கடைசியில் முடிவு மாற்றப்பட்டது.

அதன் பின்னர்-

எங்களது இன்னுமொரு கரும்புலி வீரன், அந்த இலக்கை மிக வெற்றிகரமாகத் தாக்கி அழித்து வரலாற்றைப் படைத்தான்.

பூநகரிச் சமருக்குப் புறப்படும் போது சூட் தேர்ச்சிபெற்ற ஒரு சண்டைத் தளபதியாக விளங்கினான்.

ஆனால், அவன் இராணுவ ரீதியில் மேலோங்கியதானது நீண்டகால அனுபவத்தில் படிப்படியாக வளர்ச்சிகண்டு அல்ல.

**கொழும்பில் EROS என்ற பெயரில் சிறிலங்கா அரசோடு ஒட்டிக்கொண்டிருந்த அக்குழுவைச் சேர்ந்தவர்கள் தேர்தலில் பங்குகொள்ள விரும்பியபோது அவர்களது அமைப்பின் பெயரிலிருந்து ஈழம் என்ற சொல்லை அகற்றி விடும்படி சிறிலங்கா அரசு வலியுறுத்தியது. அதன் பிரகாரம் தற்பொழுது Eros எனும் கிரேக்க காதல் தெய்வத்தின் பெயராக மாற்றம் செய்திருக்கிறார்கள். தமிழீழப் போராட்டத்துக்கும் கிரேக்க காதல் தெய்வத்துக்கும் என்ன தொடர்பு என யாரும் தலையில் அடித்துக்கொள்ள வேண்டாம். அவர்களது புரட்சி அப்படி.**

நன்றாக இனங்காணப்பட்டு, திடீரென அவனுக்குப் பொறுப்புக் கொடுக்கப்பட்டது.

குறுகியகால இராணுவப் பணியையே அவன் ஆற்றினான்.

ஆனால், அந்தச் சொற்ப காலத்துக்குள்ளேயே, பெருந் தளபதிகளினது மதிப்பையும், பாராட்டையும் அவன் பெற்றுவிட்டிருந்தான். அது ஒரு இலேசான காரியமல்ல.

அவனது குறுகியகால இராணுவ வளர்ச்சி அசாத்தியமான ஒரு சாதனை.

பூநகரிப் பெரும் போர்க்களம்.

பல்வேறு படையணிகள், பல்வேறு சண்டை முனைகள், பல்வேறு வழிமுறைகள்.

பரந்த ஒரு பிரதேசத்தில் எழுந்து நின்ற எதிரியின் பெரும் படைத்தளம் ஒன்றின் மீது- அதன் எல்லா அணிகளிலும் சமநேரத்தில் தாக்கி- புலிகள் நிகழ்த்திய மிகப் பெரிய படையெடுப்பு.

ஒரு முனையில் சூட்டின் படையணி.

எதிரியின் அரண் தொகுதி ஒன்று சூட்டினது படையணிக்குரிய இலக்கு. அதன் அருகிலிருந்த இன்னொரு அரண்தொகுதி லெப். கேணல் குணாவின் படையணிக்குரிய இலக்கு.

இரண்டு அணிகளும் தமது இலக்குகளை வீழ்த்திய பின் ஒன்றன் பின் ஒன்றிணைந்து பிரதான தாக்குதலணி ஒன்றுக்குத் தோள்கொடுக்கவேண்டும் என்பது திட்டம்.

ஆனால், விசயம் பிழைத்து விட்டது. பூநகரி வெற்றியின் முதல் வித்தாக, சண்டையின் ஆரம்ப நிமிடங்களிலேயே குணா வீழ்ந்து போக- அந்தப் பகுதியில் சண்டை திசைமாறிவிட்டது.

தமது இலக்கைக் கைப்பற்றிய சூட்டினது அணி முன்னேறிய போது, குணாவினது பகுதி பிசகி விட்டிருந்தது. எதிர்பார்த்தமாதிரி நடக்கவில்லை; எதிரி அங்கு தாக்குப்பிடித்துக் கொண்டிருந்தான்.

துணை சேரவேண்டிய அணிக்குத் துணைகொடுக்கவேண்டிய நிலை.

மூர்க்கத்தனமான தாக்குதல் குணாவுக்குரிய பகுதிமீது ஆரம்பித்தது.

இறுக்கமான சண்டை.

ஆர். பி. ஜி. குண்டின் சிதறல் பட்டு அவனது எம்.16 உடைந்து போக, அருகில் நின்ற தோழனிடம் ரி.56ஐ வாங்கிக்கொண்டு சூட் முன்னேறினான்.

கடுமையாகத் தாக்கிக்கொண்டிருந்த எதிரியின் பலமான அரணொன்றை சூட் ஆக்ரோசமாக நெருங்கினான்... தனி ஆளாகப் பாய்ந்தான்.

எதிரிக்கு அருகில் அவன் முன்னேறினான்... மிக அருகில்... போய்விட்டான்... போனவன் திரும்பி வரவில்லை.

அன்பு, குணா, நவநீதன், பாமா, றூபன், கணேஸ், கோபி, அவன்.... என்று 458 தோழர்கள்... வெற்றியைத் தந்துவிட்டு வராமலே போய் விட்டார்கள்!

தமிழீழம் இப்போது தலை நிமிர்ந்து நிற்கிறது; அந்த மைந்தர்களின் நினைவோடு; அவர்கள் பெற்றுத் தந்த வெற்றியின் பெருமிதத்தோடு.

இப்போது.... நம்பிக்கையோடு காத்திருக்கிறது....

அடுத்த வெற்றிக்காக!

**நன்றி:**
**(விடுதலைப் புலிகள், வைகாசி1992)**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# திருநாடு

## நாக. பத்மநாதன்

பயிர்கள் கதறி நின்றன!
வயல்கள் அழுதன, ஓலமிட்டன!
வறட்சியோ வெள்ள அழிவோ
இன்றி நன்கு விளைந்த பயிர்களின்
ஏக்க ஒலி விண்ணைக் கரைத்தது!
ஏன்?
விளைந்து முற்றிய
செந்நெற்கதிர்களில் எண்ணெய்
ஊற்றுகிறார்கள்! இல்லை, விரைந்து
எரியவல்ல 'பெற்றோல்'
எண்ணெய்யை இடைவெளிவிடாது-
பாதகர், வயல் எங்கும்
வீசுகிறார்கள்!
எரி பந்தத்தை ஒரு முரட்டுக் கை
தூக்கி வயலில் தொட்டு
முடிக்குமுன்-
ஐயோ!

காய்ந்த நெற்கதிர்கள் படரும்
நெருப்பிலே துடிக்கின்றன. எரிந்து
யாவும் கருகி வீழ்கின்றன. வானம்
சிந்திய துளிகளும் இதனுள் வீழ்ந்து
மடிந்தனவே அல்லாமல்
தப்பியதில்லை!

கயவர்களும் தங்கள் கருமத்தை
முடித்த காடையர்களும்
ஊழிக்கூத்தாடியபடி அப்பால்
விரைகின்றனர்.

வயலுக்குத் தங்களை உரமாக்கிய
குடிமக்கள் தூரத்தே மறைந்து நின்று
எழுப்பும் ஏக்க ஒலி மட்டும்
மிதக்கிறது.

தேன் சொரியும் தென் தமிழீழத்தின்
இன்னொரு வயற்பரப்பில்-
பயிர்செய்து அருவிவெட்டு முடிந்து
இன்று நெல்லைக் களத்தில்
குவிக்கும் வேளையில்-

வேட்டுக்களைத் தீர்த்தபடி
இராணுவ வாகனமொன்று உறுமி
வருகிறது! உரிமைக் கமக்காரர்
இரத்தம் சிந்தியும் ஓடிப்பதறியும்
சிதறுகின்றனர்! தொடர்ந்து வந்த
காடையர் கூட்டம் நெல்
முழுவதையும் ஏற்றிச் செல்கிறது,



இடர்நடுவேயும் வேளாண் மன்னர்கள்

கும்மாளமிட்டபடி!
கொள்ளை!

அரச ஒத்தாசையுடன் கொள்ளை!

வேண்டுமாயின் கொலை!
"இதன் நடுவே எம் மக்களா?
இதுதான் ஆட்சியா?" எனத்
துடித்தது என் உள்ளம்!

"இதை உன் ஆட்சி என்கிறாயா
அடிமையே?" என எழுந்தது
பெருங்குரல்.

"இது அரச வடிவம் அல்ல, உன்
இனத்தை அழிக்க முயலும்
அழிவின் வடிவம்" என உரக்கச்
சிரித்தது அக்குரல்!
"அழிக்க வருவதை நீ அழி! இதன்
முடிவே வெற்றி, விடுதலை, வாழ்வு,
நாடு எல்லாம்!" எனக் கூவியபடி
அக்குரல் எழுந்து உயர்கிறது.

"தென்தமிழீழம் எம் உதிரமே" என்ற
உணர்வுடன் உடல் கொதித்தது.
அதன் வேங்கைகள் பல இங்கும்
எங்கும் போரிட்டு நிற்பதை
உணர்ந்த நெஞ்சம் ஆரத்
தழுவுகிறது.

எதிரியின் முகாம்களைத் தேடி
முறியடிக்கும் வேங்கைகளைத்
தாங்கி நிற்கும் இம்மண்-

போர்முனை நடுவேயும்-
தளராது நெற்கதிர்களையும் தந்து
உயர்வதால், வாழ்த்தப்படுகிறது!

அதற்கு உரியோர்
போற்றப்படுகின்றனர்! தன்னைக்
குறைத்து இவர்களை 'வேளாண்
மன்னர்' என வாழ்த்துகிறான் எம்
தலைவன்!

தென்தமிழீழ இணைவு எம்
உயிரிலும் மேலாகிறது. இவற்றின்
நடுவே-

விளையும் நெல்லை
எரிக்கின்றானே- அவன் பகைவன்!

பல இடர் நடுவேயும் நெல்
விளைச்சலை வாழ்தி
ஆக்குகிறானே- இவனே தலைவன்!

அழிவின் நடுவேயும் தன் மக்களுக்கு
விளைபொருள் தருவதே நாடு
என்கிறது அப்பெரும் குரல்! அது
பொய்யாமொழி!

இவ்வித இடர்நடுவேயும் 'மானம்
உடைய' 'வளம் தரு' நாடு நாம்
வாழும் தமிழீழத் திருநாடே
என்பதை எண்ணும்போது,
எத்தனை இன்பம்!

(நன்றி: விடுதலைப் புலிகள்
வைகாசி 1994)

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# எனக்கு கால் வழங்காத குறையை அகற்றியவன்

## ஒரு மாவீரனின் சகோதரியினது உள்ளத்து உணர்வு

என் ஆசைத்தம்பி ராஜன்... எனக்கு இரண்டு வயதான போது எங்கள் தாய் உன்னைப் பெற்றெடுத்தார். பிறப்பிலிருந்தே நான் நடக்கமுடியாதவள். எனது ஐந்து வயதில் நீ சிறியவனாக இருந்த பொழுதே நீ அழுகின்ற நேரத்தில் உன்னை என்மடி மீது வைத்து விளையாட்டுக் காட்டுவேன். அம்மா வீட்டு வேலைகளைக் கவனிக்கும் பொழுது உன்னைப் பார்க்கும்படி எனக்குச் சொல்லுவார். அப்பொழுது நீ நன்றாக நடப்பாய்; ஓடுவாய். என் அருகில் நீ வரும்போது உன்னை இறுகப் பிடித்துவிட்டால் என்னை அடித்துவிட்டு ஓடுவாய். என்னால் நடக்கவும் முடியாது. ஓடவும் முடியாது.

"என்னைப் பிடி அக்கா" என்பாய்.

என்னால் எப்படிப் பிடிக்க முடியும்? நான் அழுவேன். அப்பொழுது நீ ஓடிவந்து "ஏன் அக்கா அழுகிறாய்" என்று கேட்பாய்?

"என்னால் உன்னை பிடிக்க முடியவில்லையே" என்று சொல்லி அழுவேன்.

"ஏன் அக்கா உன்னால் ஓட முடியாது" என்று கேட்பாய்.

"அது எனக்குத் தெரியாது" என்பேன்.

நீ ஏழு வயதை அடையும்வரை எனக்கு சகல கடமைகளையும் அம்மாவே செய்து வந்தார்.

உனது ஏழு வயதிலிருந்து எனக்கு சகல கடமைகளையும் நீ செய்யத் தொடங்கினாய்.

மூன்று சில்லு சைக்கிளில் என்னை வைத்து அங்குமிங்கும் உருட்டித் திரிந்து, நான் நடக்க முடியாத குறையைப் போக்கினாய். என் கால்களாக இயங்கினாய். என்னால் நடக்கமுடியவில்லை என்ற துயரம் என்னிடம் நீங்க, எனக்குத் தம்பியாக இல்லையடா அண்ணனாகத் திகழ்ந்தாய். உன்னை என் உயிராக நேசித்தேன். நீயே நான்; நானே நீயென இருந்தோம்.

சிறு வயதினில் நாம் விளையாடிய பொழுது ஒருநாள் நடந்த சம்பவத்தை, என்னால் உயிருள்ள வரையில் மறக்கமுடியாதடா. என்னை வீட்டுக்குள் சைக்கிளில் தள்ளிச் சென்றாய். நான் கொஞ்சம் உடல் பருமனானவள். தள்ளுவதற்குக் கொஞ்சம் உனக்கு கஷ்டமாக இருந்தது அந்த நேரத்தில்.



லெப். மயூரன்.

01-03-1994 அன்று பூநகரி - கௌதாரிமுனைப் பகுதியில் நடந்த எதிர்பாராத நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார்.

"இந்த குண்டை வைச்சுத் தள்ள ஏலாது" என்று சற்று விலகிச் சென்றாய்.

அப்போது அருகிலிருந்த மேசை மீதிலிருந்த மேசைக்கத்தியை எடுத்து எறிந்தேன். கத்தி உன் தோள்மீது பட்டது. உன் தோளிலிருந்து இரத்தம் பாய்ந்தது. அதன்பின் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. கண் விழித்து பார்த்தேன். நான் படுக்கையில் இருந்தேன். பக்கத்தில் அம்மாவும் நீயும் இருந்தீர்கள். உனது இடது தோளில் துணி கட்டப்பட்டிருந்தது. அப்போது....

"அக்கா அக்கா! இனிமேல் உன்னைக் குண்டு என்று சொல்ல மாட்டேன். எவ்வளவு தூரம் எண்டாலும் உன்னை சைக்கிளிலை வைச்சுத் தள்ளுறன். எழும்பக்கா. நான் குண்டு என்று சொன்னபடியால்தானே நீ மயங்கிப்போனாய்" என்று அழுதாய்.

நான் கனவு கண்டதுபோல் இருந்தது. நான் இரத்தத்தைக்கண்டு சைக்கிளில் இருந்து மயங்கி விழுந்து விட்டேன் என்று சொன்ன பொழுது தான், என்ன நடந்தது என்று எனக்குத் தெரிந்தது.

என் முன்கோபத்தால் நான் செய்த குற்றத்தையும் மறந்து, நான் மயங்கியதைக் கண்டு எனக்காக நீ அழுத காட்சியை, எப்படியடா என்னால் மறக்கமுடியும்?

நாங்கள் இருவரும் தசையும் நகமும் போல வளர்ந்து வந்தோம்.

கடந்த ஐந்து வருடத்திற்கு முன், எமது விடுதலைக்காக உன்னை நீ இணைத்துக்கொண்டாய். அன்றிலிருந்து எனது சைக்கிளை நானே இயக்கிக்கொண்டிருக்கிறேன். ஏன்? எமது விடுதலைக்காவே....!

என்னால் எப்படியடா தாங்க முடியும்?

என் கால்களாக இயங்கி எனக்குக் கால் வழங்காத குறையைத் தீர்த்தவன்.

இரத்தக் காயத்தை நான் ஏற்படுத்தியபோதும் எனக்காக அழுதவன்.

நகமும் தசையும்போல் வாழ்ந்தவன்.

இந்த நாட்டிற்காக, மக்களுக்காக உன்னையே அர்ப்பணித்து வீரச்சாவைத் தழுவிக்கொண்ட செய்தியைக் கேட்டு, என் இதயமே வெடித்தது போல ஆனதடா.

உனது வீரச்சாவு மேலும் எமக்கு உறுதியைத் தந்துள்ளது.

உனக்கு முதலே விடுதலைப் போராட்டத்திலே எமது தந்தை இணைந்து செயற்பட்டிருந்தார்.

உனது பாதச்சுவடுகளை எம்மைப் பெற்ற தாயும் பின்பற்ற முடிவுசெய்துள்ளார்.

தாயக விடுதலைக் கனவோடு சென்ற உன் பாதச்சுவடுகள் மீது என் பாதங்களை வைத்துப் பின்தொடர முடியாதபோதும், என் சைக்கிளில் பின்தொடர்வேன். உன் கனவை நனவாக்குவேன்.... இது உறுதியடா என் அருமைத் தம்பியே!

ச. சுபாங்கினி (சகோதரி)

(நன்றி: விடுதலைப் புலிகள், வைகாசி 1994)

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# பாலாய் நிலவு பொழிகிறது

பாலாய் நிலவு பொழிகிறது- பௌர்ணமி
நாள்!
ஓராயிரம் நினைவு நெஞ்சில் அலைமோத
பாலாய் நிலவு பொழிகிறது..
முன்னாள் இதுபோல முழுநிலவில் முற்றத்து
தென்னை முழுகுகையில் தென்றல் அதைத்
தாலாட்டும்
தூரத்தே ஊதும் சுருட்டி மிதந்துவரும்!
ஈரமண்ணில் இரு கால் புதைய நெடு
நேரம் கழியும் நினைப்பே இலாது.
கடல்
ஓரம் கை கோர்த்தே உலாவருவோம்!

மேலே வான் நீல விதானம் விரிக்கும்!
ஓலைக் குடிசையிலே.
தென் மோடி ஆட்டுவிக்கும் அண்ணாவி பாடல்,
உடுக் கொடு
போட்டுலுப்பும் சாமப் பொழுது
பாலாய் நிலவு பொழிகிறது - பௌர்ணமி நாள்!

திங்கள் மூன்றாக சிறிதும் பிழையில்லை
எங்கள் பயிர் பச்சை எல்லாம் கருகுகையில்
வானத்தை நோக்கிக் கழுத்து மிகவலித்துப்
போனதே அன்றிப் புதினம் எதுவுமில்லை!
'நீர்வேணும் இந்த நிலம் தோண்ட வல்ல, பல
ஆள் வேணும்!'
கூவி அழைக்க,
இளைஞர் சிலர் ஆயுதங்கள் ஏந்தி வந்தார்!
"நீர் கண்டலாது, இனி நாம் ஓயுறதே இல்லை!"
ஒரு சூள் உரைத்தார்கள்!

அண்டை அயலார் அலவாங்கொடு பாரை
கொண்டு வந்தார் சோற்றுப் பொதியும்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


அனுப்பி வைத்தார்
'ஆகா' "இவர்கள் போல் ஆர் வருவார்!"
என்றுருகி
வீதி யெல்லாம் வாழை நட்டுத் தோரணமும்
தொங்கவிட்டு
வாசல் தோறும் பூரண கும்பம் வடிவாக வைத்து
வரவேற்றோம்!
வானத் திருந்(து) அமரர் வந்தது போல் பூரித்து
மோனத் திருந்தோம் முழுசாக ஒருமாதம்!
ஊர்திகளில் ஏற்றி ஊர்வலங்கள் செய்வித்தோம்!
பார் முழுதும் பார்க்கப் பவனி வந்தோம்!
அந்தரத்துத் தேவர் ஒரு நாள் அசுரர்களாய்
தொந்தரவு செய்யத் துணுக்குற்றோம்!
நாடொன்று கேட்ட தமிழர் குடியிருக்க
வீடொன்றும் இல்லாமல் விதைத்தார்கள்
குண்டுகளை
ஆடுபலி, கோழிபலி, ஐயோ அணிகலனும்
வீடுகளும் காவு கொடுத்து விதிர்விதிர்த்தோம்!
நாடு புகுந்தவர்கள் நாளாக நாளாக
வீடு புகுந்தெங்கள் மானம் விலை கேட்டார்.
தண்ணீருக்காகத் தவமிருந்த மனிதர்களைக்
கண்ணீர் கடலாட விட்டுக் கதையளந்தார்!
நீர் காண, முன்பு முயன்ற இளைஞர்களை
ஊர் தோறும் தேடி உழக்கி வதைத்தார்கள்.
பொய்யை பொய்யாகப் புனையும் முயற்சியிலே
வையம் முழுதும் வலம் வந்து பார்த்தார்கள்!
அசுரர்களை ஏவி அநியாயம் செய்வித்தார்!
நிசியிற்களவு, கொலை, நிட்டூரம்! - அம்மம்மா!
மூன்றாம் பிறை நம் முருங்கை மரத்தடியில்
தோன்றுவது போய்க் கூடி தொழுகை
நடத்துங்கள்!
நாலாம் பிறை கண்டு நாய்படாப் பாடுபட்டோம்!
ஓலமிட்டோம், கண்ணீர் உகுத்தோம்
ஒரு நாளில்,
சூறாவளியால் சுழன்று முருங்கைமரம்
பாற, நமது பகைவர் மறைந்தார்கள்!

இன்று,
பாலாய் நிலவு பொழிகிறது . பௌர்ணமி நாள்!
மீண்டும் இளைஞர் மிடுக்காய்த் தொடங்கினார்
தோண்ட ஒரு சிறிதும் சோம்பல் அறியாதார்!
ஆழத்தே பாறை பிளக்கும் ஒலி அவ்வப்போ(து)
ஈழம் முழுதும் எதிரொலித்துக் கொண்டிருக்க
உண்ட களையில் உறக்கம் கலையுதென
மிண்டர் சிலபேர் விசனம் அடைந்து,
ஒன்று கூடி ஒரு திட்டம் கொண்டு வந்தார்!
"நம்மை இவர் மீறி இது செய்ய விட்டால்?..
வரும் மோசம்!
தாமே பெறுவதோ தண்ணீர்?
நாமில்லாமல் ஆமோ ஒரு வாழ்வு?
அதனை உணர வைப்போம்!

ஆற்றை மறித்தால்?...
அவர்கள் கிணற்றில் நீருற்றும் கிடைக்கா(து)!"
உறுதி செய்துகொண்டார்கள்!

பச்சைப்பயிரும் பயன்மரமும் தோப்புகளும்
உச்சி கருகி உயிருசல் ஆடுவதும்
கோயில் குளம் கூட குண்டுக்(கு) இலக்காகி
தீயில் கருகுவதும் கண்டிரங்காச் சென்மங்கள்!

பொழிகின்ற குண்டுகளால் மக்கள் உடல்சிதறி
அழிகின்ற பொல்லா அவலம் இயற்றுபவர்!

கொடுமைக்கு முன்னே குனிந்து நடுங்காமல்
அடிமைத் தளையை அறுத்தெறிய வேண்டாமோ?

தென்னை பனைகள் சிதறுண்டு போனாலும்
என்ன? ஆனால் இடிந்து போய் உட்கார்ந்தெம்
ஏலாமை சொல்ல இது நேரம் அல்ல!

இன்று பாலாய் நிலவு பொழிகிறது- பௌர்ணமி
நாள்!
மீண்டும் எமது நிலத்தில் பனை வடலி
தோன்றி நிமிர்க, துயரம் பொடிபடுக!
மீண்டும் அண்ணாவி முழக்கும் உடுக்கின் ஒலி
நீண்ட இரவுப் பொழுதில் நிகழட்டும்!
ஊதும் குழல்பெய் சுருட்டி இனி இரண்டு
காதும் அமுதம் பொழிக!
கடலோரம்
ஈரமண்ணில்
இனி நாம் நடக்கலாம்!
பாலாய் நிலவு பொழிகிறது - பௌர்ணமிநாள்!

-ப. நம்பியாரூரன்-

நன்றி: வெளிச்சம்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# கிழக்கு வெளிக்கும் நாளில்..

## நேருக்கு நேர்

**இடம்: நாவாந்துறைக் கடல் நீரேரி, யாழ்ப்பாணம்.**

"வெள்ளாப்பு கொடுக்கப் போகுது"

கிழக்கு வானில் இருந்து வேகமாக எழுந்து வந்த வெள்ளியைப் பார்த்த ஜோசப் வள்ளத்தின் மறுமுனையில் மரக்காலை ஊன்றிவரும் பாக்கியநாதனை நோக்கிக் குரல் கொடுத்தான்.

இந்த கடற்தொழிலாளர்களின் பாஷையே வித்தியாசமானதுதான். விடியப்போகின்றது என்பதைத்தான் வெள்ளாப்பு கொடுக்கப்போகின்றது என்று குறிப்பிட்டதை சூழ்நிலைகளைப் பார்த்தே நான் புரிய வேண்டியதாயிற்று.

நாம் புறப்பட்டு இரண்டு மணித்தியாலங்களுக்கு மேலாகி இருக்கும். கீழ்வானில் மெதுவாக வெளிச்சம் பரவத் தொடங்கியது. எனினும் ஆளுக்காள் முகம் பார்க்க முடியாத இருட்டு.

இருளில் எங்கோ குரலெழுப்பும் கடற்பறவையொன்றின் ஒலியையும், எம்மைக் கடந்து செல்லும் வள்ளங்களின் மரக்கால்கள் நீரை துழாவிச் செல்லும் சலசலப்பையும் தவிர- அமைதி குடிகொண்டிருந்தது.

இடையிடையே எழுந்து- பரவி- இறங்கி- மறையும் தேடுதல் வெளிச்சம் (Search Light) தீவுப்பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினரை நினைவூட்டியது.

"அண்ணை உங்களுக்குப் பயமில்லையா?" இது நான்.

"பயந்தென்ன செய்வது? தீவுப் பகுதிகளில் இராணுவம் வந்ததன் பின்னர் தொழில் அடியோடு நின்று போய்விட்டது. இக்கடல் நீரேரியைத் தாண்டி பெருங்கடலினுள் தொலை தூரம் போகமுடியாத நிலை. இரவில் பாய்ந்துவிட்டு வரும் வலையைப் பகலில் இராணுவம் பிடுங்கிக்கொண்டு போய்விடுகிறது. முந்தி உழைப்பதற்காக மீன் பிடித்தோம்- இன்று வயிற்றுப் பிழைப்புக்காக மீன் பிடிக்கவேண்டிய நிலை"

கடைசிப் பட்டியிலிருந்து வலை இழுத்துக்கொண்டிருந்த ஜோசப்பின் பதிலில் சலிப்பும் களைப்பும் தெரிந்தது.

பொருளாதாரத் தடையும், இராணுவ முற்றுகையும் மற்றெல்லாத் தொழிற் துறையினரையும் விட மீனவர்களை வெகுவாகப் பாதித்துள்ளதென்பது இவர்களைப் பார்த்தாலே புரிகின்றது. மீனவர்கள் என்றதுமே ஞாபகத்திற்கு வருவது



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


உழைப்பால் உரமேறிய அவர்களது உடல்வாகுதானே! ஆனால் இவர்கள்... கொஞ்சநேரம் வள்ளம் வலித்தால் இருமிக் களைக்கும் நிலை.

நாவாந்துறைக் கடல் நீரேரி முன்பு இவ்வாறா இருந்தது? இப்பகுதி சிங்க இறால்களாகவும் கடலட்டைகளாகவும் எவ்வளவு பணத்தை மீனவர்களுக்கு அள்ளிக் கொடுத்தது.

தமிழீழத்தின் கடல் நீரேரிகள் பலவற்றிலும் கடலட்டைகள் காணப்பட்டாலும் யாழ். மாவட்டத் துக் கடல் நீரேரிகளிலேயே இவை பெருமளவில் பெருகுகின்றன.

சுண்ணக்கல்லில் இருந்து அரித்து எடுத்துச் செல்லப்படும் படிவுகள் இங்குள்ள நாவாந்துறை, காக்கைதீவு, மண்டைதீவு, அராலி, குருநகர், பாஷையூர் போன்ற கடனீரேரிகளிலேயே அதிகம் காணப்படுகின்றன. இப்படிவுகள் உருவாக்கும் வெண்ணிற சேற்றுத் தன்மையான மண்ணும் இங்கு வளரும் நீர்த்தாவரங்களும் கடலட்டைகளின் பெருக்கத்திற்கு வாய்ப்பான சூழலை வழங்குகின்றன.

இவ்வளவு வளமும் இன்று பயன்படுத்தப்படமுடியாத நிலை. முன்னரெல்லாம் இங்கு பிடிக்கும் மீன்கள் உள்ளூர் விற்பனைக்குப் போக, கடல் அட்டைகளும், சிங்கஇறால்களும் பதப்படுத்தப்பட்டு கொழும்புக்கு அனுப்பிவைக் கப்படும். போக்குவரத்தும், பதனிடு தலும் இயலாத நிலையில் அந்தத் தொழில் இன்று வழக்கொழிந்து போய்விட்டது.

ஜோசப்பிடமும் பாக்கியநாதனி டமும் இருந்து பெற்றுக்கொண்ட தகவல்கள்தான் இவை.



கூடையில் இருந்து தப்பிக்கத்துடித்து எகிறிப்பாய்ந்த சிவந்த இறால் ஒன்று வள்ளத்தினுள்ளே தேங்கிய நீரில் வீழ்ந்து அமைதியடைந்தது. கிடைத்ததைக்கொண்டு திருப்தியடையும் இதுவா விடுதலை? இல்லை. இழந்த பாரம்பரியப் பிரதேசங்கள் மீட்கப்படும்வரை இம் மீனவர்களின் உள்ளமும் அமைதியடையப் போவதில்லை.

கடைசிப் பட்டியும் இழுத்தாகி விட்டது. ஒரு கூடை கூட முற்றாக நிரம்பக்காணோம். அந்த மீனவர்க ளின் இறுதி எதிர்பார்ப்பும் தோல்வி யிலேயே முடிந்தது.

"முந்தியெல்லாம் எங்களது பகுதியில் வெளியார் எவருமே மீன் பிடிக்க வருவதில்லை. ஆனால் இன்று இடம்பெயர்ந்தவர்கள் எல்லோரும் இங்கேதான் தொழில் செய்கினம். மீன்களும் பகிரப்பட்டு விடுகின்றன. இதனால்தான் வரவர பிடிபடும் மீன்களும் குறைந்து கொண்டு போகின்றன. ம்... அவர்களும் வேறு எங்கேபோக முடியும்." வறுமையிலும் பகிர்ந்துண்ணும் சகோதரத்துவம் அந்த நாவாந்துறைவாசியில் புலப்பட்டது.

இதுவரை பூரணமாக அளவீடு செய்யப்படாத வளமாகவும் எல்லையற்ற உற்பத்தியை வழங்கக்கூடிய ஓர் மூலவளமாகவும் தமிழீழத்தின் கடல்வளம் காணப்படுகின்றது. ஆனால் இதன் சொந்தக்காரர்களின் வாழ்க்கைமுறையோ... வழங்குன்றிய நிலையில்!

எரிபொருட்தடை இவர்களை மோசமாகப் பாதித்துள்ளது. குப்பி விளக்கையே பயன்படுத்தமுடியாத பொருளாதாரநிலை. நிலவொளியிலா படிக்கமுடியும்? இதனால் பெரும்பாலான சிறுவர்கள் இங்கு பெற்றோருடன் இரவில் தொழிலுக் குச் சென்றுவிடுகின்றனர். இதனால் காலப்போக்கில் பாடசாலையையே இவர்கள் மறந்துவிடுகின்றார்கள்.

எம்மைச் சுற்றிலும் ஏராளமான வள்ளங்கள். உயிரைப் பணயம் வைத்து இராணுவத்தினரின் எல்லை வரை சென்று வந்த மீன்பிடி வள்ளங்களில் மட்டும் கொஞ்சம் பெரிய மீன்கள் குவிந்திருந்தன.

வானம் வெளுக்கத் தொடங் கியது. சிறுதிவுகளின் அடர் பற்றைக் காடுகளிலிருந்து விடியலுக்குக் காத்திருந்த பறவைகளெல்லாம் கூக்குரலெழுப்பி வள்ளங்களின் மேலாக வட்டமடித்துப் பறந்து கொண்டிருந்தன.

ஆனால், அரசின் கொடூரங்கள் ஆழப்பதிந்த இந்தச் சமூகம் மட்டும் வாழ்வின் அடிப்படை வசதிகளையும் இழந்த நிலையில் துன்பங்களின் நடுவே விடியும் என்ற நம்பிக்கையில் இன்னமும் காத்துக்கொண்டிருக் கிறது.

தண்ணீரிலே மீன் அழுதால்
கண்ணீரை யாரறிவார்?

பிரபஞ்சன்

நன்றி: நங்கூரம்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# காலங்கள்

சாந்தன்

## 1

## 1963

இருந்தாற்போலக் குளிர் காற்று முகத்திலடித்தது. ஒரு வெளியில் நுழைந்திருந்தார்கள். வெட்டவெளி. பென்னாம் பெரிது. சுற்றிவர வானம் முழுவதும் வெள்ளிகள் மின்னின.

எங்காவது வீடோ, கடைகளோ தெரிவதாயில்லை. காரின் வெளிச்சம் மட்டும் இருளை வெட்டியபடி முன்னால் ஓடிக்கொண்டிருக்கிறது....

"இந்த இடம் எதெண்டு தெரியுமோ..."

அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

".... கல்லுண்டாய்" அப்பு சொன்னார்.

அந்தப் பெயர் கண்ணனுக்கு விசித்திரமாகப்பட்டது. ஒருமுறை சொல்லிப்பார்த்தான்.

வெளி, போய்க்கொண்டே இருந்தது. காற்றும், வெளிகளும் இடைக்கிடை ஓடும் பற்றைகளும்.

எதிரில் ஒரு வண்டில். தட்டின் அடியில் கட்டியிருக்கிற அரிக்கன் லாம்பு ஆட ஆட வருகிறது. வண்டில் நெருங்க, கார் விளக்குப் பட்டு மாடுகளின் கண்கள் நீலமாய் மின்னுகின்றன.

கார், இடது புறம் ஒதுங்கி நின்று, பெரிய விளக்குகளை நூர்த்து வண்டிலுக்கு வழிவிட்டது. தடக் படக்கென்று சில்லுகள். மாட்டு வாடையும், புதுநெல்லின் சுணை மணமும் சேர்ந்து வீசின.

அப்போதுதான் கண்ணன் அதைக் கவனித்தான். "நெல்லு மூட்டைக்கு மேலை ஒரு ஆள் படுத்திருக்கு" அவன் கத்திய விதத்தில் தம்பியும், சின்னண்ணையும், நந்தனும் பின் கண்ணாடி வழியாக அவசரமாகப் பார்த்தார்கள்.

"கண்ணா, குழப்படி பண்ணாதை" அப்பு சொன்னார்.

கார் ஓடத்தொடங்கியதும் மீண்டும் குளிர் காற்று உள்ளே வீசியது. சுகமாயிருந்தது.

கடல் மணம் அடித்தது.

"கடல் வருகுது.." பெடியன்களுக்கு உற்சாகமாயிருந்தது.

"அங்கை, அதென்ன விளக்குகள், கடலிலை?.."

தூர, வலப்பக்கம், தெல்லுத் தெல்லாக ஒளிப்பொருட்கள்...

"மீன்பிடித் தோணிகள்..." எத்தனை என்று எண்ண ஆரம்பித்தார்கள்...

நேரே முன்னால், இன்னும் தொலைவில், இன்னும் வெளிச்சப் புள்ளிகள். கனக்க. வரிசையாக மின்னி மின்னி மறைவது மாதிரி... "அதுகளும் தோணிகளே?.."

"அதுதான் பட்டணம்... பட்டணத்து வெளிச்சம் தெரியுது.... எவ்வளவு வடிவா இருக்கு, பார்த்திங்களா?..." என்றார் அப்பு. "இன்னும் பத்து நிமிஷத்திலை அங்கை போயிடலாம்."

"இன்னும் பத்து நிமிஷந்தானா?" கண்ணனுக்கு ஏமாற்றமாயிருந்தது. இப்படியே போய்க்கொண்டிருக்க வேண்டும் போலிருந்தது....

## 2

## 1973

"பார்த்திங்களா?.. சொன்னன்...." என்றான் நிமலன், பெருமையாக.

ஒழுங்கை இலேசாக வளைகிற இடத்துடன் வளவுகள் முடிந்தன. வெளி விரிந்து கிடந்தது.

"சோக்கான இடம்..." என்றான் கண்ணன், தன்னையறியாமல்.

வலப்பக்கம் ஒரு மடம் பழையது. பொளிகல்லில. அதற்கெதிரில் ஒழுங்கையின் இடதுபுறம் அதே வயலில் ஒரு கேணி. இந்த வெய்யிலிலும் தண்ணீர்.

"எப்படி?..." என்றான் நிமலன் மீண்டும்.

"ஸ்ஸ்" என்று வியந்தார்கள், இவர்கள்.

"இவ்வளவு மரத்திலும் தேவையான ஸ்பெஸிமன் எடுக்கலாம்.." என்றான் குகன். முன்னால் காட்டி.

சாம்பல் பூத்த தடித்த இலைகளும் நீலப் பூக்களுமாய் ஒழுங்கையின் இருபுறமுமாய் வரிசையாய் கண்ணுக்கெட்டிய தூரம் வரை வேலிமாதிரி அடர்ந்திருந்தது, எருக்கலை.

"கட்டாயம் இருக்கும், மச்சான்..." தேவன் சொன்னான்.

பதினொரு மணி வெய்யில் கொழுத்திக்கொண்டிருந்தது. காற்றிலும் வெக்கை வந்தது. எருக்கம்பால் மணத்துடன். அந்த வரிசைகளுக்கு அப்பாலும் இப்பாலுமாய் அரிவுவெட்டுக்கு ஆயத்தமாக வயல்கள் விரிந்து கிடந்தன.

சைக்கிள்களை பூவரசுக்கடியில் விட்டுப்பூட்டிவிட்டு ஒவ்வொரு செடியாகப் பார்க்கத்தொடங்கினார்கள். மெல்லக் கொப்புகளை விலக்கி, இலை இலையாய் அடிப்பாகங்களைத் துருவத் தொடங்கினார்கள்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


"பயோலஜி படிக்கிறதுக்கு இந்தக் கல்லுண்டாய் ஒரு பக்கா இடம் எண்டு சுந்தரராமன் மாஸ்ரர் சொல்லியிருக்கிறார்..."

"உண்மைதான்... நீங்கள் மாரியிலை வந்து பார்க்கவேணும்..." நிமலன் சொன்னான்.

"...இந்த வயலெல்லாம் நிரம்பி வழியும். அப்ப, தவளைகூடச் செய்யலாம்..."

"இப்ப முதல்ல வண்ணாத்துப் பூச்சியை முடி. பிறகு தவளையைப் பார்க்கலாம்..." குகன் இடைவெட்டினான்.

"இப்ப, அராலிப் பாலத்தடியிலை மீன் இராதோ?"

"இருக்கும். ஆனா அது கலப்பு நீரல்லோ.. வளர்க்க ஏலாது..."

"போவமா அங்கை?"

"இதை முடிச்சிட்டு அங்கை போவம்.." குகன் வெளியின் விளிம்பில் தெரிந்த தென்னந் தோப்பைக் காட்டினான்.

ஓடினார்கள்.

"இங்கைபார்..." மிக மெதுவாக ஒரு இலையை விலக்கிக் காட்டினான்.

பொன்னுருண்டை போல ஒரு கூட்டுப்புழு.

## 3

## 1988

"பயமாயிருக்கா?..." வசந்தபுரம் சந்தி திரும்பும்போது கண்ணன் கேட்டான்.

"சீ... இதென்ன? இவ்வளவும் கண்டாச்சு.... இனி என்ன?" சீலன் உசாராகச் சொன்னான்.

"நீங்கள் கூடவாறியள்... இவ்வளவு சனம் போய் வருகுது.."

"இதுகள் இருக்குது.." கண்ணன், இரண்டு சைக்கிள்களிலும் முன்னால் சொருகியிருந்த வெள்ளைக் கொடிகளைக் காட்டிச் சிரித்தான், கசந்தது.



மெல்ல மிதித்தார்கள்.

"உதிலை இரண்டாவது இருக்கு..." சீலன் சொல்லும் போதே,

"ஓ.. மணக்குது..." என்றான் கண்ணன்.

வீதிப்பரிசோதனை நடத்திற இடம் இங்கிருந்தே தெரிந்தது. எதிர்ப்பக்கத்திலிருந்து வருபவர்கள் சைக்கிளில் ஏறிக்கொண்டிருக்கிற அதே இடத்தருகில் இவர்களுக்கு முன்னால் போகிறவர்கள் இறங்கி உருட்டத் தொடங்கினார்கள்..

"ஐ. சி. ஆயத்தமா?.."

சட்டைப் பைக்குள் பார்த்தபடி "ஓ.." என்றான் கண்ணன்.

வேகத்தைக் குறைத்து மெல்ல இறங்கி முன்பின்னாக... நெஞ்சு படபடக்க..

தெருவின் அகலத்தில் முக்கால் வாசியத் தடுத்துப் போட்டிருந்த பீப்பாய்களைத் தாண்டி... அடுத்து அதே மாதிரி எதிர்ப்பக்கம் கிடந்த மரத்தைத் தாண்டி ஒரு இழுபட்ட 'எஸ்' ஸாக இருக்க....

வரிசையைத் தொடர்ந்து அவர்களை அணுகினார்கள்.

வரிசை நகர்ந்தது. அடையாள அட்டையைக் கையில் எடுத்துக் கொண்ட போது, எத்தனை தரந்தான் என்றாலும் பயம் போகாது போலிருந்தது.

கூர்மீசையும் கூர்முழிகளுமாய் நின்ற சிப்பாய், கண்ணனின் சைக்கிள் கூடையைத் திறந்து வடிவாகப் பார்த்தான்.

'இதை இனிக் கழற்றி வைத்து விடவேண்டும்' என்று தீர்மானித்தான் கண்ணன்.

பொக்கற்றுக்களைத் தட்டும் போது, 'கனகாசு கொண்டு போகாதையுங்கோ...' என்று யாரோ சொல்லியிருந்தது நினைவு வந்தது.

"ப்போ..." சிப்பாய், கண்ணனை விட்டு சீலனிடம் போனான்.

கண்ணன், தான் முன்னே நின்ற மற்றவனிடம் போனான். நீட்டிய கையில் ஐ.சி. யை வைத்தான். மறித்து வைத்திருந்த ஏழெட்டு அப்பாவிகளை சற்றுத் தள்ளி இரண்டு சிப்பாய்கள் காவல் பார்த்தபடி நின்றார்கள். நிலத்தில் குந்தியிருந்த மனிதர்களில் ஒரு பொடியன் அறிமுகமானவன். மீன் வியாபாரி. அவனைப் பார்த்து தலையசைக்கக்கூட திராணி வராத தன்னில் வெறுப்பாயுமிருந்தது... "என்னையும் மறிப்பான்களோ?"

"ஸர்விஸ்?.." அட்டையைப்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

புரட்டிப் புரட்டிப் பார்த்துக்கொண் டிருந்தவனிடமிருந்து கேள்வி வந்தது.

"நோ.... ரீச்சர்..."

இவனுடைய மீசையும் முதலாவது ஆளுடையதைப்போலவே இருக்கிறது... இன்னும் முரடனாகத் தெரிகிறான்..

சிப்பாய், கண்ணனை ஏறிட்டுப் பார்த்தான். பார்வை, சந்தேகத்தில் தோய்ந்திருந்தது. கண்ணனுக்கு வேர்த்தது..

"கோ..."

'கடவுளே...' என்று மூச்சு விட்டான். அடையாள அட்டையை வாங்கிப் பத்திரமாகச் சட்டைப் பையில் வைத்தபடி சைக்கிளை உருட்டலானான்.

பின்னால் சிலன் வருகிறானா?

புற்றீசல் போல இவர்கள் மொய்த்திருக்க இடையில் தாங்கள்... நினைக்க மயிர்க்கூச்செறிந்தது. திரும்பி வரும்போது மீண்டும் இவர்களையெல்லாம் தாண்ட வேண்டும். இந்தக் கல்லுண்டாய் இப்படியாகுமென்று....

"இரண்டாவது கண்டமுந்தாண்டியாச்சு...." சிலனின் குரல் பின்னாலிருந்து வந்தது.

சைக்கிளில் ஏறுகிற இடம் வந்ததும் ஏறினார்கள்.

"அடுத்ததும் கூப்பிடுதொலை தானாம்... தென்னந் தோப்பு..."

"இன்னும் எத்தினை,... நாலு இடமோ?"

"போய் வாறதெண்டால், குறைஞ்சது பத்து இடத்திலை செக்கிங்... இருபது கிலோமீற்றர் கூட இல்லை..."

## 4

## 1989

"உங்கட மோட்டார் சைகிள் தானா இப்பிடி ஓடுது?.." பின்னால் உட்கார்ந்திருந்த ரேகா பகிடி விட்டாள்.

"....காத்தாய்ப் பறக்கிற சைக்கிள், இப்ப காத்துப் போனது மாதிரி..."

"ரேகா, இந்த இடத்திலை இறங்கி நடந்து போகவும் நான் தயார். எங்கட நிலத்தின்ரை அழகுக்கு, அதின்ரை செழிப்புக்கு, அதையெல்லாம் பயன்படுத்தாம விட்டிருக்கற எங்கட முட்டாள் தனத்துக்கு அல்லது அதைச் செய்யமுடியாத எங்கட நிலைமைக்கு- எல்லாம் இது நல்ல உதாரணம்... இந்த இடத்தை எனக்கு எவ்வளவு பிடிக்கும் எண்டு உனக்குத் தெரியுமா?..." என்றான் கண்ணன்.

"உங்கட விருப்பத்துகேத்தபடி தான் இப்ப ஒவ்வொரு நாளும் இந்தக் கல்லுண்டாய் வெளியாலை இரண்டுதரம் தாண்டக் கிடைச்சிருக்கே.." அவள் சிரித்தாள்.

".... நாங்கள் மனசார விரும்புறதெல்லாம் ஒருநாள் கிடைச்சே தீரும். எனக்கு அதிலை நம்பிக்கை இருக்கு...."

கண்களில் குறும்பும் நாணமும் கலந்து ஒளிந்தன.

## 5

## 1990

"இந்தச் சைக்கிளைக் கண்டு பிடிச்சவனுக்கு ஒரு சிலை வைக்க வேணும்..." என்றார் சொலமன்.

"மெய்தான்...." என்றார் மூர்த்தி.

"... இதில்லாட்டி எங்கட கதியென்ன, இப்ப?"

"முந்தி இப்பிடி ஓடியிருப்பமா, எப்பாலும்?"

"பொறுங்கோ.. ஏதோ இரையிற மாதிரிக் கிடக்கு..." கண்ணன் இடைமறித்தான்.

"சீ, அது காத்து..."

"இல்லை... அந்தா.." அவன் காட்டிய திசையில், தூர, சின்னதாக இரண்டு பொம்மர்கள் வழுகி வருவது தெரிகிறது..

இந்த இடத்தில் இவர்களுக்கு மேலே மந்தாரம் போட்டிருக்கிறது. ஆனால் பொம்மர்கள் தெரிகிற இடத்தில் மெல்லிய நீலமாய் வானம் தெரிந்தது. வெய்யிலில் விமானங்கள் மினுங்கின.

"பலாலியிலையிருந்து வாறான்... கோட்டைக்குத்தானோ?" என்று சொலமன் சொன்னார்.

".... உம்மட காது இதுகளுக்கு நல்லாய்ப் பழகிவிட்டுது, இப்ப..."

விமான இரைச்சல், இவர்களுக்கு முன்னால் போய்க்கொண்டிருந்தவர்களுக்கும் கேட்டிருக்க வேண்டும். அவர்கள் சைக்கிள்களும் வேகங் குறைந்து குழம்புவது தெரிகிறது. எதிர்ப்பக்கமிருந்து வந்த சைக்கிள்காரர்கள் வேகத்தை அதிகரிக்கிறார்கள்...

சத்தம் இப்போது தெளிவாகக் கேட்கிறது.

இரண்டல்ல, மூன்று..

"கோட்டைக்குத்தான்..."

''மாட்டொழுங்கையாலை திரும்புவமா?..."

"எங்க மூண்டு பேருக்கும் ஒரு குண்டை வீணாக்கமாட்டான்... பயப்பிடாம வாரும்..."

"ஹெலி, கிலி வந்தா?... இந்தக் கல்லுண்டாயிலை ஒதுங்க ஒரு இடமுமில்லை"

"வாறதாத் தெரியேல்லை.... அதுக்கிடையிலை நாங்கள் தாண்டி விடலாம் வாங்கோ"

விமானங்கள் கோட்டையைச் சுற்றி வட்டமிடுவது வடிவாகத் தெரிகிறது. "நாளாந்த நிகழ்ச்சியாய்ப் போட்டுது இது, எங்களுக்கு.."

"என்ன வாழ்க்கை இது. இப்படி ஒவ்வொரு நாளும்..." மூர்த்தி சலித்தார். "இதுவும் ஒரு வாழ்க்கையா?"

"இதுதான் வாழ்க்கை. மெய்யான வாழ்க்கை இதுதான். வாழ்க்கை என்கிறதுக்கு இப்பதான்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


அர்த்தமிருக்கு" கண்ணன் சொன்னான். நான்தான் இதைச் சொன்னேனா என்றிருந்தது.

"அந்தா, அந்தா... போடப் போறான்... போட்டிட்டான், போட்டிட்டான்.." மூர்த்தி பதறினார்.

குத்திப்பதிக்க விமானமொன்று மேலெழுவது தெரிகிறது. அது வட்டத்தைத் தொடரும் போது வட்டமிட்டுக்கொண்டிருந்த இன்னொன்று கீழே சறுகி... குண்டுகள் வெடிக்கின்றன. இங்கேயே அதிர்கிறது... படம்பார்ப்பது போல இருக்கிறது. ஆனால் இது மெய். தினசரி வேலைக்குப் போய்வரும் போதெல்லாம் இப்படிக்காண எத்தனை பேருக்கு கொடுத்து வைத்திருக்கிறது, உலகில்? "பார்த்தீங்களா இது என்ன சீவியம்?" என்றார் மூர்த்தி, மீண்டும்.

"மூர்த்தி, நீங்கள் கடவுளை நம்பிறது உண்மையெண்டால் "உப்பிடியெல்லாம் பேசக்கூடாது..." என்றார் சொலமன், உரிமையுடனும் உறுதியுடனும்.

## 6

## 2003

வசந்தபுரம் விளையாட்டரங்கிலிருந்து கரவொலிகளும் உற்சாகக் கூச்சல்களும் கேட்கின்றன.

" 'ஏஷியாட்- 2003' போட்டிகள் நடக்குதெல்லே...

அதுதான் தெருவிலும் இவ்வளவு சனம்..." வேகத்தைக் குறைக்க வேண்டி இருந்தது. கூட்டத்தில் வெளிநாட்டவர்கள் கணிசமாக்வே தெரிந்தார்கள்.

ஸ்ரேடியத்திற்கு எதிர்ப்புறம், தெருவுக்குத் தெற்கே கடலேரி பரந்து கிடக்கிறது. இடதுபக்கம் நாவாந்துறையிலும் வலதுபக்கம் காக்கைதீவிலுமாக மீன்பிடித் துறை முகங்கள், எதையோ பிடிக்கிற பெருவிரலும் சுண்டுவிரலும் போலக் கடலுக்குள் நீட்டிக்கொண்டிருப்பது தெரிகிறது.

> **அட்டைப்படம் சொல்லும் கவிதை**
>
> என் அருமைத் தாய்நாடே!
> உன் இனிய பாடலைக் கேட்டிருக்கிறேன்
> உன்னில் நான் கலந்திருக்கிறேன்
> நினைத் தினமும் நினைவேன்
> நீயே எனக்கு உயிர்.

"கொஞ்சம் ஆழமாக்கிவிட, இந்தக் கடல் எப்பிடியிருக்கு!"

கரையின் தூய வெண் மணற்பரப்பிடை பூம்பாத்திகளும், பூவரச மரங்களின் கீழ் சீமேந்து இருக்கைகளும் மாறி மாறி...

"முந்தி இவடத்திலை மூக்கைப் பிடிச்சுக்கொண்டு போறனாங்கள் நினைவிருக்கா?"

"குப்பை கூழம் நாத்தமெல்லாம் பழங்கதை..."

வீதி, முன்னரைப்போல் மூன்று பங்கு அகலமாக மாறியிருக்கிறது. வழுவழுவென்று சுத்தமாக தார்ப் பாயை விரித்தது போல நீளமாக.

தெருத் தீவுகளிலும், கரையோர நடைபாதைகளிலும் புளியும், வாகையும், மலைவேம்பும் ஓங்கி கிளை பரப்பத் துடிக்கின்றன...

காக்கைதீவுச் சந்தியில் கடைகள் களைகட்டியிருக்கினறன. கடைத்தெருவின் பின்னால் ஒரு நவீன குடியிருப்பும், அதை அண்டி ஆனால் இந்தப் பரபரப்புகளிலிருந்து விடுபட்டு தென்னந்தோப்பும் அடர்ந்துகிடக்கிறது. தோப்பிடை இருந்து அம்மன் கோவில் மாலைப் பூசை மணியோசை கேட்கிறது. "இவடம் அவ்வளவு மாறேல்லை...."

வலப்புறம் வயல்களும் இடப்புறம் தென்னஞ்சோலைகளும். கூடுதல் அடர்த்தியும், அழகும், பசுமையும்.

கடைகளும் கட்டிடங்களும் அடுத்த சந்தியைக் குறிக்கின்றன. முந்திய மாட்டொழுங்கை! எவ்வளவு மாறிவிட்டது..

தெற்குப்பக்கம், தென்னந்தோப்பைச் சுற்றிவந்த கடல், இப்போ இங்கே தெருவிலிருந்து கூப்பிடு தொலைக்குள் வந்திருக்கறது... 'படகுக்கழகம்' என்ற பெயரும், மண்டபத்தைத் தாண்டி அலங்காரப் படகுகளும் தெரிகின்றன. அது தாண்டியதும் கடற்கரை மீண்டும் விரிகிறது. தெருவோடு கூடவே வருகிறது.

வண்ணக் குடைகளும், விற்பனை வண்டிகளும், காற்று வாங்க வந்தவர்களுமாய் அந்த இடம் கலகலவென்று...

இறங்கி வலப்பக்கம் நடந்தார்கள். ஒரு நீள இரட்டைவட மணிமாலை போலத்தெரு...

கோவிலின் பின்புறம் சற்றுத்தள்ளியிருந்த மேட்டில் ஏறினார்கள். மேலே வந்ததும், மறுபுறம் ஏரி தெரிந்தது. இது நன்னீர் ஏரி. குட்டிக்கடல் போல. நடுவில் பச்சைப் பசேலென ஒரு குட்டித் தீவு.

"பாலம் வரை போகுது ஏரி... வழுக்கையாத்துத் தண்ணி இப்ப கடலுக்குள்ளை வீணா ஓடுறதில்லை."

பாலம் இங்கிருந்து வடிவாகத் தெரிந்தது. தெற்கே, சற்றுத் தள்ளி, புது உப்பளக் கட்டிடங்களும். செவ்வானம் பூத்திருந்த பின்னணியில் இவை நிழலுருக்களாய்...

ஏரிக்கரையில் நடந்தார்கள். அது ஒரு தெரு அகலமிருந்தது. ஆனால் நடைபாதைமட்டும். உடற் பயிற்சிக்காக விரைநடை நடப்பவர்கள்... கல்லூரி மாணவர் குழுவொன்று சிரிப்பும் கும்மாளமுமாய் வருகிறது...

வெறுமையாயிருந்த சீமேந்து வாங்கொன்றில் போய் அமர்ந்தார்கள். நீர்ப்பரப்பில் மின்விளக்குகளின் ஒளிக்கோடுகள் நெளிகின்றன. தெருவில் போக்குவரத்து அமளியாக இருக்கிறது, என்றாலும் இந்த இடம் சற்றுத்தள்ளி.

காற்று இப்போது நல்லாகவே வீச ஆரம்பித்தது. வானில் ஒவ்வொன்றாக வெள்ளிகள் சிமிட்டத்தொடங்கின.

நன்றி: வெளிச்சம்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# சிறகு விரிக்கத் துடிக்கும் ஒரு சின்னப் பறவை

பாலைச்சரித்து நிலவு விளையாடும்
பௌர்ணமி நாள்.
விளக்கணைக்கக்கூடப் பலமில்லாத
மெல்லிய காற்று.
வானச்சுவரில் முகில்கள் அப்பிக் கிடக்க
நிலவு நிர்வாணமான சாமப்பொழுது.
வயல்வெளியை உச்சிபிரித்த
செம்மணி வீதியில் நடக்கின்றேன்.
வெள்ளத்தால் கடலான தரைவெளி
இடையில் வந்த சுடலையில்
சடலமொன்று தணல்பூத்துக் கிடக்கிறது.
என் காலடி அரவத்தால்
கரையேறிய நண்டுகள்
வளைக்குள் உடல்மறைத்துக் கொள்கின்றன.
ஓலமிட்டபடி உயரப்பறக்கும்
அடையாளம் தெரியாத புள்ளினங்கள்
ஆட்காட்டியா? மீன்கொத்தியா?
எதுவாகவும் இருந்துவிட்டுப் போகட்டும்.
அழகாகப் பறக்கின்றனவே அதுபோதும்.
இவை போலப் பறக்கமுடியாதா?
எனக்கும் சிறகு முளைத்தால் எத்தனை ஆனந்தம்
பேயும் உறங்குகின்ற பொழுது இதுவாமே
எனக்குமட்டும் ஏன் உறக்கம் வரவில்லை?
"நாற்பதுக்கு மேலே தூக்கம் இருக்காது"
சரியாகச் சொன்னவனின் வாயில்
சர்க்கரை போடவேண்டும்.
நாவற்குழிப் பாலத்தின் மேலே வெளிச்சங்கள்
என்ன அது?
அட; பாரமேற்றிய வண்டில்கள் வருகின்றன.
வேகமாக ஒரு 'பிக்கப்' மின்னலெனவந்து
என்னைக் கடந்து உருவுகின்றது.
"பாவம் பொடியளுக்கும் நித்திரையில்லை"
சின்னவயதில் எத்தனை பாரம் சுமக்கின்றனர்.
உழைப்பவனுக்கு உறக்கமில்லை என்பது
எவ்வளவு உண்மை.
அழகு விரிந்து ஆட்சி நடத்துகின்ற
நிலவுநாள் நெஞ்சுக்கு நிறைவு.
இந்த எழிலை இவ்வூர் பருகாமல்
கடைவாய் வழியக் கண்மூடிக் கிடக்கிறது.
தூக்கத்தில் அப்படியென்ன சுகமிருக்கிறது?
யார் சொன்னவன்?
அவனை அழைத்துவா.
கள்ளியும், நாகதாளியும், நாயுருவியும் தவிர
உள்ளே வேறென்ன உண்டு?
என்ற கவிஞனை எழுப்பி வா
எம் மண் எத்தனை எழில் என்று
செம்மணியை இப்போது காட்டவேண்டும்.
சோம்பேறிகள் தூங்கிக் கிடப்பார்கள்
எங்கே தேடுவது?
வீரம் வரும்போதுதான் மீசை துடிக்கும்.
அது போல
போராடும் போதுதான் எல்லாம் பொலிவுறும்.
குண்டு வீச்சில் சிதறுண்டு போன
கட்டிடங்கள் கூட
நவீன ஓவியங்கள் போல அழகாகத்தானே
தெரிகின்றன.
அப்படியாயின் அழிவே அழகா?
இல்லை



சிலரின் தேகத்தில் தேமல் கூட அழகாக இருக்குமே
அது போலத்தான்
எங்கள் மண்ணில் எல்லாமே அழகுதான்.
மண்டைதீவிலிருந்து ஏவிய எறிகணை வெடித்து
அரியாலைப் பக்கம் அதிர்கின்றது.
கோழிகள் ஏறும் மரத்தில் மரநாய் புகுந்தது போல
ஊர் கலங்கி விட்டது.
எதிரியுள்ளவரை அழகை அனுபவிக்கமுடியாது.
முத்திரைச் சந்தைக்கு முகம் காட்டி
நான் திரும்பி நடக்கிறேன்.
வேகமாக ஒரு 'பிக்கப்' மின்னலென வந்து
என்னைக் கடந்து உருவுகின்றது.
இனி விடியும்.

-புதுவை இரத்தினதுரை-

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாட்டார் பாடலில் கமுகஞ் சண்டை

ஈழத்தில் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் (1797-1948) ஆட்சியாளருக்கெதிராக எதிர்ப்பியக்கங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறுவிதமாக இடம் பெற்றிருக்கின்றன. 1802ம் ஆண்டு 27ம் திகதி செய்துகொள்ளப்பட்ட ஏமியன் உடன்படிக்கையின்படி இலங்கையிலுள்ள டச்சுப்பிரதேசங்கள் அனைத்தும் பிரித்தானியர் வசமாகின. கண்டிராச்சியமும் வன்னிராச்சியமும் சுதந்திரமாகவே இயங்கின. கண்டிராச்சியத்தில் கண்ணுச்சாமி என்னும் இயற்பெயருள்ள தமிழ் அரசன் சிறிவிக்கிரமராசசிங்கன் என்னும் சிம்மாசனப் பெயருடன் ஆட்சிபுரிந்து வந்தார். வன்னிராச்சியத்தை குலசேகரம் வயிரமுத்து பண்டாரவன்னியன் ஆண்டுவந்தான். 1803 ஆம் ஆண்டில் பண்டாரவன்னியன் தோற்கடிக்கப்படும் வரை வன்னி சுதந்திரச் சிற்றரசாகவே இருந்தது. எனினும் 1811 ஆம் ஆண்டுவரை பண்டாரவன்னியன் ஆங்கில நிர்வாகத்திற்கெதிரான போராட்டங்களில் ஈடுபட்டு, வீரச்சாவை எய்தினான். கண்டிராச்சியத்தைக் கைப்பற்றுவதற்கு ஆங்கிலேயர் பல முறை படையெடுத்தும் முடியாமற் போய் விட்டது. கண்டிப்படையெடுப்பில் தோல்விகண்ட ஆள்பதி நோத் பதவியை இழக்கவேண்டி ஏற்பட்டது. பிலிமத்தலாவை என்னும் கண்டி அதிகாரியின் சூழ்ச்சியினாலேயே கண்டிராச்சியம் பிரித்தானியர் வசமாகியது. 1815 இல் பிரித்தானியர் கண்டியைக் கைப்பற்றியபோதும் அதன் பின்பும் அவர்களுக்கெதிரான கலகங்கள் இடம்பெற்றன. 1918ஆம் ஆண்டு கண்டிக் கலகம் இவ்வகையில் குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியர் தம் ஆட்சியை நிலைநிறுத்தத் தமக்கு விசுவாசமான அடிவருடிகளான சிலரைப் பரம்பரை பரம்பரையாக உத்தியோகத்தில் அமர்த்தினர். அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர், நீதிபதிகள், கலெக்டர்கள் போன்ற பதவிகளை வெள்ளைத்துரைமாரே வகித்தனர். மணியகாரர், முதலியார், உடையார், விதானையார், ஆகிய பதவிகளை ஆட்சியாளருக்கு விசுவாசமான உயர்குழுவினர் வகித்து வந்தனர். இவர்கள் செல்வமும் செல்வாக்கும் பெற்ற ஐரோப்பிய பிரபுக்களைப் போலத் தங்களைப் பாவனை செய்துகொண்டனர். விளைநிலங்கள் இவர்களின் உடைமையாகவே இருந்தன. விவசாயமே சாதரண மக்களின் தொழிலாக இருந்தது. ஏழை விவசாயிகளுக்குச் சொந்தமான சிறிதளவு நிலத்தையும் சந்தர்ப்பம் வாய்க்கும்போது உயர் குலத்தினர் அபகரித்துக்கொண்டனர். எனவே பாட்டாளி மக்கள் பெரும்பாலும் விவசாயக் கூலியாளராக அல்லது வேட்டையாடுவோராகவே இருந்தனர்.

வெள்ளைத்துரைமார் பிரித்தானியரின் நலவுரிமைகளைப் பேணுவதில் கண்ணுங்கருத்துமாயிருக்க சுதேச உயர்குலத்தினர் தங்கள் நலவுரிமைகளைக் காப்பதில் கருத்தைச் செலுத்தினர்.

வெள்ளைத்துரைமாரின் நிர்வாகமும் ஊழல் நிறைந்ததாகவே காணப்பட்டது. ஆறுமுகநாவலரின் அந்திம காலத்தில் (1822-1879) யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் துவைனம் துரையின் அநீதி மிகப் பிரசித்தமானது; மழையின்றிய பஞ்சகாலத்திலும் ஏழைகளுக்கு கிடைக்க வேண்டிய அரசாங்க உதவிகளை துவைனமும் கீழுள்ளவர்களும் அப்படியே உறிஞ்சிவிட்டார்கள். (பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை 'ஆறுமுகநாவலர்' நாவலர் நூற்றாண்டு நிறைவு மஞ்சரி, சாவகச்சேரி 1979. பக் 127)

இக்காலத்தில் வவுனியா முல்லைத்தீவுப் பகுதிக்கு உதவி அரசாங்க அதிபராக இருந்தவர் கோட்டன்துரை (1.4.1883 - 20.10.1883). இவருக்கு கீழே இருந்த சுதேச பிரபுகளும் தங்கருமம் பார்ப்பதில் சமர்த்தர்களாயிருந்தனர். எனவே பாதிக்கப்பட்வர்கள் பாட்டாளி மக்களே. அக்காலத்தில் மத்தியகர வர்க்கம் தேற்றம் பெறவில்லை.

தண்ணீரூற்றிலுள்ள உயர் குழாத்தினது நெல்வயல்களுக்கு நீர்ப்பாசனம் செய்வதற்கு இடைஞ்சலாக கமுகஞ்சோலை இருந்தது. இக்கமுகஞ்சோலை ஏழைமக்களுக்குரியது. இவர்களுக்கு எந்தவித அரசியல் செல்வாக்கும் இருக்கவில்லை. தம் பொருளாதார நலத்தைப் பேணுவற்காக கமுகுகளைத் தறிப்பதன்மூலம் நெல்விளைச்சலைப் பெருக்கலாம்; அரசுக்கும் அதிக வரி கிடைக்கும் எனக் கோட்டன் துரைக்குச் சிபாரிசு செய்தனர் சுதேச உத்தியோகத்தர்கள். கமுகு மரங்களைத் தறிக்கும்படி கோட்டன் துரையிடமிருந்து உத்தரவு வந்தது.

இவ்வுத்தரவை எதிர்த்துக் கலகஞ் செய்தனர் பாட்டாளிமக்கள். இவ்வெதிர்ப்பியக்கத்திற்குத் தலைமை தாங்கினார் காட்டுராசா கதிர்வேல் வினாசி என்பவர். முல்லைத்தீவுப் பகுதி முல்லை, மருதம், நெய்தல் நிலங்கள் பொதிந்த பகுதியாகும். காடும் காடு சார்ந்த இடமுமே முல்லைநிலம். முல்லைநில மக்கள் வேட்டையாடுவதிலும் காடுபடு திரவியங்களான யானைத்தந்தம், சாயவேர், மான்கொம்பு, மான்

-முல்லைமணி-

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



## எங்கள் தேசம்

தமிழீழம் எமது உயிர்
தமிழீழம் எமது உடல்
தமிழீழமும் நாமும் ஒன்று

- ஓவியர் செம்மலையான் -

தோல், புலித்தோல் ஆகியவற்றைச் சேகரிப்பதிலும் ஈடுபடுவர். இவர்களில் தலைவனாக கதிர்வேல் வினாசி திகழ்ந்திருக்கவேண்டும். இதனால் இவருக்குக் காட்டுராசா என்ற பட்டம் கிடைத்திருக்கலாம். இவர்களின் எதிர்ப்பைச் சமாளிக்க முடியாது கோட்டன்துரை ஓட்டம் எடுக்கவேண்டி ஏற்பட்டது.

இந்நிகழ்ச்சியைச் சித்தரிப்பதே 'கமுகஞ் சண்டை' என மகுடமிட்ட நாட்டார் பாடல். (பதிப்பு; முல்லைமணி, தண்ணீரூற்று கதிரவேலு வினாசித்தம்பி நினைவு வெளியீடு, யாழ்ப்பாணம். 1979 பக்கம் 8) வாய்மொழியாக இருந்த இப்பாடலை வற்றாப்பளை சின்னப்பிள்ளை இராசசிங்கத்திடம் கேட்டு எழுதித் தந்தவர் கணுக்கேணிசோதிடர் இராமலிங்கம் அவர்கள். இப்பாடலில் சிறு பகுதிகள் விடுபட்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

"கமுகு தறிக்கில் தலையுடைபடுவீர்
சங்காரப் பயல்காள்

கத்திக்குத்து விழுகுது பார் பார்
காதறு சாய் பென்றான்

திரண்டசனத்தைக் கண்ணால்
கண்டான் கோட்டன் துரைதானும்

குமுகுமு என்றே வாரிப்பாயுது
குஞ்சி நிலக்குதிரை

அரைநாழிக்குள் அரண்மனை
சேர்ந்தான் கோட்டன்
துரைதானும்"

ஓட்டம் எடுத்த கோட்டன் துரை யாழ்ப்பாண அரச அதிபர் துவைனம் துரைக்குச் செய்தி அனுப்பினான். துவைனம் துரைக்கு இந்த நிகழ்ச்சி பெருஞ்சினத்தை மூட்டியது. கலகல என அட்டகாசச் சிரிப்புச் சிரித்தார் அவர். அவரின் மீசை துடித்து கண்கள் தீப்பந்தங்கள் ஆயின. வாசல் மந்திரி தாமோதரியை அழைத்து ஆணையிட்டார். மன்னார் பரவர் படையுடன் தண்ணீரூற்றுக்குச் சென்று முகாமிட்டுக் கமுகம்சோலையை அழிக்குமாறு கட்டளையிட்டார்.

வாசலில் மந்திரி தாமோதரியை
வாரும் நீரென்றான்

கூடாரங்கள் குடிவகை ஏற்று
குரிசை நீ ரென்றான்

மருந்து, குண்டு, இடிதுப்பாக்கி
வண்டியில் ஏற்றென்றான்

குரிசை- மன்னார் பரவர் படைத் தலைவனாக இருக்கலாம். தாமோதரி- அரச அதிபருக்குக் கீழ் உள்ள உயர் அதிகாரியாக- கேற் முதலியாராக இருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு. பெரியதுரையும் இப்படையெடுப்பின் போது தண்ணீரூற்றுக்குச் சென்றார்.

அங்கே காசி உடையார், கோணர் விதானை, வன்னியசிங்க முதலியார் ஆகியோர் அழைக்கப்படுகின்றனர். பெரியதுரையின் அழைப்பைச் செவியுற்ற இவர்கள்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



அச்சத்தால் நடுநடுங்கினர். வன்னிய சிங்கர் தன் உத்தியோக உடைகளை அணிய மறந்து பெரிய துரையிடம் சாதாரண உடையுடன் சென்றார். பெரிய துரைக்குக் கோபம் வந்துவிட்டது.

*சட்டை தலைப்பா தன்னை*
*மறந்தார் வன்னிய சிங்கருமே*
*சப்பாத்துத் தோல் தன்னை*
*மறந்தார் வன்னிய சிங்கருமே*
*வன்னியசிங்கா மதிகேடாநீ வாடா*
*முன்னாலே*
*சப்பாத்தின்றி வந்திடலாமோ*
*வன்னியசிங்கா நீ*
*போ போ என்று சினந்து*
*சொன்னான் பெரியதுரைதானும்*

வன்னியசிங்கர் பெரியதுரையைச் சமாதானப்படுத்திக் கமுகு தறிக்கும் பணியில் ஈடுபடுகின்றார். பெருமழை பெய்துகொண்டிருந்தது. நிலமோ சதுப்பு நிலம்; அட்டைக் கடி ஒருபுறம். இந்தநிலையில் ஏவலர் கமுகுகளைத் தறித்து வீழ்த்துகின்றனர். இவர்கள் தம் வேதனையை வெளிப்படுத்துகின்றனர். உள்ளூர இவர்களுக்கு இவ்வேலையைச் செய்யவிருப்பமில்லை என்பது இவர்கள் கூற்றிலிருந்து வெளிப்படுகின்றது.

*மழையும் பொழியுது மயிரும்*
*நனையுது வன்னயி சிங்கையா*
*மாட்டோம் என்றால் கேட்கிறீர்*
*இல்லை வன்னிய சிங்கையா*
*சுளையில் அட்டை சூழ்ந்து கடிக்க*
*துடைப்பார் கையாலே*
*சுற்றிப் பார்த்துக் கமுகு தறிப்பார்*
*சூழ்ந்த வினையாலே.*

கமுகுகள் தறிக்கப்பட்டன. ஊரில் உள்ள ஆடுகள், கோழிகள் அனைத்தும் படையினருக்கு உணவாகிவிட்டன.

"கமுகஞ்சண்டை" என்னும் இப்பாடல் நமக்கு உணர்த்துவன எவை? மிகச் சாதாரண நிகழ்ச்சியொன்று துவனம் துரைக்கும் கோபத்தை ஊட்டியது ஏன்? இவை சிந்தனைக்குரியவை.

1. அந்நியரான ஆங்கிலேயர் தமது ஆட்சிக்கு எதிராக மக்கள் கிளம்பி புரட்சி செய்து தம்மரசை வீழ்த்தி விடுவார்களோ என்ற அச்சம் அவர்களுக்கு இருந்தது. அதுவும் வன்னியிலே பிரித்தானியர் முகம் கொடுக்கவேண்டியிருந்த எதிர்ப்பியக்கம் மிகவும் வலுவானதாக இருந்தமை நினைவுக்கு வந்திருக்கலாம். எனவே எதிர்ப்பு மிகச் சாதாரணமானதாக- ஒரு சிறிய சம்பவம் தொடர்பானதாக- புறக்கணிக்கத்தக்க சிறியதாக இருந்த போதும் அதனை முளையிலேயே கிள்ளிவிட வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கிருந்தது.

2. நாவலர் சுட்டிக்காட்டியபடி துவைனம் துரையின் ஆட்சியில் ஊழலும் அநீதியும் நிறைந்திருந்தது. ஏழை மக்களின் நலன்களைச் சற்றும் கருத்தில் கொள்ளாது உயர் குழாத்தின் நலன்களைப் பேணுவதிலேயே அதிக கவனம் செலுத்தியிருந்தமை நோக்கத்தக்கது. "யாழ்ப்பாணத்துக் கச்சேரி அநீதி, பொய், கோள் முதலிய புத்தகங்கள் படிப்பிக்கிற கலீசு (College). அகற்குத் தலைவர் (Principal)" துவைனம் துரை என்கிறார் நாவலர். (இது நல்லசமயம் 5ம் பக்கம்) வன்னியைப் பொறுத்த அளவிலும் இவரது கொள்கையில் மாற்றம் இருக்கவில்லை.

3. வீரமும் விடுதலை உணர்வும் வன்னிமக்களின் இரத்தத்தில் ஊறியிருக்கின்றன. சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் இவை பீறிட்டு எழுகின்றன. 'வெள்ளியிட்ட காலுக்கு வெறுங்கால் அடிமையோ' என இங்கு நிலவும் முதுமொழி இதனையே சுட்டுகின்றது.

4. சமுதாய அமைப்பின் கூறுகள் சிலவற்றை இப்பாடல் மூலம் அறிய முடிகின்றது. சுதேச ஆளும் வர்க்கத்திற்கும் ஆளப்படும் பாட்டாளி மக்களுக்குமிடையேயுள்ள வர்க்க முரண்பாடு, சுரண்டல் ஆகியவை கமுகஞ்சண்டையில் பிரதிபலிக்கின்றன. பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்னர் அங்குள்ள பிரபுக்கள் எப்படி நடந்துகொண்டார்களோ அதே பாணியில்தான் இங்குள்ள உயர்குழாமும் நடந்து கொண்டிருக்கிறது.

5. தண்ணீரூற்று, முள்ளியவளைப் பகுதி நீர்வளமும் நிலவளமும் நிறைந்தது. இயற்கையான நீரூற்றுக்கள் பல இங்கு காணப்படுகின்றன. சதுப்பு நிலத்திலேயே கமுகுகள் செழித்து வளரும். அட்டைகள் அதிகமாக இப்படியான நிலத்திலேயே காணப்படும்.

"காய்மாண்ட தெங்கின் பழம்
முற்றி கமுகின் எற்றி வருக்கை கிறி
தேமாங்கனி சிதறி வாழைப்பழங்கள்
சிந்தும் ஏமாங்கதநாடுக"

போன்ற ஊர்தான் தண்ணீரூற்று என பிறமாவட்டத்தார் புகழ்ந்துரைப்பது நோக்கத்தக்கது.

6. வெள்ளைத்துரைமாரைக் கண்டவுடனே சுதேச உத்தியோகத்தர் அச்சத்தால் நடுநடுங்கினர்.

"பேராசைக் காரனடா பார்ப்பான்-
அவன்
பெரியதுரை என்னில் உடல்
வேர்ப்பான்"

எனப் பாரதி பாடியது அக்கால வன்னி உத்தியோகத்தரைப் பொறுத்த அளவிலும் பொருந்தும்.

7. வெள்ளைத் துரைமார் சுதேச உத்தியோகத்தருடன் மிகவும் கொடுரமான முறையில் நடந்துகொண்ட போதும் அவர்கள் எத்தகைய அவமானங்களையும் பொருட்படுத்தாது அடிபணிந்து நடந்துகொள்வதால் பரம்பரை பரம்பரையாக உத்தியோகங்களைப் பெற்று ;தங்கள் பொருளாதாரத்தையும் சமூக அந்தஸ்தையும் மேம்படுத்திக் கொள்ள முடிந்தது.

எனவே "கமுகஞ்சண்டை" என்னும் நாட்டார் பாடல் பத்தொன்பதாம் நூற்றாண்டின் வன்னிப்பகுதியிலிருந்த சமுதாய நிலைமைகள், வர்க்க முண்பாடுகள், சுரண்டல்கள், வீரம், சுதந்திர உணர்ச்சி ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகும் எனக்கொள்ளலாம்.

நன்றி:
(வெளிச்சம் ஆடி, ஆவணி 1992)

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# உளவியல்

## மனநோயும், சமூக - கலாச்சார - பொருளாதார நிலையும்

மனநோயானது உடலியல், உளவியல் மற்றும் சமூகவியல் காரணங்களினாலேதான் தோன்றுகின்றது. பேய், பிசாசு, மந்திரம், பில்லிசூனியம் போன்றவற்றால் நிச்சயமாகத் தோன்றுவதில்லை.

உடலமைப்பு, பாரம்பரியம், குடும்ப சூழ்நிலை, சமூக- கலாச்சார- பொருளாதார நிலைகள், பண்பியல் தொகுப்பு மற்றும் மனவளர்ச்சி போன்றவற்றில் ஏற்படும் குறைபாடுகள் என்பவற்றால்தான் மனநோய் ஏற்படுகின்றது.

மேற்கூறிய காரணங்கள் தனித்து அல்லது இணைந்து செயல்படும் போது பல்வேறு பிரச்சினைகள் தோன்றுகின்றன. மனிதன் அப்பிரச்சினைகளைத் தீர்க்க அல்லது சமாளிக்க முயலும்போது, சிலசமயம் தோல்வியடைய நேரிடுகிறது. இத்தகைய தோல்விகளை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் ஒருவருக்கொருவர் வேறுபட்டு அமைகிறது. வாழ்க்கையில் பெரிய அதிர்ச்சியான சம்பவம் கூட சிலரை அவ்வளவாகப் பாதிப்பதில்லை. ஆனால், சிறு ஏமாற்றம் அல்லது சிறு அதிர்ச்சி சிலரை மிகவும் பாதித்து விடுகிறது. எனவே ஒவ்வொருவருடைய மன உறுதியைப் பொறுத்தும், பண்பியல் தொகுப்பைப் பொறுத்தும் (Personality) அவரது மனநலம் அமைகிறது.

வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் மனிதன் தனது சுற்றுப் புறச் சூழ்நிலைகளின் ஆதிக்கத்தை எதிர்த்து அல்லது இணைந்து செயலாற்றத் தயாராக இருத்தல் வேண்டும். அப்போது தான் வெற்றி கிடைக்கிறது. ஆனால், இத்தகைய மனப்பாங்கு இல்லாதவர்கள் எண்ணங்களிலும், உணர்ச்சிகளிலும், செயற்பாடுகளிலும் மாறுபாடுகள் உண்டாகி மனம் குழம்பி நாளடைவில் மனநோய்க்கு ஆளாகும் நிலை ஏற்படுகிறது.

மனநோய் ஏற்படக் காரணங்களான உடலமைப்பு, (Constitution) பாரம்பரியம் (Genetics) குடும்பச் சூழ்நிலை என்பவற்றுடன் சமூக- கலாசார- பொருளாதார நிலையானது குறிப்பிடக்கூடிய ஒரு காரணியாக உள்ளது. என்றுமே தீர்வுகாண இயலாத ஒன்றாக சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் உலகில் நிலைபெற்றிருக்கின்றன.

வறுமையின் கோரப்பிடியில் அவதியுறும் மக்களுக்கு மனநோய் வாய்ப்படும் அபாயம், வசதி படைத்தவர்களைக்காட்டிலும் அதிகம் என்பது ஆராய்ச்சிகளின் வாயிலாக நிரூபணம் ஆகியிருக்கிறது. மனநல மருத்துவமனைகளில் பெரும்பாலானோர் பொருளாதாரக் கஷ்ரங்கள் உள்ளவர்களே.

உதாரணமாக தொழில் வாய்ப்புக்கள் குறைந்த அல்லது, ஊதியம் குறைந்த தொழில்களில் ஈடுபடுவோர் தங்களது குடும்பத்தினரை சரிவர நடாத்த இயலாமல் சிரமப் படுவர். இத்தகைய சூழ்நிலையில் பிள்ளைகளின் படிப்பு, மருத்துவச் செலவு, திருமணம் போன்ற செலவுக்ளுக்கு கடன்வாங்க நேரிடுகிறது. எதிர்பாராதவிதமாக நோய் வாய்ப்பட நேரிடும்போது அவரது வருவாயும் குறைகிறது. திடீரென எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டால் அதனைச் சமாளிக்கமுடியாமல் போய்விடுகிறது. இதனால் அவருக்கு மனப்பாரம் ஏற்பட்டு பயம், பதட்டம் முதலியன உருவாகி சுயமதிப்பு இழந்து மனச்சோர்வுற்று எப்போதும் எரிந்துவிழும் நிலையை அடைகிறார். குடும்பத்திலும், சமூகத்திலும் அவரது மதிப்பு குறைந்து பாதுகாப்பற்ற உணர்வுகொள்கிறார். மேலும் குடும்பவாழ்க்கையில் வெறுப்பு தோன்றி பொருளாதாரப் பழுவைத் தாங்கமுடியாமல் இறுதியில் மனத்தளர்ச்சி நோய்க்கு ஆளாகிறார். இச்சூழலிருந்து விடுபட சிலநேரங்களில் தற்கொலை முயற்சிகளில் கூட ஈடுபடுகிறார்.

பொருளாதார காரணங்கள் தவிர அளவுக்கதிகமான வேளைப் பளு, திறமைக்கு மீறிய வேலை, திருப்தியற்ற வேலை, மேலதிகாரியின் அச்சுறுத்தல், பதவி நீக்கம் போன்ற பல்வேறு காரணங்களும் மனநோய்க்கு வித்திடுகின்றன. முதிர்மனநோய்கள் பொதுவாக சமூகக் கலாச்சாரப் பொருளாதாரத்தில் மிகத்தாழ்ந்த நிலையில் உள்ள குடும்பங்களிலேயே அதிகம் காணப் படுகின்றன என கூறப்படுகின்றது. தவறான பெற்றோர்களைக் கொண்ட பிள்ளைகள் பிற்காலத்தில் மனநோய்க்கு ஆளாகி சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுகின்றனர் என்றும், சிறைச்சாலைகளில் உள்ள குற்றவாளிகளில் 90 சதவீதமானோர் இத்தகையவர்களே என்றும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அதிக நபர்களைக்கொண்ட வசதியற்ற குடும்பங்கள், அந்தரங்கம் இல்லாத வாழ்க்கை முறைகள் போன்றவைகளும் மனநோய்க்கு முக்கிய காரணங்களாக அமைகின்றன.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# "நெருப்பு"

## முருகையன்

"பல்லாண்டு பாடுகிறோம் தமிழ்
அன்னைக்கு,
பாண்டியரே சேரர்களே, சோழர் மாரே
எல்லோரும் வாருங்கள்;
இந்த நாட்டின்
இளமை பயில் தமிழ் திரளே! வருக" என்று
பொல்லாத இனப்பகையை எதிர்ப்பதற்குப்
போர்முரசு கொட்டினோம். அந்தக் காலம்
எல்லாளன் வழிவந்தோர்
புலிபோற் சீறி
எழுச்சி கொண்டார்.
புது நிலைமை - இந்தக் காலம்
இந்து சமுத்திரத்துக்கும் அப்பால் நின்றே
எவனேனும் கைகொடுப்பான் என்று நம்பும்
சிந்தனையை ஒழித்து விட்டோம்
ஆதலாலே.
திடமான தன்வலிமைத் துணிவு கொண்டோம்
சொந்தத்திலே சிந்தித்தோம்,
திட்டம் தீட்டிச்
சுடர் கொளுத்தி நெஞ்சகத்தில் விளக்கு
வைத்தோம்
நொந்தற்றுப் போக இனி ஒப்பமாட்டோம்
நூராத ஒளிவிளக்கை காத்து வாழ்வோம்.
வால் பிடிக்கும் பழம் போக்கை
விட்டுவிட்டோம்.
வளைந்து நின்று தயங்குவதை நிறுத்தி
விட்டோம்
பால் குடிக்கும் குழந்தைகளா தமிழர்?
இல்லை!
பயிற்சி பெற இளைஞர்களைப் பெற்றுத் தந்து
வேல் பிடிக்கும் பழ மரபின் வீரப் பண்பை
விருத்தி செய்து வருகின்ற விருப்பம்
உள்ளோர்
கால் பிடித்துக் கை பிடித்துக் கெஞ்சி வாழும்
கடை கெட்ட பேதமையை ஒப்ப மாட்டோம்.
பண்பாட்டில் தனித்தன்மை உடைய நாங்கள்,
கோயில்களும் கலை நெறியும் உடைய
நாங்கள்,
திண்டாடித் தெருக்களிலே அகதியாகித்
தயங்கி நின்று தத்தளித்துச் சிதையலாமோ?
கண் மூடிக் கிடப்பதில்லை
உயிர்த்து வந்து
கயமைகளைச் சுட்டெரிப்போம் . சுடலை
நீறாய்!
நெஞ்சகத்தில் மூண்டு வந்த உணர்ச்சி என்ற
நெருப்பெடுத்து விளக்கேற்றி ஒளிர்வு பெற்று,
சஞ்சலத்தை,
சதிகாரர் பூட்ட எண்ணும் சங்கிலியை,
அறுப்பதற்குக் கருவி காண்போம்
பஞ்சுமலை தீபற்றி எரிதல் போலே
பழங்கால அறியாமை அழிந்து போக,
வெஞ்சமரில் அறம், நீதி வெல்லக் காண்போம்
விடாமுயற்சிக் கடுந்தவத்தால் வெற்றி
காண்போம்.

**நன்றி:**
**(வெளிச்சம் புரட்டாதி-ஐப்பசி 1991)**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



சிறீலங்கா விமானக் குண்டுவீச்சால் சிதையுண்ட வீடுகள்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


## பொன்னிற மாலையைக் கொன்ற போர் விமானங்கள்.

உழைப்பால் செழிக்கிற பூமி மீது
போர் விமானம்
கோபம் கொண்டு குத்தி எழும்போது
சூரியன் கரிய புகையுள் மறையும்.

தென்னை முறியும்
கமுகு சரியும்
காற்றில் ஒலித்த பாடல் அமுங்கும்
சீழ்க்கை அடித்தபடி
தெருவழி வந்தவன்
ஆவியொடுங்கும்

அன்போடு தங்கை
குழைபோட்டு வளர்த்த
ஆடும் குட்டியும்
கட்டும் அறுக்காது சாகும்.

காதல்வயப்பட்ட பட்சிகள்
திசைகள் கெட்டு
அந்தரத்தே திரியும்.

பொன்னிறமான மாலைப்பொழுது
என்னவாய்.....

## கனவு மெய்ப்படும்

குண்டுவிழுந்து
சிதைந்த வீட்டின் முன்னே
மறுநாள் பந்தல் போட்டு
விழா நடக்கும்; வீரர் நடப்பர்
முற்றத்து வாழை
சிறைப்படாத
எங்கள் சின்ன வீரர்களின்
சிரிப்பைப் போல
மண்ணைக் கீறி
முளை தள்ளும் விந்தை நிகழும்.
இன்னும் சிகப்பாய்
மறுநாளும் சூரியன் எழுவான்.
காற்றில் ஏர்ப் பாடலும்
நாற்றின் மணமும் இருக்கும்.
கட்டுமரங்கள்
காற்றுப்பார்த்து பாயை விரிக்கும்.
எதற்கும் அடங்காது
யார்க்கும் அஞ்சாது
எங்கள் மண் நிமிரும்.
கனவு மெய்ப்படும்
எங்கள் மண்ணின் மனிதர்கள்
நெருப்பாய்த்தான் இருக்கிறார்கள்.

## முடிவிலாத் துயரில் அழுகிற அகதி முகம்

நெருப்பு மனிதர்களின்
வாசம் படக்கூட
கொடுத்து வைக்காமல்
தூரத்தே....
அவமாய்க் கழிகிற வாழ்வே
எமக்கென ஆகி
இயந்திர வாழ்வின்
இயக்கச் சுழற்சியில்
வெந்து சுருளும்
முகமிழந்த
மனிதரென ஆனோம்.
சுந்தரத் தமிழும் மறந்து
துடிக்கின்ற
வாழ்வோர் கேடா?
துடிப்புடன் எழவும் நிமிரவும்
எப்படி நாம் முதலில் கற்போம்?

- சுபா -

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# சொந்த நாடே சொர்க்கம்

-ஞானகுரு-

"கந்தையருக்கு அடிச்சதெல்லோ குருசந்திர யோகம்."

"என்ன செல்லையா? கந்தையரைப் பற்றின கதையோட வாறீர்."

"கந்தையரும் பெண்சாதியும் ஜெர்மனியிலை மகளோட போய் இருக்கினமெல்லே வாத்தியர், இனி இஞ்சை வரமாட்டினமாம், தம்பியாருக்குப் படமும் அனுப்பிக் காயிதமும் எழுதியிருக்கிறார் கந்தையர், படத்திலை பாத்தன் மனிசனும் மனிசியும் நல்ல சோக்கா இருக்கினம்."

"இஞ்சை வராமல் ஜெர்மனியிலை இருக்கிறது குருசந்திரயோகமோ?"

"இஞ்சை உந்த அடிபுடி சண்டையளுக்கை அகப்படாமல் அங்கை நிம்மதியாகச் சீவிக்கிறது குருசந்திர யோகம்தானே."

"அங்கை தான் நிம்மதி ஆகக் குறைவு. அந்தத் துருக்கிக் குடும்பத்துக்கு நடந்ததைப்போல எப்ப வீட்டோடை சேத்து எரிப்பங்கள் எண்டு ஏங்கிக்கொண்டு இருக்க வேண்டும்."

"அதென்ன வாத்தியார்?"

"வடிவேலு பத்திரிகையளிலை படிக்கேல்லைப் போல, ஒரு துருக்கி குடும்பத்தின்ரை வீட்டுக்கு நெருப்பு வைச்சிட்டாங்கள், மூண்டுபேர் எரிஞ்சு செத்துப் போச்சினம்."

"தேசிய முன்னணி எண்டு ஒரு அமைப்பு இருக்குது. ஹிட்லரின்ரை நாஸிக் கொள்கையைப் பின்பற்றுகிற ஆக்கள். வெளிநாட்டார் வந்து ஜெர்மனியின்ரை புனிதத்தை கெடுக்கினம் எண்டதும் அவங்கடை கருத்து, அவங்கள் தான் உப்பிடியான வேலையள் செய்யிறது."

"அரசாங்கம் அதுக்கு விட்டுக் குடாது வாத்தியார், இப்ப தேசிய முன்னணியைத் தடை செய்திருக்குத்தானே."

"தடை செய்திருக்குதுதான் கனகேந்திரம், எப்ப தடை செய்தது? ஏன் தடைசெய்தது? ஏன் முன்னமே தடைசெய்யவில்லை? தேசிய முன்னணியின்ரை நடவடிக்கையள் 1990ம் ஆண்டே ஆரம்பிச்சிட்டுது. அந்த ஆண்டிலை ஒரு ஆபிரிக்கரைக் கொலை செய்தாங்கள். தொடர்ந்து வெளிநாட்டாரைத் தாக்கிக்கொண்டு வந்திருக்கிறாங்கள். 1992ல் மாத்திரம் 1900 தாக்குதல்களை நடத்தியிருக்கிறாங்கள். பதினாறு சம்பவங்களிலை கொலை செய்திருக்கிறாங்கள். இவ்வளவும் நடக்கேக்கை அரசாங்கம் கண்ணை மூடிக்கொண்டு தானே இருந்தது. அப்ப ஏன் தடைசெய்யயில்லை? நவம்பர் மாதம் அந்த துருக்கிக் குடும்பத்தின்ரை வீட்டுக்கு நெருப்பு வைச்சதைத் தொடர்ந்து எல்லா நாடுகளிலும் இந்த விசயம் கவனத்துக்கு எடுக்கப்பட்டது. ஜெர்மனியிலையும் வெளிநாடுகளிலையும் இருக்கிற மனிதஉரிமை அமைப்புக்கள் ஆர்ப்பாட்டமும் செய்து கோரிக்கையும் விட்டதுக்குப் பிறகு தான் அரசாங்கம் தடையுத்தரவைப் பிறப்பிச்சது. ஜெர்மன் அரசாங்கம் இரட்டை வேஷம் போடுது எண்டுதான் நான் நினைக்கிறன்."

"என்னமாதிரி இரட்டை வேஷம்?"

"இப்ப அரசியல் தஞ்சம் கோரிக்கொண்டும் அகதியளாகவும் 60 லட்சம் வெளிநாட்டார் ஜெர்மனியிலை இருக்கினம் அரசாங்கத்துக்கு இவை ஒரு தலையிடி. இவையை வலுக்கட்டாயமாக வெளியேற்ற அரசாங்கம் விரும்பாது. அதாலை பயப்படுத்தி வெளியேற்றிற நடவடிக்கையளுக்கு மறைமுகமாத ஊக்கங்குடுத்துக்கொண்டு அந்த நடவடிக்கையளைக் கடுமையாக எதிர்க்கிறமாதிரி உலகத்துக்குக் காட்டிக்கொள்ளுது."

"ஜெர்மன் நாட்டு அரசியல் சாசனத்திலை வெளிநாட்டவைக்கு

## பண்டைய ஈழத்தில் வேளிர்

### ஒரு புதிய சான்று

கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலேயே இலங்கையில் தமிழர்களின் ஆட்சி நிலவியதற்கான வரலாற்றுச்சான்று கிடைத்துள்ளது.

கி. மு. மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்னரே இலங்கையில் யாழ்ப்பாணப் பகுதியில் வேளிர் அல்லது வேளார் என்ற குறுநிலத் தலைவர்கள் இருந்தனர் என்பதற்கு ஒரு புதிய சான்று கிடைத்துள்ளது.

யாழ்ப்பாண தீபகற்பத்தில் பூநகரி பிராந்தியத்தில் வெட்டுக்காடு, பரமன்கிராய் போன்ற ஊர்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளர் திரு. ப. புஷ்பரத்தினத்தாலும், அவருடைய மாணவர்களாலும் கண்டெடுக்கப்பட்ட மட்பாண்டங்களில் பண்டைய தமிழ் பிராமி எழுத்துக்கள் காணப்படுகின்றன. பெரும்பாலும் துண்டுதுண்டாக உடைந்த நிலையில் உள்ள இந்த மட்பாண்டங்களில் உள்ள வாசகங்களை முழுமைப்படுத்தி வாசிக்க இயலவில்லை; ஆயினும், ஒரு மட்பாண்டத்தில் மட்டும் மூன்று எழுத்துக்கள் கொண்ட ஒரு வசனம் முழுமையாகக் கிடைத்துள்ளது. இது வேளான் என்று வாசிக்கமுடிகிறது.

தமிழ் மொழியிலும் தமிழ் பிராமி எழுத்துக்களிலும் ஆன இந்தச் சாசனம் கி. மு 3 அல்லது 2ஆம் நூற்றாண்டுக்களைச் சேர்ந்தது என்று அமைதியிலிருந்து கூறமுடியும். வேளான் என்ற பெயர் சங்ககாலவேள், வேளிர் ஆகிய குறுநில மன்னர் பெயர்களையும் பிற்கால சோழர் காலத்தில் அதிகாரிகளின் பெயர்களையும் ஒத்திருப்பதால் இலங்கை யாழ்ப்பாணப் பகுதியில் சங்ககாலத்திலேயே தமிழ் வேளிர் வாழ்ந்தனர் என்று கூறலாம்.

தமிழ் நாட்டின் முதன்மைச் சாசனவியலாளரான திரு. ஐராவதம் மகாதேவன் அவர்கள் இக்கருத்தினை உறுதிசெய்துள்ளார்.

(நன்றி: நங்கூரம் சித்திரை 93)

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அடைக்கலம் குடுக்கவேணும் எண்டு சொல்லியிருக்கல்லோ வாத்தியார்."

"சொல்லியிருக்குதுதான் கமலநாதன். அது 16வது சரத்து. இந்தச் சரத்து அரசியல் சாசனத்திலை சேர்க்கப்பட்ட உண்மையான நோக்கம் வேறை ஷோசலிச நாடுகளிலையிருந்து மக்களைக் கவர்ந்திழுத்து அந்த நாடுகளைப் பலவீனப்படுத்துறதுதான் அந்த நோக்கம். இப்ப சோஷலிச முகாம் குலைஞ்சிட்டுது. நிலமை மாறியிட்டுது. அதாலை 16வது சரத்தைத் திருத்திறதுக்கான நடவடிக்கையும் தொடங்கியிட்டுது."

"ஜெர்மனி வெளிநாட்டாரிலைதான் பொருளாதார வளர்ச்சிக்குத் தங்கியிருக்குது எண்டு சிலர் சொல்லுகினம். அது சரியோ வாத்தியார்?"

"முழுக்கச் சரி எண்டு சொல்ல ஏலாது. ஜெர்மனியின்ரை மொத்தத் தேசிய உற்பத்தியிலை பத்து வீதம் வெளிநாட்டவையின்ரை நேரடியான உழைப்பு, வருசத்துக்குக் கிட்டத்தட்ட மூண்டு லட்சம் வெளிநாட்டுத் தொழிலாளர் ஜெர்மனிக்குத் தேவையெண்டு அந்த நாட்டு வர்த்தக மையம் சில காலத்துக்கு முதல் கணிப்பீடு செய்தது."

"அப்படியெண்டால் வெளிநாட்டவரை ஜெர்மனி வரவேற்கவேணுமல்லோ."

"இதை கொஞ்சம் ஆழமாகப் பார்க்க வேணும். பேர்லின் சுவர் கட்டப்படுகிற வரைக்கும் கிழக்கு ஜெர்மனியிலிருந்து ஏராளம் பேர் மேற்கு ஜெர்மனிக்குப் போய்க்கொண்டிருந்தினம். வெளிநாட்டுத் தொழிலாளருக்கான தேவையை இவை பூர்த்திசெய்தினம். பெர்லின் சுவர் கட்டினபிறகு இந்தத்தொகை நல்லாகக் குறைஞ்சிட்டுது. அதாலை, வெளிநாட்டுத் தொழிலாளருக்கான தேவையைப் பூர்த்தி செய்யிறதுக்கு வேறை நாடுகளிலே இருந்து ஆக்கள் தேவைப்பட்டினம். இப்ப இரண்டு ஜெர்மனியும் ஒண்டாக இணைஞ்சாச்சுது. கிழக்கு ஜெர்மனியிலை வேலை இல்லாமல் கனபேர் இருக்கினம். வெளிநாட்டுத் தொழிலாளருக்கான தேவையை அவையாலை பூர்த்திசெய்ய ஏலும்."

"அப்ப ஜெர்மனி வாழ்க்கை எனிமேல் சங்கடமாகத்தான் இருக்கும் எண்டு சொல்லுங்கோ"

"ஜெர்மனி வாழ்க்கை மட்டுமில்லைச் செல்லையா, வெளிநாடுகள் எல்லாத்திலையும் காலப்போக்கிலை இந்த நிலைமைதான் வரும். உழைக்கிறதுக்காக வெளிநாட்டுக்குப் போகலாம். ஆனா வாழுறத்துக்குச் சொந்த நாட்டுக்குத்தான் வரவேணும்."

நன்றி: 'சாளரம்'

# மின்னொளியில் விளையாட்டு; விளையாட்டல்ல



ஆதரவற்ற சிறுவர்களின் வளர்ச்சி நிதிக்காக சித்திரை மாதம் 7ம் நாள் தொடக்கம் 14ம் நாள் வரை மின்னொளியில் யாவரும் பாராட்டத்தக்க வகையில் வெகு விமரிசையாக உதைபந்தாட்டப் போட்டி ஒன்று யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுவின் அனுசரணையோடு நடைபெற்றது.

யாழ். குடாநாட்டில் உதைபந்தாட்டத்தில் முன்னணியில் திகழும் பிரபல்யமான பல கழகங்கள் இவ் உதைபந்தாட்டப் போட்டியில் கலந்துகொண்டன.

யாழ். மாவட்டத்தில் 1982ம் ஆண்டு புத்தூர் கிழக்கு சிறீ விக்கினேஸ்வரா விளையாட்டு மைதானத்தில் மின்னொளியில் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியை அடுத்து இரண்டாவது தடவையாக மின்னொளியில் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டி இதுவாகும்.

முல்லை மாவட்டத்தில் 'முல்லைக் கிண்ண' சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் விடுதலைப் புலிகளின் அணி, அளம்பில் 'இளம்தென்றல்' அணியினரை 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்குத் தெரிவாகியிருந்தது. இறுதிப் போட்டியில் விடுதலைப் புலிகள் அணியை எதிர்த்து உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணி மோதியது. இரு அணிகளும் 1-1 என கோல்களைப் போட்ட நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்ததையடுத்து வழங்கப்பட்ட தண்டனையுதைகளில் விடுதலைப்புலிகள் அணி 4-2 எனும் கோல் கணக்கில் வெற்றியீட்டி லெப். கேணல் அன்பு சுற்றுக்கேடயத்தைச் சுவீகரித்துக்கொண்டனர்.

மேற்குறிப்பிட்ட இரு உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகளையும் பெருந்திரளான ரசிகர்கள் பார்வையிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழீழத்தில் உதைபந்தாட்டத்தின் விளையாட்டுத் தரம் குறிப்படுமளவுக்கு உயர்ந்துள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மின்வெட்டை சிறீலங்கா அரசாங்கம் கடுமையாகக் கடைப்பிடித்து வருகின்றது. ஆயினும் மின்னொளியில் விளையாட்டு என்பது விளையாட்டு என்பதற்கு மேலாக, தடைகளுக்கு விடப்பட்ட போராட்டச் சவாலாகப் பரிணமித்து விளங்குகிறது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

**9-07-94 அன்று ஜேர்மனியில் விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக் கழகத்தினரால் நினைவுகூரப்பட்ட கரும்புலிகள் நாளையொட்டி அரங்கில் வாசிக்கப்பட்ட கவியுரையை இங்கே தருகிறோம்.**

# தீயைப் பொசுக்கிய தியாகம்

எங்களுடைய தேசத்தின் விடுதலைக்காக உங்கள் சாவுக்கு நாள் குறித்த புனித ஜீவன்களே!

உங்களைப் பூஜிக்கின்ற வேளை இது.

நேரம் குறித்து சாவைச் சந்தித்த மாமனிதர்கள் நீங்கள்.

எந்த ஒரு நாட்டிலும், எந்த ஒரு மனிதனும் கேள்விப்படாத ஒரு சரித்திரத்தை எழுத உங்கள் தியாகம் மையாகி நிற்பதை, நாங்கள் மெய்யாகவே உணருகிறோம்.

கிராமங்களையெல்லாம் அழித்துச் சுடுகாடாக்கிவிட்டு எக்காளமிடும் எதிரி, உங்கள் தியாகத்தினைக் கண்டு திமிர்த்துப் போகிறான்.

'ஒரு படையின் பலத்தை ஒரு புலியின் அதிர்வு சாதிக்கிறது' என்று அலறுகிறான்.

'தனிமரம் தோப்பாகாது' என்பார்கள். நீங்கள் தோப்பாகிப் போன தனிமரங்கள்.

படையாக நின்று போராடி பகையை அழித்து விடைபெற்றுச் சென்ற மாபெரும் சக்திதான் நீங்கள்.

உங்களின் ஒவ்வொரு மரணமும் எங்களை விடுதலையை நோக்கி பல வருடங்கள் முன்னெடுக்கின்றன.

உங்களின் ஒவ்வொரு மரணமும் எதிரியைப் பல வருடங்கள் பின்னோக்கிச் செலுத்துகின்றன.

'ஒளியாக வருகிறது இறை' என்பார்கள்.

நீங்களோ! ஒளியாகி மறையும் நிறைகள்.

எதிரியை எரித்துச் சாம்பலாக்கும் உங்கள் அதிர்வில் பிறக்கும் ஒளி-

எங்கள் மண்ணை, மக்களை, ஏன்? இந்த மாநிலம் முழுவதையும் விடுதலைக்கு இழுத்துச் செல்லும் சக்தியைப் பரப்பி நிற்கின்றது.

மனிதன் மனிதனாக வாழவேண்டும் என்பதற்காக தெய்வமாகிப் போனவர்கள் நீங்கள். காற்றில் நீங்கள் உங்களைக் கலக்கின்ற அதே கணத்தில்-

நாட்டில் பல்லாயிரக் கணக்கானோரது இதயங்களில் நீங்கள் வாழத்தொடங்கிவிட்டீர்கள்.

அழிக்கின்ற கொடுங்கோலனை அழிப்பதற்காக உங்களை அழித்து எங்களைக் காப்பாற்றிய பிறவிகள் அல்லவா நீங்கள்!

உறுதி என்பது எத்தனை திடமானது? அதன் எல்லை என்ன? என்பதைக் காட்டிவிட்டுக் கண்களை மூடியவர் நீங்கள்.

ஏன் தெரியுமா?

மனிதன் விடுதலை பெறவேண்டும் என்பதே உங்கள் வேட்கையாக இருந்தது.

நான், எனது, எனக்காக என்று நீங்கள் ஒருபோதும் எண்ணியதில்லை.

இரும்புச் சங்கிலியால் இறுக்கப்பட்டு ஒடுக்கப்பட்ட மனிதனின் தடைகளை உடைப்பதற்காக-

மதிற் சிறைக்குள் மாட்டப்பட்டவனை மீட்பதற்காக நீங்கள் பூகம்பமானீர்கள்.

இரும்புச் சங்கிலிகள் உடைக்கப்பட்டன; மதிற் சிறைகள் தூளாயின.

திக்குள் சங்கமமாகும் உங்கள் உடல் நீறாகிப் போகலாம்; இல்லை காற்றாக மாறலாம்.

ஆனால் சுயத்தை வென்ற உங்கள் ஆன்மா! அது- விடுதலையின் விளக்கேதான்!

உலகில் எந்த மூலையில் ஒரு நாடு- ஒரு இனம்- ஒரு வர்க்கம் அடிமை என்னும் இருளில் மூழ்கிப் போகிறதோ,

அந்த நாட்டில்- அந்த இனத்தில்- அந்த வர்க்கத்தில் உங்கள் ஆன்மா என்னும் விடுதலை விளக்கு வெளிச்சத்தைப் பரப்பும்.

பூகம்பத்தால் எழுந்த புழுதிக்குள் உங்கள் முகங்கள் மறைந்து நிற்பதாகவே நாங்கள் எண்ணுகிறோம்; நீங்கள் மரணிக்கவில்லை.

எங்களுக்கு சிறகுகளை பெற்றுத் தந்துவிட்டு நீங்கள் புஷ்பக

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


விமானத்தில் ஏறிக்கொண்டீர்கள்.

உங்களுடைய உயரத்துக்கு எங்களால் பறக்கமுடியவில்லை; உண்மைதான்.

ஆனால் நீங்கள் பெற்றுத் தந்த சிறகுகளை இனி நாங்கள் பறிகொடுக்கமாட்டோம்.

இது உறுதி.

விடுதலைச் சிறகுகளை விலைக்கு வாங்க முடியாது என்ற உண்மையை பேரிரைச்சல் போட்டுச் சொல்லிச் சென்ற தேவதைகள் நீங்கள், தேவர்கள் நீங்கள்.

உயர்ந்த தியாகங்களால் மட்டுமே உண்மையான விடுதலையைக் காணமுடியும் என்ற உண்மையை பேரொளி வெளிச்சத்தில் காட்டிச் சென்ற சூரியர்கள் நீங்கள்.

எங்கள் இலட்சியத்தைக் கேலிசெய்த சில இலையான்கள் கூட உங்கள் திடமான ஒளிர்வால் மின்மினிகளாக மாற்றம் கண்டுள்ளன.

மாற்றானையும் மனம் மாறச்செய்யும் தியாகம் உங்கள் தியாகம்.

உண்மையாக, தூய்மையாக, துணிவாக நீங்கள் செய்த தற்கொடை-

மென்மையாக, மெய்யாக, அண்மையாகப் பலரை விடுதலையின் பக்கம் இழுத்து வந்துள்ளது.

உங்கள் தியாகத்தின் காலடியில் பாவமன்னிப்புப் பெற்றுவிட்டு பல புதிய முகங்கள் விடுதலை அலையோடு தங்களை இணைத்துக்கொண்டுள்ளன.

இன்று நாங்கள் அனைவரும் ஒன்றுகூடிப் பிரார்த்திக்கின்றோம்.

பேரொளியாகி- பேரொளியாம் விடுதலையைக் காக்கும் பேரொளியாகி பார், ஆழி முழுவதும் புகழ்பரப்பும் தியாகத்தின் சொந்தக்காரர்களே!

தீயைப் பொசுக்கும் தியாகங்களே!

அழிவில் ஒரு பெரிய ஆக்கத்தைக் காட்டிய அர்த்தம் நிறைந்த சுடர்களே! உங்கள் சுடர் இப்போது எங்களுக்குள் எரிகின்றது.

அந்தச் சுடரை அணையாது நாங்கள் காப்போம்.

**சிவநாதன், ஜேர்மனி.**



**03.09.94 அன்று பேர்ண், சுவிஸில் கரும்புலிகள் நினைவுநாளையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சிகளின் போது...**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# நாடகாசிரியர் கவனத்திற்கு சில குறிப்புக்கள்

குழந்தை ம. சண்முகலிங்கம்

"நாடகாசிரியன் பிறக்கிறான், அவன் உருவாக்கப்படுவதில்லை" என்ற கூற்றை முற்றுமுழுதாக ஏற்கவோ நிராகரிக்கவோ முடியாது. இயல்பிலே ஆற்றலுள்ள ஒருவர் கற்பதன் மூலம் தன்னாற்றலை மேலும் விருத்திசெய்து கொள்ளமுடியும். கலை இலக்கியப் படைப்பாளிகளைப் பொறுத்தவரையில் "கற்றல்" என்பது கல்வி நிறுவனங்களில் கற்பதை மட்டும் குறிக்காது, துறை சார்ந்த திறமைசாலிகளின் படைப்புக்களைக் கற்பதையும் குறிக்கும். புராதன கிரேக்கத்தின் சோபேகிலிஸ், அரிஸ்டோபேன்ஸ், பிரான்சின் மொலியே, இங்கிலாந்தின் ஷேக்ஸ்பியர் ஆகியோருக்குத் தாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளதாக பேர்னாட்ஷோ கூறுகிறார். படைப்பாளிகளுக்குப் பிறரிடமிருந்து கற்றுக்கொள்ளும் ஆர்வமும், கற்றதை ஒப்புக்கொள்ளும் துணிவும் அவசியம்.

இங்கு "கற்றல்" என்பது நாடகத்தின் வகை, வடிவம், வடிவமைப்பு, உத்தி, நுட்பம், வளங்கள், மூலகங்கள், மொழி என்பனவும் பிறவும் பற்றியதொரு தெளிவான அறிவினைப் பெறுவதையே குறிக்கும். பல நூற்றாண்டு காலமாகப் பார்வையாளரின் எதிர்வினைகளை அறிந்து, முன்வைக்கப்பட்ட கருத்துக்களே நாடகத்தின் விதிமுறைகளாக உள்ளன. கலைக்கோட்பாடுகளும் விதிமுறைகளும் பின்பற்றப்படுவன மட்டமல்ல, ஆற்றலுள்ள கலைஞர்களால் அவை மீறப்படுவனவாகவும் உள்ளன. ஆற்றலும் வீரியம்மிக்க மீறல்களும் புதிய விதிகளாக அமைந்துவிடுகின்றன.

நாடகத்தின் நுட்பங்களையும், விதிகளையும் கற்க முடியுமே அன்றிப் படைப்புத்திறனைக் கற்றுக்கொள்ள முடியாது. தற்பெருமை (Originality) என்பது தன்னிலிருந்து வருவது. அதனைச் செம்மைப்படுத்த மட்டுமே கற்றல் உதவும். உயிர்த்துடிப்புள்ள பாத்திரங்களைப் படைக்கவும், புதிரும் ஹாசியமும் இளையோடும் உரையாடலை எழுதவும் எவரும் கற்றுத்தர முடியாது.


## 'புலம்பெயர்ந்த தமிழர் வாழ்வு' விவாத மேடை

எரிமலை வாசகர்களே!

புலம்பெயர்ந்த தமிழர் வாழ்வினைப் பற்றிய விவாத மேடையில் கலந்துகொண்டு விவாதியுங்கள்.
விவாத மேடையில் கலந்துகொள்ளும் அனைவருக்குமான வேண்டுகோள் பின்வருமாறு:
இவ்விவாத மேடையை நீங்கள் ஆரோக்கியமான முறையில் பயன்படுத்த வேண்டும்.
எழுதி அனுப்பும் பொழுது எழுத்துக்கள் தெளிவாக இருத்தல் வேண்டும். எரிமலையின் இரு பக்கங்களுக்குக் கூடாமல் எழுதி அனுப்பப்படல் வேண்டும். கடித மேலுறையில் 'விவாத மேடை' எனக் குறிப்பிடவும். அனுப்பப்படவேண்டிய முகவரி இதழின் 3ம் பக்கத்தில் உள்ளது. கிடைக்கப்பெறும் ஆக்கங்கள் திருப்பி அனுப்பப்படமாட்டாது.

- ஆசிரியர் குழு -


நாடகம், பார்வையாளர்களது கவனிப்பையும் ஆர்வத்தையும் கணந்தோறும் பற்றிப் பிடித்து வைத்திருக்கவேண்டும்; அவர்களை ஆயத்த நிலையில் வைத்திருக்கவேண்டும். அவ்வாறு வைத்திருப்பதாயின்;

1. மனித அனுபவத்துள் அடங்கும் விஷயங்களை, வியப்பும் மகிழ்வும் ஏற்படும் வண்ணம் வழங்க வேண்டும்.

2. பார்வையாளர் நம்பக் கூடியதாக உள்ளவற்றைத் தெரிவு செய்தல் வேண்டும்.

3. ஒளிவு மறைவுகளை மிகவும் குறைத்து, பார்வையாளர் அறிய வேண்டிய யாவற்றையும் தெளிவுபட விளக்கவேண்டும்.

4. வரவிருப்பவற்றை நுட்பமாக முன்னதாகவே கோடிகாட்டிச் செல்லவேண்டும்.

5. நாடகத்தின் சூழலும், அதன் தொனியும் தெளிவுபட வேண்டும்.

எந்தவொரு அரங்கத் தயாரிப்புக்கும் ஒரு "பாய்ச்சல்" தேவைப்படுகிறது. ஒரு புறத்தில் நாடகாசிரியனது எழுத்துரு உள்ளது. மறுபுறத்தில் அரங்கத் தயாரிப்பு உள்ளது. இவை இரண்டுக்குமிடையே ஒரு வெறுமை- வெறும் வெளி- உள்ளது. இவ்வெளியைச் செவ்வனே நிரப்புவதில் தான் அரங்கப் படைப்பின் வெற்றி தங்கியுள்ளது. இவ்வெளியை நிரப்புவதற்கு வேண்டிய அனைத்தையும் உறுதியாக வழங்கும் அத்திவாரமாக அமைவதே எழுத்துரு. எழுத்துருவை ஆழமாகவும் உறுதியாகவும் அமைக்கும் பொறுப்பு நாடகாசிரியனுடையதாகும். நாடகா

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



சிரியனுக்கும் பார்வையாளருக்கு மிடையில் பல இடைத்தரகர்கள் அவசியமாகின்றனர் என்ற காரணத் தினாலேயே நாடக எழுத்துரு உறுதியும் தெளிவும் ஆழமும் உள்ள தாக இருக்கவேண்டியுள்ளது. நெறி யாளர், நடிகர், ஏனைய அரங்கக் கலைஞர்கள் என்ற இடைத்தரகர் கள் சிதைக்க முடியாதவாறு நாடக எழுத்துரு அமைவது அவசியம்.

"நவில் தொறும் நூல் நயம்" என்பதற்குச் சிறந்த சான்றாக நல்லதொரு நாடக எழுத்துரு இருக்கமுடியும். நல்லதொரு நெறி யாளன், மேடைத்தயாரிப்புக்காகத் தெரிவு செய்யும் எழுத்துருவை பல நூற்றுக்கணக்கான தடவைகள் படிப்பது வழக்கம். அத்தனை தடவைகளும் அவ்வெழுத்துரு அவனுக்கு நவநவமான கருத்துக் களையும், சிந்தனைகளையும், கற்ப னைகளையும் கொடுத்த வண்ணமி ருக்கும். அதன் கலை ஆழத்திலிருந்து வியாக்கியானங்கள் வெளிவரும். அதேவேளையில் எழுத்துருவின் அடிநாதமாக, ஆத்மாவாக உள்ள "சிந்தனையை" எவரும் மாற்ற முடியாதபடி அது செட்டிறுக்கம் கொண்டதாகவும் இருக்கும்.

நாடகத்தின் வார்த்தைகள் "பேசப்படும் வார்த்தைகளாகவே" கவனிக்கப்படும். அவ்வார்த்தையின் நாதம், லயம், தொனி, கனதி, ஸ்தாயி, இளை, மனநிலை, சூழல், உணர்வு, பாவம், மனவெழுச்சி என்பன யாவும் இணைந்து, இசைவு பட நின்று நடிகனின் மூலம் உயிர்பெற்று அரங்கில் பரவும். இவ்விசைவின் உயிர்ப்பில் பாத்தி ரங்களும், நாடக இயக்கமும், நாடக நிலைமையும் உயிர்பெற்று வாழும். மேலும் நாடக வார்த்தைகள் செயல் பொதிந்தனவாக இருக்கவேண்டும். கருத்துருவ நிலையில் சிந்தனையின் இயங்கியலாகவும், பௌதிக நிலை யில் காட்சிப்படிமங்களின் அசைவி யக்கமாகவும், வார்த்தைகள் அமையும்.

கலையைத் தொக்கு நிலையில் வைத்திருத்தலே சிறந்த கலை எனப்படும். ஒன்றைச் சொல்லிப் பிறிதொன்றைக் கருதுவதுதான் கலையின் பணி. இந்த வகையில், நல்லதொரு நாடக எழுத்துரு என்பது, தான் சொன்னவற்றினூ டாக, சொல்லாது விட்டவற்றை வெளிக்காட்டி நிற்கும் சிறப்பினைக் கொண்டதாக இருக்கும். எழுத்துரு வில் இதனைக் கண்டறிந்து வெளிக் கொணர்வதே ஏனைய அரங்கக் கலைஞரின் பணியாக இருக்கும். அரங்கில் பேசப்படும் வார்த்தைகள் கேட்கப்படுவன மட்டுமல்ல, அவை முக்கிமாகப் பார்வையாளரால் பார்க்கவும் படுகின்றன. பார்க்கும் படி பேசப்படும் வார்த்தைகள், பேசப்படும் முறையால், தொக்கி நிற்கும் பொருளை வெளிக்கொ ணர்ந்து நிற்கும். எனவே, ஏழ்கட லைப் புகுத்திக் குறுகத்தறித்து நிற்கும் வார்த்தைகளே நாடக அரங்கைச் செழுமைப்படுத்தும் சிறந்த கலையூடகங்கள் என நாடகாசிரியன் கருதவேண்டும்.

நாடகங்கள் அடிப்படையில் வேறுபடலாம். நாடக எழுத்துருக்கள் வேறுபடுவதில்லை. நாடகவகைகள் பல. ஒவ்வொரு நாடகமுமே தனிவகை எனக்கொள்வாரும் உளர். நாடக எழுத்துருக்கள் தரும் தகவல் கள் வேறுபடுவதில்லை. அதாவது, என்ன? எங்கே? எப்பொழுது? ஏன் நடக்கிறது? என்பனவுக்கான விடைகளையே அனைத்து எழுத்து ருக்களும் ஒவ்வொரு கணமும் தந்த வண்ணமிருக்கும். இத்தகவல் கள் மூலமே நாடகம் அனைத்தை யும் வெளிப்படுத்தி நகர்ந்து செல்கிறது. காரண காரியத் தொடர் புடன் கூடிய விளக்கங்களோடு கதையை நிகழ்த்திச் செல்லும் கலையே நாடகம். இயங்குநிலை யிலுள்ள கதைதான் நாடகம்.

மனித- மோதலினூடாகவே அவ்வி யக்கம் வளர்கிறது. மனித, மோத லின் கதையைக் கூறும் நாடகம், வாழ்வை ஒத்ததாக நின்று,

## "பயங்கரவாதி"

என்னைப் "பயங்கரவாதி"
என்றே அக்கனவான் அழைத்தான்
சாட்டையால் அடித்துக் கேலி செய்வது போல.
மனித உரிமை ஆணைக்குழுவின்
மண்டபத்துக்குள்ளேயே இது நடந்தது.
நான் ஒரு குற்றமும் செய்யவில்லை
எனது மக்களுக்காகப் போராடியதைத் தவிர.
ஆதிக்க அரசுகளும் தமது அறிக்கைகளில்
இப்படித்தான் குறிப்பிட்டன.

இக்குற்றச் சாட்டால்
நான் கூனிக் குறுகவில்லை.
எப்போதும் போல் நிமிர்ந்தே நடந்தேன்.
மக்களின் பலத்தினால்தான் எனது
முதுகெலும்பு நிமிர்ந்திருக்க வேண்டும்.

எனக்கு ஏராளமான நண்பர்கள் இருக்கின்றனர்.
அவர்களும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக உழைப்பவர்களே.
எமது நட்புறவின் வெளிப்பாடாக
அவர்கள் என்னை "நண்பனே!"
என்றே அழைக்கின்றனர்.

- வளவன் -

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

உள்ளார்ந்த சிந்தனை சார்ந்த இயக்கத்தினூடாகவும், அதன் விளைவாக எழும் புற இயக்கத்தினூடாகவும் நிகழ்வுகளை நிகழ்த்திக் காட்டுகிறது.

படிப்பதற்கென மட்டும் நாடகங்களை எழுதவேண்டிய அவசியமே இல்லை. படிப்பதற்குரிய இலக்கிய வடிவங்கள் வேறு பல உண்டு. அரங்கிலேயே நாடக எழுத்துரு முழுமை பெறுகிறது. நாடக எழுத்துருக்கள் இலக்கியத் தரம் வாய்ந்தனவாக இருக்க வேண்டாமா? இலக்கியத் தரமல்ல நாடகத்தின் உரைகல். ஆற்றுகைத் தரமே அதன் குறியிலக்கு. அவ்விலக்கினை நிறைவுசெய்யும் வேளையில், எழுத்துரு இலக்கியத்தரம் வாய்ந்ததாக அமையுமாயின் விரும்பத்தக்க ஒன்றே. இலக்கியத் தரத்துக்காக ஆற்றுகைத் தரத்தைப் பலியிடமுடியாது. எழுத்துருவே இல்லாத அரங்க வெற்றிகள் பல இருப்பதை நாம் உணரலாம். ஆயினும் நியம அரங்குக்காக எழுதும் நாடகாசிரியன் இரண்டு வெற்றிகளையும் அடைய அவாவுவது நல்லது. இன்றைய பரிசோதனைகள் நாளைய நியமங்களாகும் என்பதால் பரிசோதனை நாடகங்களும் எழுத்துருவை இலக்கியத்தரத்தோடு அமைக்க முற்படுவதில் அக்கறை செலுத்தலாம். வீடியோ நாடாக்கள் வந்து விட்ட வேளையிலும், ஒரு கால கட்டத்தின் சுவடுகளாக எழுத்துருக்கள் அமைவதே நல்லது.

தொடர்பு கொள்ளல் சிறப்பது நாடகத்தின் வெற்றிக்கு உதவுமாதலால், நாடகாசிரியன், நாடகத்தின் தொடர்பு கொள்ளல் சாதனங்களை அறிந்திருப்பது அவசியம். தொடர்பு கொள்ளலுக்கான ஊடகங்கள் மூலமே "அரங்கின் மொழி" பிறப்பிக்கப்படுகிறது. நாடகத்தினதும் அரங்கினதும் அனைத்து மூலகங்களாலும் ஒருமித்துப் பேசப்படும் மொழியே அரங்க மொழியாகும். தனது சாதனத்தினூடாக, தனது காலத்தில் காலூன்றி நின்று, தனது மக்களுடன் தொடர்பு கொள்ளும் நாடகத்தில் மட்டுமே, பார்வையாளரோடு மறுவின்றித் தொடர்பு கொள்ள முடியும். நாடகத்தின் குறிகள், சுட்டிகள், சைகைகள், சந்தேகங்கள் யாவற்றையும் நன்கறிந்து நாடகாசிரியன் எழுத வேண்டும். தனது பண்பாட்டில் காலூன்றி நின்று உலகப் பொதுமையை எட்டும் நாடகமே எக்காலத்தும், எம்மக்களோடும் தொடர்புகொள்ளமுடியும்.

நாடகாசிரியர், நாடகமொன்று ஏன் தோல்வி காண்கிறது என்பதை அறிந்திருப்பது நல்லது. வேகம் குறைந்ததாகவும், சலிப்பூட்டுவதாகவும் உள்ளபோது நாடகம் தோற்றுப்போகிறது. அங்கு நல்லதொரு நாடகத்துக்கு அவசியமான;

**நாடக இயக்கம்**
**முறுகல் நிலை**
**உயிர்த்துடிப்பான பாத்திரங்கள்**

என்பன போதாமல் இருக்கும். இவற்றை நிலை நிறுத்த நாடகாசிரியர் முயலவேண்டும்.

நாடகாசிரியரொருவர் மறக்க முடியாத சில விஷயங்கள் உள்ளன. நாடகம் பண்பாட்டின் வெளிப்பாடு என்பதையும், அறிவூட்டலையும் மகிழ்வூட்டலையும் நாடகம் தனது பணியாகக் கொண்டுள்ளது என்பதையும், வாழ்விலிருந்து பெற்று, வாழ்வை வெளிப்படுத்தி, பிரதிநிதித்துவப்படுத்தி, வாழ்வுக்கு வழிகாட்டுவதாக நாடகம் அமையவேண்டும் என்பதையும், சுவைபடவருவனவற்றையெல்லாம் தெரிந்தெடுத்து, அவை அனைத்தும் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்து கூறுவது நாடகத்தின் முறைமை என்பதையும் நாடகாசிரியர்கள் மறவாது மனத்தில் இருத்துவது நல்லது.

சமகால நாடக வல்லுனரான பீட்டர் புறூக் என்பார் மொழி, அசைவு, ஒலி, வெளி எனும் நான்கினையும் நாடகத்தின் மூல வளங்கள் எனக்கூறுவார். இவற்றை செவ்வனே அறிந்த பின்னரே நாடகம் எழுத முற்படுவது நல்லது. அப்பொழுதுதான் அந்த நாடக எழுத்துரு அரங்க ஆற்றுகைக்கானதொரு மூலமாக அமையும். உயர் கவிதையை ஒத்த வகையில், மேற்கூறிய நான்கினையும், செட்டாகவும், செறிவாகவும், சிக்கனமாகவும் பயன்படுத்தும் நாடகாசிரியர், நிச்சயமாக நல்ல நாடகங்களை எழுதமுடியும்.

நாடகத்தையும் அரங்கையும் பற்றிக் கற்றறிந்து, தனது ஆற்றலைச் செழுமைப்படுத்தி, நாடகங்களை எழுத முற்படுவோமானால் எம்மிடையேயும் நல்ல நாடகங்கள் பிறக்கும்.

நன்றி: வெளிச்சம்

## மணல் நிலமொன்று விளைநிலமானது!

சினந்தெழும் மணலிலிருந்து வளமான நிலங்களைப் பாதுகாத்துவரும் சவுக்கங்காடு வடமாராட்சி கிழக்கில் பெரும் நிலப் பரப்பில் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது.

கண்ணுக்கெட்டிய தூரம்வரை மணல் மலைகளாகவே காட்சியளிக்கும் வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப் பிரதேசத்தில் காற்றின் சீற்றத்தினால் அள்ளி வீசப்படும் மணல் அருகிலிருக்கும் வளமான நிலத்தைப் பாழ்படுத்தும் நிலையை தவிர்ப்பதற்காக முதன் முலாக 1976 இல் ஆறு ஏக்கர் நிலப்பரப்பில் சவுக்கு நடுகை செய்யப்பட்டது. 1985 ஆம் ஆண்டுவரை 410 ஏக்கர் பரப்பளவில் இக்காடு வளர்க்கப்பட்டுள்ளது.

தற்போது இக்காட்டை பராமரித்து வரும் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சூழல் பாதுகாப்புப்பகுதி 92ம் ஆண்டில் மாத்திரம் 10 ஏக்கர் நிலப்பரப்பில் 12,600 கன்றுகளை நாட்டியுள்ளது. 93ம் ஆண்டில் மேலும் 36,000 சவுக்கங் கன்றுகள் நடபட்டுள்ளன. பார்ப்பவர்களை பிரமிப்பிலாழ்த்தும் வகையில், பல்வேறு இன்னல்கள் மத்தியிலும் பாதுகாக்கப்பட்டு வரும் இப்பசுமைச் சுவர் குடாநாட்டில் இருப்பது பலருக்குத் தெரியாது.

நன்றி: நங்கூரம்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# சிங்கள ஆட்சியில் அரியாசனம் ஏறமுனையும் ஆங்கிலமும் ஏற்படப்போகும் பாதிப்பும்

இலங்கை அரசு அடிக்கடி கைவைக்கும் துறைகளில் ஒன்று கல்வி. தற்போது ஆங்கில மொழியைக் கட்டாய பாடமாக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டு வருகிறது.

சர்வதேச வர்த்தகப் பொருளாதாரத்துடன் இணைக்கப்பட்டுள்ள இலங்கை, அதற்குச் சேவகம் செய்யக்கூடிய வகையில் ஆங்கில மொழியை முதன்மைப்படுத்த வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

ஆங்கிலம் கட்டாய பாடமாகுமானால் ஏழைகளினதும், கிராமத்துப் பிள்ளைகளினதும் கதி என்ன? சாதாரணமாகவே ஆங்கில ஆசிரியர்கள் இல்லாத இன்றைய சூழலில் கிராமப்புறப் பாடசாலைப் பிள்ளைகள் எவ்வாறு கற்கமுடியும்? நகரங்களைச் சார்ந்த பணக்காரக் கல்லூரிகளினதும், பணக்காரர்களினதும் நிலைவேறு.

இன்று அறிவியலின் சாளரமாக ஆங்கிலமொழி உள்ளது என்பதை நாம் முதலில் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அதன்பொருட்டு ஆங்கில மொழி அறிவை வளர்க்கப் போதிய கவனம் செலுத்தப்பட வேண்டும். ஆனால் ஆங்கிலத்தை இப்போது கட்டாய பாடமாக்குவதை ஏற்கமுடியாது. இப் பிரச்சினை ஆழமாகச் சிந்திக்கப்பட வேண்டியதொன்றாகும்.

கொழும்புடன் ஈழத்தமிழராகிய நாம் இன்னும் தொப்புள்க்கொடி உறவைக் கொண்டிருக்கிறோம். தொப்புள்க்கொடி அறும்வரை சிங்கள அரசின் ஒவ்வொரு திட்டமும் எம்மை நேரடியாகத் தாக்கும். இந்தவகையிற் கல்வி முக்கியமானது.

ஐ.தே.க. அரசாங்கம் மிகவும் வஞ்சகமான முறையில் ஆங்கிலத்தைக் கட்டாயமாக்கப் போகின்றது. இப்பிரச்சினையை அடிப்படையிலிருந்தே தெரிந்துவைத்திருத்தல் அவசியம். உண்மையில் ஆங்கில மொழி மீண்டும் உத்தியோக மொழியாய் வருவதற்குச் சமமாகவே இது உள்ளது.

இதன் தார்ப்பரியத்தை விபரமாகப் பார்ப்போம். இதன் ஆபத்தை நுணுக்கமாக நோக்குவோம். ஒரு தேசத்தின் கல்விக் கொள்கை என்பது அத்தேசம் கடைப்பிடிக்கும் அரசியற் பொருளாதாரக் கொள்கையின் வெளிப்பாடேயாகும். சர்வதேச வர்த்தகப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டதே இலங்கையின் இன்றைய அரசியற் பொருளாதாரமாகும். உலக வர்த்தகத்தின் ஒரு சந்தையாகவும், ஒரு மையமாகவும் இலங்கை மாற்றப்பட்டு வருகிறது. இந்த சர்வதேச வர்த்தகத்திற்கு ஆங்கிலமொழி அவசியம். சர்வதேச வர்த்தகத்திற்கு எப்படித் தெருக்களும், மற்றும் விமானப் போக்குவரத்து, தொலைத்தொடர்பு, உல்லாசவசதி என்பனவெல்லாம் அவசியமோ அப்படியே ஆங்கிலமும் அவசியம். இலங்கையின் பொருளாதாரம் வர்த்தகப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டதே தவிர உற்பத்திப் பொருளாதாரத்தை அல்ல. எனவே வர்த்தகத்திற்குச் சேவைசெய்யக்கூடிய கல்விதான் இருக்குமே தவிர உற்பத்தியை நோக்கித் திறனை வளர்க்கக்கூடிய கல்வியாக இருக்க முடியாது.

வர்த்தகத்தை மையமாகக் கொண்ட சேவைத் துறைசார் கல்விக்கு எமது சிறார்களினதும், இளைஞர்களினதும் மூளை திருப்பப்படலாயிற்று. இதில் தவிர்க்க முடியாத ஓர் அலகுதான் ஆங்கில மொழி பற்றிய ஒரு கோரிக்கை.

ஆங்கில மொழியை நேரடியாகக் கட்டாய பாடமாக்கும் திராணி ஐ. தே. க. அரசாங்கத்திடம் இல்லை. அது சுற்றிவளைத்துப் படிப்படியாக ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாக்க முயல்கிறது. நேரடியாக, உடனடியாக ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாக்கினால் சிங்கள- பௌத்தவாதிகள் அரசிற்கெதிராகச் சீற்றமடைவர். சிங்களத்திற்குப் பதிலாக ஆங்கிலம் அரியாசனம் ஏறப்போவதாகக் கர்ச்சிப்பார்கள்.

தற்போது அரசு மிகவும் நாசுக்காகவும், தந்திரமாகவும் இதனை நிறைவேற்ற முயல்கிறது. இதன் முதற்படியாக க.பொ.த. (சாதரணம்) பரீட்சையில் ஆங்கில இலக்கியத்தை விருப்பத்தேர்வுப் பாடமாக்கியுள்ளது. விருப்பத்தேர்வுப் பாடம் என்ற வகையில் இதனைப்பற்றி ஒருவரும் பெரிதாகக் கருத்தில் எடுக்கவில்லை. ஆனால் நடைமுறையில் இப்பாடத்திற் தேறியவர்களுக்கு வேலைவாய்ப்பில் முக்கியத்துவம் கொடுக்கப்படும். இதனால் மாணவர்கள் இப்பாடத்தை நோக்கி வெகுவாகக் கவரப்படுவர். இவ்வாறு இப்பாடம் பழக்கத்தில் வந்ததன் பின்னர் இதனைக் கட்டாய பாடமாக்கும் பிரகடனத்தை அரசு வெளியிடும். இவ்வாறாக எதிர்ப்புத் தோன்றாதவாறு சமாளிக்கும் நீண்டகால நோக்கமே விருப்பத்தேர்வின் உள்ளடக்கமாகும்.

இதேபோல க.பொ.த (உயர்தரம்) பரீட்சைக்கு ஆங்கிலத்தை எப்படித் தந்திரமாக இணைக்கிறது என்பதை நோக்குவோம். தாய்மொழி, பண்பாடு, ஆங்கிலம் ஆகிய மூன்று பகுதிகளை உள்ளடக்கிய ஒரு கட்டாய பாடத்தை அரசு அமுல்படுத்த உத்தேசிக்கிறது. இந்த மூன்று பகுதியில் பகுதி-1 ஆகிய தாய் மொழிக்கு 50 புள்ளிகள் எனவும், பகுதி-2 ஆகிய பண்பாட்டிற்கு 30 புள்ளிகள் எனவும், பகுதி-3 ஆகிய ஆங்கிலத்திற்கு 20 புள்ளிகள் எனவும் புள்ளிகள் பங்கிடப்படவுள்ளதாக ஒரு அறிவிப்பு உண்டு. இவ்வாறு பார்க்கும் போது தாய் மொழிக்கும் பண்பாட்டிற்கும் அதிக

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ள தாக எண்ணி ஆங்கிலம் புகுத்தப் பட்டுள்ளதை ஒருவரும் பொருட் படுத்தமாட்டார்கள். ஆனால் பல்கலைக்கழக புகுமுகத்திற்கான இந்தப் போட்டிப் பரீட்சையில் ஆங்கிலத்தை எந்தவொரு மாணவ ரும் கவனிக்காது விடமுடியாது. இதனால் அரசு எதிர்பார்க்கும் ஆங்கிலத்தேவை கணிசமான அளவு பூர்த்தியாகும். இவ்வாறு இதனைப் பழக்கப்படுத்தியதும் சில ஆண்டுக ளின் பின்பு ஆங்கிலம் எனும் ஒரு தனிப்பாடத்திட்டத்தை க.பொ.த. (உயர்தரம்) பரீட்சைக்கு அரசு கட்டாய பாடமாக பிரகடனப் படுத்தலாம்.

எனவே க.பொ.த (சாதாரணம்) தரத்திலும் க.பொ.த. (உயர்தரம்) தரத்திலும் இந்த ஆங்கிலத்தை எப்படி அழகாக முலாம் பூசி அரசு அமுல்படுத்த முனைந்துள்ளது என்பதைத் தெளிவாகக் காண முடிகின்றது.

ஆங்கில மொழியை நாம் புறக்கணிக்க முடியாது. அவ்வாறு செய்யவும் கூடாது. அறிவியல் நூல்கள் ஆங்கிலத்தில் ஏராளமாக இருப்பதனால் எமது அறிவை வளர்க்க ஆங்கிலம் அவசியம். எனவே பாலர் வகுப்பிலிருந்து திட்டமிட்டு ஆங்கில அறிவை வளர்த்தெடுக்க வேண்டும். முறை யான திட்டமிடலும் வாய்ப்பும் இருக்குமேயானால் சுமாராக 5 வயதிற்கும் 15 வயதிற்கும் இடைப் பட்ட இளமைப் பருவத்தில் மாணவர் ஆங்கிலத்தில் எழுத வாசிப்பதற்கான அறிவைப் பெற்று விடுவர். இதன் பின்பு ஆங்கிலத்தை மேற்கொண்டு தேவைக்கேற்ப பாடவிதானங்களில் இணைக்கலாம். இதன் பின்பு ஆங்கிலம் எல்லோருக் கும் கண்டிப்பானது என்ற வற்புறுத்தல் 15 வயதிற்கு மேற்பட்ட வகுப்புகளுக்கு அவசியமில்லை.

முதலில் போதிய அளவு ஆங்கில ஆசிரியர்களைப் பயிற்று விக்க வேண்டும். சகல கிராமிய மட்டப் பாடசாலைகளுக்கும் பாலர் வகுப்பிலிருந்து உயர் வகுப்பு வரை ஆங்கில ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். அதன் பின்புதான் ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாக்கலாம்.

இன்று க.பொ.த. (உயரதரம்) வகுப்பில் ஆங்கிலத்தைக் கட்டாய பகுதியாக இணைப்பது பரந்தளவில் கிராமியப் பாடசாலையிற் படிப் போரையும், ஏழை மாணவர்க ளையும் கடுமையாகப் பாதிக்கும். இதனால் உயர்குலத்தினரே நன்மை யடைவர். ஏழைமாணவர்கள் இத் திட்டத்தினால் உளவியற் தாக்கத் துக்குள்ளாகி ஏனைய பாடங்களி லும் பின்னடைய நேரிடும். அதாவது ஆங்கில மொழியைக் கற்க வசதி அற்ற சூழலைக் கொண்ட மாணவர்கள் ஆங்கிலத்தைக் கற்க அதிக நேரத்தை ஒதுக்கவேண்டியேற் படும் என்பதால் ஏனைய பாடங்க ளிலும் வீழ்ச்சியடைய நேரிடலாம்.

கொழும்பை மையமாகக் கொண்ட வெளிநாட்டு நிறுவனங் களின் வற்புறுத்தலுக்கு இணங்கவே அரசாங்கம் ஆங்கிலத்தை முதன் மைப்படுத்துகிறது. சிங்கள பௌத் தர்கள் இதனை எதிர்க்க நேரிடும் என்ற அச்சத்தால் பண்பாட்டை முதன்மைப்படுத்துவது போன்ற ஒரு போலி நாடகத்தை இப்பாடத் திட்டத்தில் அரசு சேர்த்துள்ளது. இதுவே பண்பாட்டிற்கு 50 புள்ளி கள் என்னும் நாடகமாகும். ஐ.தே.க. அரசாங்கத்தின் கீழ் பண்பாடு எவ்வளவு சீரழிந்துள்ளதென்பதற்கு ஒரு சிறு உதாரணத்தைக் கூறலாம். அதாவது ஐ.தே.க. யின் திறந்த பொருளாதாரக் கொள்கையைத் தொடர்ந்து உலகிலேயே அதிகளவு சிறுவர்களை விபச்சாரத்தில் அமர்த்தும் நாடு என்ற பட்டம் இலங்கைக்குக் கிடைத்துள்ளது. வெள்ளையர்களுக்கு இலங்கைச் சிறுவர்களின் தசையை விலைகூறி விற்கும் அரசு பண்பாட்டைக் கட்டாய பாடமாக்கும் நடத்தை ஒரு கேலிக்கூத்தே தவிர வேறில்லை. அதிர்ஷ்டவசமாக தமிழீழப் போராட்டத்தின் எழுச்சியால் இக்கலாச்சாரச் சீரழிவு தமிழ் மண்ணில் பரவ முடியவில்லை. உல்லாசப் பிரயாண விடுதிகள், நீச்சற் தடாகங்கள், இரவு நடன மண்டபங்கள், விபச்சார விடுதிகள், குடிபோதைக் கொட்டகைகள், குதிரைப் பந்தயங்கள், சூதாட்டத் திடல்கள் என பண்பாட்டுச் சீரழிவு நீள்கிறது.

இவர்களின் பண்பாடு எமது தமிழ் மண்ணில் பரவமுடியா தென்பது மகிழ்ச்சிதான். ஆயினும் இவர்களின் கல்வித்திட்டம் எம் மைப் பாதிக்கும். அனைவருக்கும் சமவாய்ப்பு, கௌரவமான சமூக வாழ்வு, செழிப்பான சமூக முன் னேற்றம் ஆகிய இவையனைத்தும் ஒருங்கிணைக்கக் கூடிய வகையில் கல்வித் திட்டமானது அமைய வேண்டும். சமவாய்ப்பற்றதும் ஒரு சில பகுதியினருக்கு மட்டுமே சேவை செய்யக்கூடியதுமான எத்தகைய கல்வித்திட்டத்தினையும் அது எத்தகைய கவர்ச்சிகரமானதாக இருந்தாலும் ஏற்கமுடியாது.

நன்றி: சாளரம்

---

**அன்று நான் லெபனானில், பாலஸ்தீனியர்களின் அகதிகள் முகாமில் தங்கியிருந்தேன். அங்கிருந்த ஆண், பெண் அனைவர் முகங்களிலும் 'தாளமுடியாத சோகம், தார்மீக கோபம், கண்ணீர் அனைத்தும் அகற்றமுடியாத பளபளப்போடு தேங்கியிருந்தன. அவர்களில் பலர் பெற்றோர்களை, சொந்தச் சகோதரர்களை, சகோதரிகளை, குழந்தைகளை 'இழந்தவர்கள்'. இவையெல்லாம் ஆழ்ந்த வருத்தத்தை அளிக்கிற, மீட்டுத்தரமுடியாத இழப்புகள்தாம். ஒருவனின் தாய்நாடு பறிபோனதை எந்த இழப்புக்கு நிகராகச் சொல்லமுடியும்! அது சகிக்கமுடியாத ஒன்று. தனித்து விடப்பட்ட ஆவேச உணர்ச்சி அவனுள் நீண்டகாலம் அடங்கியிருக்க முடியாது. ஆனால் ஒருவனின் தாய்நாடு என்பதைப் பூமி, செடி, கொடிகள், பூக்கள், நதிகள் என்றெல்லாம் இலகுவில் சொல்லி விளக்கிவிட முடியாது. அது அவனுக்கு ரத்தமும் சதையும் போல், இதயமும் ஆத்மாவும் போல். "தாய்நாடு என்னும் தொட்டில் பறிபோனபோது"**

**ரசூல் கம் சதோவ்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# குருதி படிந்த கோரப் பற்களுடன் எதிரி உங்கள் வாசலுக்கு வருகின்றான்

வெளியீட்டுப் பிரிவு,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.



## உங்களைத்தான்

# விடுதலைக்காக...
# போராடுவோம் வாருங்கள்!

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



www.tamileelamarchive.com